ଓଡିଆଶି॥,N58
ଶ।K।

# திருக்கோயில்


"என்கடன் பணி செய்து கிடப்பதே"



அர்த்தநாரீசுவரர்

மாலை 4] பிலவ, புரட்டாசி அக்டோபர் 1961 [மணி 1

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



மாயூரம்—கோயிலும், திருக்குளமும்

# பொருளடக்கம்


1. திருக்கோயில்களில் நிர்வாகத்திலுள்ள வர்களுக்கு ஓர் அறிக்கை
2. மாயூரம்
3. நவதிருப்பதி அநுபவம்
4. கோவூர் திருமேனீச்சரம்
5. திருநாவுக்கரசு நாயனர்
6. கல்வெட்டுக்களினல் அறியப்படும் சில உண்மைகள்
7. சிவஞான போதம்
8. செம்பியன் மாதேவி
9. திருச்சுழியல்
10. மலைநாட்டுத் திருப்பதி அநுபவம்
11. நால்வர் நான்மணி மாலை

திரு

# திருக்கோயில்

சென்னை அரசாங்க அறநிலைய ஆட்சித்துறையின் திங்கள் வெளியீடு

✳

நான்காம் ஆண்டு

(1961 அக்டோபர் முதல் 1962 செப்டம்பர் வரை)

✳

பதிப்பித்து வெளியிடுபவர் :

**ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை**

சென்னை.

✳

அச்சிடுவோர் :

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.

# திருக்கோயில் நான்காம் ஆண்டு இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள்

(1961 அக்டோபர் முதல் 1962 செப்டம்பர் வரை)


| | பக்கம் |
|---|---|
| அச்சிறுபாக்கம் | 391 |
| அச்சுதமங்கலம் | 267 |
| அண்ணுமலையார் தீபம் | 79 |
| அறக்கொடை விளக்கு | 570 |
| ஆநந்தஸாகரஸ்தவம் | 230 |
| ஆலயத்தின் தத்துவத்தெளிவு | 259 |
| இளையாத்தகுடி | 292 |
| இளையாத்தங்குடியில் பாவை மாநாடு | 273 |
| உண்மை விளக்கம் | 593 |
| உத்தர மாயூரம் | 523 |
| ஒரத்தூர் | 257 |
| ஒளிக்குஞ்சோரன் | 182 |
| கடப்பேரி | 366 |
| கந்தர்சஷ்டி | 56 |
| கல்வெட்டுக்களால் அறியப்படும் உண்மைகள் | 22 |
| காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் | 505 |
| கீழ்வேளூர் | 97 |
| குத்தாலம் | 465 |
| குமரகிரி | 443 |
| கோவூர் திருமேனிச்சரம் | 14 |
| சமய உணர்வே வாழ்வின் அடிப்படை | 177 |
| சிதம்பரம் அனந்தீஸ்வரன் கோயில் | 559 |
| சிவஞானபோதம் | 25, 74, 127, 196, 225, 301, 357, 363, 450, 489, 589 |
| சிவப்பிரகாசம் | 537 |
| சிவலிங்க விளக்கம் | 101 |
| சிறுபுலியூர் | 51 |
| செம்பியன் மாதேவி | 31 |
| செம்பொனர்கோயில் | 469 |
| சேலம் சுகவனேசுவரர்கோயில் | 435 |
| சைவ சமய அறிமுகம் | 209 |
| தனியூர் | 446 |
| தாரமங்கலம் | 409 |
| திருஅம்பர் | 110 |
| திருஅம்பர்மாகாளம் | 217 |
| திருஅழுந்தூர் | 471 |
| திருஎதிர்கொள்பாடிக் கல்வெட்டு | 473 |
| திருக்கண்ணபுரம் | 149 |
| திருக்குறுக்கைக் கல்வெட்டு | 337 |
| திருக்குறுங்குடி | 71 |
| திருக்கொண்டீச்சரம் | 132 |
| திருக்கோயில் நிர்வாகிகளுக்கு அறிக்கை | 1 |
| திருச்சாய்க்காடு | 518 |
| திருச்சிக்கல் | 65 |
| திருச்சுழியல் | 34 |
| திருச்செங்காட்டங்குடி | 169 |
| திருச்செந்தூர்க் கல்வெட்டு | 240 |
| திருஞானசம்பந்தர் முதற்றிருமுறை | 153, 281, 321, 373, 487, 510, 581 |
| திருத்தலையூர் | 265 |
| திருத்திலதைப்பதி | 54 |
| திருத்துருத்திக் கல்வெட்டு | 276 |
| திருநாவலூர்க் கல்வெட்டு | 129 |
| திருநாவுக்கரசுநாயனர் | 18, 57, 159, 246, 288, 341, 417, 493, 561 |
| திருநீடூர் | 223 |
| திருப்பல்லாண்டு | 145 |
| திருப்புறம்பயக் கல்வெட்டு | 62 |
| திருமருகல் | 166 |
| திருமாகறல் | 553 |
| திருமாணிகுழிக் கோயில் கல்வெட்டு | 531 |
| திருமீயச்சூர் | 108 |
| திருவண்ணுமலைக் கல்வெட்டு | 432 |
| திருவலஞ்சுழிக் கல்வெட்டு | 577 |
| திருவள்ளுவர் | 313 |
| திருவாஞ்சியம் | 191 |
| திருவாவடுதுறை | 457 |
| திருவாவடுதுறைக் கல்வெட்டு | 379 |
| திருவிழா விளக்கம் | 297 |
| திருவிளமர் | 256 |

| | பக்கம் |
|---|---|
| திருவீழிமிழலை | 115 |
| திருவெண்ணெய்நல்லூர்க் கல்வெட்டு | 186 |
| தில்லையம்மன் கோயில் | 586 |
| தெய்வச்சேக்கிழார் | 305, 326 |
| தேரழுந்தூர் | 500 |
| தேவிகாபுரம் | 49 |
| நரசிம்மப்பெருமாள் | 439 |
| நவதிருப்பதியநுபவம் | 9 |
| நன்னிலத்துப்பெருங்கோயில் | 52 |
| நால்வர் நன்னெறி | 319, 401 |
| நால்வர் நான்மணிமாலை உரை | 41, 89, 134 |
| நியமம்கோயில் சிற்பங்கள் | 377 |

| | பக்கம் |
|---|---|
| படைவீடு | 347 |
| பெரும்பேறு | 405 |
| மதுராந்தகம் | 397 |
| மதுரை நிகழ்ச்சிகள் | 81 |
| மலைநாட்டுத்திருப்பதியநுபவம் | 37, 68, 112, 202, 251, 268, 387, 483, 526, 573 |
| மலைவையாவூர் | 425 |
| மாயூரம் | 4 |
| முத்துசுவாமி தீக்ஷதர் | 361 |
| ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை | 121, 205, 233, 294, 331, 369, 427, 476, 512, 565 |

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] பிலவ புரட்டாசி - அக்டோபர் 1961 [மணி 1


# திருக்கோயில்களில் நிர்வாகத்திலுள்ளவர்களுக்கு ஓர் அறிக்கை

திருக்கோயில்களில் உட்புறம், வெளிப்புறம், சுற்றுப்புறங்கள், அங்கு உபயோகத்திலிருக்கும் விளக்குகள், பாத்திரங்கள், சிலைகள், அணிகள், ஆடைகள், தட்டுமுட்டுகள், விபூதி - குங்கும பாத்திரங்கள் முதலியவற்றைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தைப்பற்றியும், ஆலய நிர்வாகத்தின் பிறமுக்கிய கூறுகள் பற்றியும் ஆலய நிர்வாக அதிகாரத்திலுள்ளவர்களுக்கு அவ்வப்போது சுற்றறிக்கைகள் விடுத்தும் கோயில்களைப் பார்வையிடும்போது நேரில் சொல்லி வற்புறுத்தப்பட்டிருந்தும், 1958 டிசம்பர், 1960 அக்டோபர், 1961 ஜனவரி, மே மாதத் 'திருக்கோயில்' இதழ்களிலும் இவைகள் பற்றி விளக்கமான சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தும் சில இடங்களில் கோயில் நிர்வாகத்திலுள்ளவர்கள் இக்காரியங்களில் திருப்தி தரக்கூடிய முறையில் போதிய கவனமும் நடவடிக்கையும் மேற்கொள்ளாமலிருக்கிருர்கள். ஆகையால் மறுமுறையும் எச்சரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இவ்வறிக்கையின்மூலம் மறுபடியும் அவர்களின் முக்கிய கடமைகளையும் பணிகளையும் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

**கோயிலின் உட்புறங்கள்**

திருக்கோயில்களும் அவைகளைச் சார்ந்த இடங்களும் காண்போர் கவனத்தையும் மனத்தையும் ஈர்க்கும்வண்ணம் மிகவும் தூய்மையாகவும் அழகாகவும் இருக்கவேண்டும். வழியே செல்வோர்க்கும், கோயிலினுட்சென்று கடவுளை வழிபட்டுச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் வரத்தக்க முறையில் கோயில்களை நிர்வகிக்கவேண்டும். கடவுட் தன்மையும் தூய்மையும் ஒன்றே என்பது யாவரும் அறிந்ததே. தூய்மையே, கவர்ச்சியையும் தெய்வீக உணர்ச்சியையும் அளிக்கும். கோயிலின் உள்துறை ஊழியர்கள் மற்றும் எல்லா ஊழியர்களும் இதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

கோயிலின் பிரகாரங்கள், சுவர்கள், விமானம், கோபுரம், தூண்கள் முதலியவைகளைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். செடி, கொடி, மரங்கள் வளரவிடக்கூடாது. பிரகாரங்களில் நீர்தேங்காவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். வழிபடுவோர் தாமே தேங்காய் உடைப்பதற்கென்று தனி இடம் அமைக்கலாம். கர்ப்பக் கிரகத்தில் உடைப்பதாயிருந்தால் தேங்காய் உடைப்பதற்

---

எனக்குக் கடவுள் சத்தியமும் அன்புமாவார்; அறநெறியும் நீதி நெறியுமாவார்; அச்சமின்மையின் உருவமும் ஆவார்.

—மகாத்மா காந்தி.

காகத் தனிக்கல் வைத்திருக்கவேண்டும். வாயிற்படியிலோ, சுவரிலோ தேங்காயை உடைக்கவே கூடாது. தேங்காய் மட்டை, குடுமி, ஓடு, நீர் முதலியவைகளுக்குத் தனி இடங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இளநீர் முதலியவற்றைத் தகுந்த பாத்திரங்களில் பிடித்து வைத்துக் கொள்ளும் ஏற்பாடு சிறந்தது. குடுமி, மட்டை முதலியவற்றை அவ்வப்போது அகற்ற ஏற்பாடும் செய்யப்பெற வேண்டும். கண்ட இடங்களில் கற்பூரங்களைக் கொளுத்த அனுமதிக்கக் கூடாது. அதற்கென்று தனிக்கல் சட்டி—அகண்டம் ஏற்பாடு செய்யவேண்டும். அபிஷேகநீர், கோயிலுக்குள் தேங்காதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். பிரசாதம் முதலியவை உண்டபின் தூண், சுவர் முதலிய இடங்களில் கைகளைத் துடைப்பதற்கு எவரையும் அனுமதிக்கக் கூடாது. விளக்குப் போடுவோர் எண்ணெய் முதலியவைகளைத் திரை, தூண், சுவர்களில் துடைக்க அனுமதிக்கக் கூடாது. குப்பை, காகிதம் முதலியவைகளைத் திறந்த வெளியிலும் சன்னல்களிலும் எறியும் பழக்கத்தைத் தடுக்கவேண்டும். பிரகாரங்களில் கடப்பைக்கற்கள் அமைத்து ஒழுங்கு செய்யவேண்டும்.

### கோயிலின் வெளிப்புறங்கள்

"அகத்தின் அழகு முகத்தில்" என்பதைப்போல், கோயிலின் முன்தோற்றம் கோயிலின் உள்ளிருக்கும் புனிதத்தன்மையை உணர்த்துவதாக இருக்கவேண்டும். கோயிலின் அழகையும் புனிதத் தன்மையையும் கெடுக்கக்கூடிய விதத்திலிருக்கும் கடைகள், செடிகொடி, முள் புதர்கள், மங்கிய அல்லது அழகற்ற வண்ணப்பூச்சுகள், நீர்த்தேக்கங்கள் முதலியவைகளை அகற்றவேண்டும். கோயில் வாயிற்படிகளில் பிச்சைக்காரர்களை அனுமதிக்கக் கூடாது.

### இடைஞ்சல் தவிர்த்தல்

பிணி கொண்டவர்களைப் பணிசெய்ய அனுமதிக்கக் கூடாது. முன்மண்டபம், கோபுரவாயில், பிரகாரங்கள் முதலிய இடங்களில் ஆலய ஒழுக்கத்திற்கும் புனிதத்தன்மைக்கும் மாறுபட்ட, கேவலத்தை உண்டாக்கக்கூடிய, மனதைப்புண்படுத்தக்கூடிய பண்பற்ற செய்கைகளைத் தடுக்க வேண்டும். கோயில்களுக்கு வருபவர்களுக்கு இடர்ப்பாடு உண்டாகும் விதத்தில் தூங்குவது, சீட்டு விளையாடுதல், புகை பிடித்தல் போன்றவைகளை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது. இது சம்பந்தமாகக் காவல்துறையினரின் உதவியை நாடலாம்.

### விளக்குகள்

கோயிலுக்கு வரும் வழியிலும் பிரகாரங்களிலும் போதுமான விளக்குகள் போடப்பட்டிருக்கவேண்டும். நிதி நிலைமைக்கேற்ப மற்ற மின் பேர்ஒளி விளக்குள் சரவிளக்குகள் தேவையான இடங்களில் அமைக்கலாம்; ஏற்கனவே அறிவித்தபடி எண்ணெய் விளக்குகள் வைக்க வேண்டிய இடங்களில் எண்ணெய் விளக்குகள் வைக்கவேண்டும். அவைகளை அடிக்கடி தூய்மைப்படுத்தவேண்டும். கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் முதலியவைகளில் சர விளக்குகள் அமைக்கும்போது அவைகளில் உள்ள எண்ணெய் கீழேவிழாதபடி செப்பு அல்லது பித்தளைத்தகடுகள் அமைக்கவேண்டும்; தலைக்குமேல் உச்சி பாகத்தில் உள்ள விளக்குகளுக்கு அடி பாகத்தில் தகடுகள் அமைப்பது அவசியமாகும். அவைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எல்லாவற்றிலும் மேலானதாகும்.

### பாத்திரங்கள்

தீர்த்த பாத்திரங்கள், தூபதீப கலசங்கள், பிரசாதம் முதலியவைகள் வைக்கப்பெறும் பாத்திரங்கள் முதலியவைகளை மிகத் தூய்மையாகவும் கவர்ச்சியாகவும் வைத்துக்கொள்ளவேண்டும். நைவேத்திய பாத்திரங்கள் தூய்மையாகவும் மூடியுடனும் இருக்கவேண்டும். அழுக்குத் துணி

---

நாம் எல்லோரும் உணரக்கூடியதும், அதே சமயம் அறிய முடியாததும், வார்த்தைகளால் விவரிக்க முடியாததுமான ஒன்று இருக்கிறதே அதுதான் கடவுள்.

—மகாத்மா காந்தி.

களால் மூடும் பழக்கத்தை அறவே ஒழிக்க வேண்டும்.

### சிலைகள்

மூலமூர்த்திகள், உற்சவமூர்த்திகள், துவாரபாலகர்கள், நந்தி முதலிய சிலைகளுக்குப் புளிக்காப்பு மாக்காப்பு இட்டு அடிக்கடி—வாரத்திற்கு ஒருமுறையாவது—தூய்மைப்படுத்தி ஒளிவிடும் வண்ணம் வைத்துக்கொள்ளவேண்டும்.

### சிலைகளுக்கு ஆடை அணிவித்தல்

சில இடங்களில் சிலைகளுக்கு அழுக்கு ஆடைகள் அணிவிக்கப்பட்டிருப்பது ஆணையரின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. சிலைகளுக்கு அணிவிக்கும் ஆடைகளை நாள்தோறும் தோய்த்து உலர்த்தித் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும்.

### அமைதி

ஆலயங்களில் அமைதி அவசியமாகும். இரைச்சல் இருக்கக்கூடாது. குறிப்பாக பூசை அர்ச்சனை காலங்களில் மிக்க அமைதியாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக கோயிற்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த முறையைக் கடைப்பிடித்து மற்றோர்க்கு வழிகாட்டிகளாக விளங்கவேண்டும். அமைதியே ஆன்மாவை ஆண்டவன்பால் செலுத்த வல்லது.

### திருநீறு—குங்கும பாத்திரங்கள்

நல்ல திருநீறு, குங்குமம், சந்தனம், பன்னீர், மலர், வில்வம், துளசி இவைகளைக் கோயிலிலேயே முறைப்படி தயாரித்து, அர்ச்சனை, அபிஷேகம் முதலியவைகளுக்குக் கிடைக்கும்படி செய்யலாம். வழிபாட்டிற்கு வருபவர்கள் பயன்படுத்துவதற்காக முக்கிய இடங்களில், மண்டபங்களில் மடல், கிண்ணம் அல்லது தட்டு போன்றவைகளில் திருநீறு, குங்குமம் தனித்தனியே வைத்திருக்கவேண்டும். வாங்கிய திருநீறு, குங்குமம் மிகுதியிருந்தால் அவற்றையும் அவைகளில் போடப் பயன்படும்.

### தகவல் அறிவித்தல்

எதிர்பாராதவிதமாக ஏற்படும் அசம்பாவிதங்கள்—விபத்துக்கள், தீப்பிடித்தல், திருட்டுப்போதல், சுவர் முதலியன விழுதல், வல்லடிச்செயல்கள் — முதலியவைகளைப்பற்றி இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் ஆணையருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்களுக்கும் தெரிவிக்கவேண்டும். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அவற்றின் முடிவுகளையும் தெரிவிக்கவேண்டும். தவறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

### அர்ச்சகர்கள் கவனிக்கவேண்டியவை

சிவாலயங்களில் பூஜாகாலங்களில் அர்ச்சகர்கள் திருநீறு இட்டு, உருத்திராக்ஷ மாலையும் அணியவேண்டும். தவறுபவர்கள் மீது நிர்வாக அதிகாரிகள் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மற்றும் ஆச்சாரிய அபிஷேகம் பெறுதவர்கள் திருமஞ்சனம் செய்வதில் ஒருபோதும் ஈடுபடக்கூடாது.

முன்னம் குறிப்பிட்டபடி 'திருக்கோயிலி'ல் வெளியிட்டுள்ள விளக்கமான சுற்றறிக்கைகளை மனதில் கொண்டு ஆலய நிர்வாகத்திலுள்ளவர்கள் பணிபுரிய வேண்டுமென்பதை இதனுல் மீண்டும் வற்புறுத்தப்பெறுகிறது.

இந்த அறிக்கையை கோயில் ஊழியர்கள் அனைவருக்கும் படித்துக்காட்டி, அதில் அவர்கள் கையொப்பமும் பெறுதல் அவசியம்.

[அறிக்கை எண். 35163-61 ஏ-2 நாள் 20—9—51.]

**ஆணையர்.**

---

தன்னிடம் ஆண்டவன் இருக்கிருரா என்பதைச் சோதித்துப் பார்க்க விரும்பும் ஒருவர், ஆழ்ந்த நம்பிக்கையின்மூலந்தான் அவ்வாறு செய்ய முடியும்.

**—மகாத்மா காந்தி.**


# மாயூரம்

## (திருமயிலாடுதுறை)

ஊனத் திருள்நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனைத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே

—திருஞானசம்பந்தர்.

"ஆயிரமானாலும் மாயூரம் ஆகாது" என்ற ஒரு பழமொழி யுண்டு. எவ்வளவு இருந்தபோதிலும் மாயூரத்தைப் போன்ற வசதியான நல்ல ஊர் வேறு இல்லை என்பது அதன்பொருள். இத்தலம் சோழநாட்டுப் பாடல் பெற்ற பதிகளில் ஒன்று. காவிரியாற்றின் தென்கரையிலிருக்கிறது. மாயவரம்சந்திப்பு இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஒன்றரைக்கல் தொலைவு கிழக்கேயும், மாயவரம் டவுன் என்ற இருப்புப்பாதை நிலையத்தின் வடக்கே கால் கல் தொலைவிலும் கோயில் இருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயவரம் பகுதிக்குத் தலைமை இடமாக அமைந்துள்ளது. மாயூரம் சந்திப்பு நிலையத்திலிருந்து நகரத்துக்கு மோட்டார் பஸ்கள் ஓடுகின்றன.



கங்காவிசர்ஜனமூர்த்தி

பொதுவாக இவ்வூரை மக்கள் மாயவரம் என்றே வழங்கி வருகின்றனர். இப்பெயர் எப்போது ஏற்பட்டதென்று தெரியவில்லை. பார்வதி தேவியார் மயில் உருவம் எடுத்து இத்தலத்தில் இறைவனைப் பூசித்தமையால் மயிலாடுதுறை என்ற பெயர் ஏற்பட்டதாகத் தெரிகிறது. மயிலுக்கு வடமொழியில் மயூரம் என்பர். அதனால் ஊருக்கு மாயூரம், என்று பெயர் உண்டாயிற்று. அதையே மக்கள் மாயவரம் என்று வழங்கலாயினர். அரசாங்கத்தார் இப்போது மாயூரம் என்ற பெயரைப் பயன்படுத்துகின்றனர். கௌரி மாயூரம் என்று தலபுராணம் கூறுகிறது. மயிலாபுரி என்ற பெயரும் உண்டு.

திருக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. கிழக்கு வாயிலை ஒரு கோபுரம் அணி செய்கிறது. ஒன்பது மாடங்களுடையது. வெகு தொலைவிற்குச் சுற்றிலும் தெரியும். மற்ற மூன்று பக்கங்களிலும் வாயில்கள் உள்ளன. கோயிலுக்குள் மூன்று பிரகாரங்கள் இருக்கின்றன. கோபுர வாயிலை நுழைந்ததும் தென்புறம் திருக்குளம் இருக்கிறது. வடக்கு வெளிப்பிரகாரத்தில் கிழக்கு நோக்கிய கோயிலில் சிவலிங்கமூர்த்தி எழுந்தருளியுள்ளார். அதில் தாமிரத்தினாலான மயில் உருவம் ஒன்றும் இருக்கிறது. ஆதிமாயூர்நாதர் கோயில் இது. தலபுராணம் சம்பந்தமுடையது.

டகம் முதலியவற்றிலும் இத்தலத்தைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

கந்தபுராணத்தில், முருகன் திருவிடைக் கழிக்குப் போகும் வழியில் இத்தலத்தை வழிபட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது. அருணகிரிநாதர் மூன்று திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியிருக்கின்றனர்.

எழில்வளை மிக்கத் தவழ்ந்து லாவிய
பொனிநதி தெற்கிற் றிகழ்ந்து மேவிய
இணையிலி ரத்தினச் சிகண்டி யூருறை பெருமாளே

என்ற பாடலில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள சிகண்டியூர் என்று கூறுகிருர். சிகண்டி என்ருல் மயில். மற்ரெரு பாடலில் "வச்சிர கரதல வானோர்கள் பதி நிகர் பொற்புறு கரிபரி தேர் வீதி யழகியல் மட்டுறு கவுரிநன் மாயூர மேவிய பெருமாளே" என்கிருர். திருவிளையாடற் புராணத்தில் "மதிநுதல் இமயச் செல்வி மஞ்ஞையாய் வழிபட்டேத்து மிது துலாப் பொன்னித்தானம்" என்று கூறப்பட்டிருக்கிறது, (மஞ்ஞை—மயில்)

இன்னும், நல்லத்துக்குடியென்ற ஊரினரான கிருஷ்ண அய்யர் என்பவர் பாடிய அபயாம்பிகை சதகம், திருமயிலை வெண்பா அந்தாதி இவைகளும், வி. முத்துசுவாமி அய்யர் எம்.ஏ. எல்.டி. அவர்கள் இயற்றிய திருமயிலைத்திரிபந்தாதியும் இத்தலத்தைப் பற்றியனவே.

ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு முன்னிருந்த பொன் விளைந்த களத்தூர் ஆதியப்ப நாவலர் என்பவர் இயற்றிய மாயூரப் புராணம் ஒன்று உண்டென்பர். ஆனுல் அது கிடைக்கவில்லை. மாயூரத்தை இருப்பிடமாகக் கொண்டிருந்த மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாயூரத்தல புராணம் ஒன்று பாடியிருக்கின்ருர்கள். 64 படலங்களையும், 1894 பாடல்களையும் உடையது; சொற்சுவை, பொருட்சுவைமிக்கு விளங்கும் இலக்கியக் கருவூலம். இத்தலத்தின் பெருமை, தீர்த்தங்களின் மகிமை, வழிபட்டுப் பேறுபெற்ரோர், இத்தலத்திலுள்ள மற்ற கோயில்கள் முதலியவற்றைப் பற்றி இந்நூலில் விரிவாகக் காணலாம். இக்கோயில் திருவாவடுதுறை ஆதீன ஆட்சியில் இருந்து வருகிறது. அண்மையில் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது மாயூரம் தலவரலாற்றுச் சுருக்கம் என்ற உரைநடை நூலை ஆதீனத்தார் வெளியிட்டிருக்கின்றனர்.

கோயில் பிற்காலச் சோழர்காலத்தில் கட்டப்பெற்றது. ஐந்து கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இராஜாதிராஜன் II, இராஜராஜன் III, ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தவை. அவை கோயிலுக்குப் பொருளும், நிலமும் வழங்கியதைக் குறிக்கின்றன. இறைவனை மயிலாடுதுறையுடையார் என்றும், தேவியை, திருப்பள்ளியறை நாச்சியார் என்றும் அவை கூறுகின்றன.

இவ்வூரில் ஐயாறப்பர், பாலக்கரை விசுவநாதர், வள்ளலார், படித்துறை விசுவநாதர், கடைத்தெரு விசுவநாதர் முதலிய கோயில்களும் இருக்கின்றன. ஐயாறப்பர் கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன.

அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே

—திருநாவுக்கரசர்.

எங்கும் நிறைந்த அருள்மணியே
ஏகமணியே ஔிர்மணியே
இறையோ னிடத்தில் நடனமிடும்
இமைய மணியே நவமணியே
கங்குல் பகலும் கண்டவெளிக்
கலைநான் குடைய திருமணியே
கண்ணின் மணியே பொன்மணியே
கமலா சனத்தில் வளர்மணியே
தங்கும் அடியார் இதயமதில்
தழைத்த மணியே தவமணியே
தரணிக் கொளியாய் இரவுபகல்
தானே வளர்ந்த தளிர்மணியே
மங்குங் கருத்தை நிலைநிறுத்தி
வதன வெளியில் படர்மணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே

—அபயாம்பிகை சதகம்.

---

வார்த்தையால் விவரிக்க முடியாத ஏதோ ஒரு அதிசய சக்தி, உலகில் உள்ள ஒவ்வொரு பொருளிலும் வியாபித்து நிற்கிறது. நான் அதைக் காணவிட்டாலும் உணருகிறேன்.

—மகாத்மா காந்தி.

# செய்திகள்

தென்கரை :—மூலநாதசுவாமி கோயிலில் கும்பாபிஷேகம் 3—9—51-ல் நடைபெற்றது.

திருநெல்வேலி :—சுவாமி தொண்டர்கள் நயினூர், கோமதியம்பாள் கோயிலில் 17-8-61-ல் "அமுதபிள்ளை பால் குடிக்கும்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நடைபெற்றது. பிரதி ஞாயிறுதோறும் கூட்டுவழிபாடு நடைபெற்று வருகிறது. 22—8—61-ல் கருவூர் சித்தர்க்குக் காட்சி கொடுக்கும் திருவிழா நடைபெற்றது.

தென்கரை :—நவநீதகிருஷ்ணசுவாமி கோயிலில் ஜெயந்திவிழா 3—9—61-ல் ஆரம்பிக்கப்பட்டு 12—9—61 வரை நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி:—தாயுமானசுவாமி மலைக்கோயிலில் நூற்றுக்கால் மண்டபத்தில் 6—9—61 முதல் 11—9—61 வரை திருமுறைத்திருவிழா நடைபெற்றது. 5-ஆம் நாள் திருவிழாவன்று (10—9—61-ல்) சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல், அவர்கள் காலை திருமுறைச் சொற்பொழிவு விழாவிற்கும், இரவு 8 மணிக்கு திருமுறை இன்னிசையரங்கிற்கும் தலைமை வகித்தார்கள்.

கரூர் :—கல்யாணவெங்கட்ரமணசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 6-9-61 முதல் 20—9—61 வரை நடைபெற்றது.

திருவாப்பாடி :—பாலுகந்தநாதசுவாமி கோயிலில் மகாகும்பாபிஷேகம் 6-9-61ல் நடைபெற்றது.

திருச்செந்தூர் :—சிவன்கோயிலில் கடந்த ஓராண்டு காலமாக படனம் செய்யப்பட்டு; விரிவுரையாற்றப்பட்டும் வந்த கந்தபுராண படனம் 8—9—61-ல் பூர்த்திபெற்றது. அன்றைய நிறைவு விழாவில் திரு. டி. கே. அறம்வளர்த்தநாதபிள்ளை, பி. ஏ., அவர்கள் தலைமைவகித்தார்கள். படனப்புலவருக்கு வெகுமதியும் வழங்கப்பட்டது. திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற கந்தபுராண படனநிதியிலிருந்து நடைபெற்றது.

சென்னை-மயிலாப்பூர் : திருவள்ளுவர் கோயில் திருப்பணி துவக்கு பூசையை 14—9—61 அன்று காலை அறநிலையத்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள், பி.ஏ பி.எல்., நிகழ்த்திவைத்தார்கள். திருவாளர்கள் ச. சச்சிதானந்தம்பிள்ளை, திருவாசகமணி-கே. எம். பாலசுப்பிரமணியம், கொத்தமங்கலம் சுப்பு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். 16-9-61 அன்று மாலை அறநிலையத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் திருப்பணி கால்கோள் விழாவைத் துவக்கி வைத்து அரியஉரை நிகழ்த்தினர்கள். அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் திருப்பணிபற்றி விளக்கவுரை ஆற்றினர்கள். பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் திருவள்ளுவரின் மேன்மையையும் திருக்குறளின் சிறப்புகளையும்பற்றி சொற்பொழிவாற்றினர்கள். திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களும் உரை நிகழ்த்தினர்கள். திருப்பணிக்காக அன்பர்கள் நன்கொடை அளித்தார்கள். (விவரம் வேறிடத்தில் காண்க).

க்ஷேத்திரபாலபுரம் :—சுந்தரேசுவர சுவாமி கோயிலில் சுந்தரேசுவர சுவாமிக்கும் மற்றும் பரிவாரதேவதைகளுக்கும் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 14—9—61-ல் நடைபெற்றது.

# நவதிருப்பதி அநுபவம்

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L]

**பத்தாம் பாட்டு**

நினைக்கிலேன் தெய்வங்காள் நெடுங்கண்
இளமான் இனிப்போய்
அனைத்துலகும் உடைய
அரவிந்த லோசனனை
தினைத்தனையும் விடாள்
அவன்சேர் திருக்கோளூர்க்கே
மனைக்கு வான்பழியும் நினையாள்
செல்ல வைத்தனளே.

*தெய்வங்களே! இவள் செயலை நினைக்க முடியவில்லை. நீண்ட கண்களை உடையவளாய் இளமையான மான்போன்றவள் பின்னும்போய் எல்லா உலகங்களையும் உடையவனை தாமரைக் கண்ணனைக் கொஞ்சமும் விடாதவளாய் அவன் சேர்ந்துள்ள திருக்கோளூருக்கே போவது என்று மனம் வைத்தாள். அதனால் தன் குடும்பத்துக்கு நேரும் பெரிய பழியையும் நினைத்தாளில்லை.*

நினைக்கிலேன்

*இவளுடைய வரம்பு மீறிய செயல்களை நினைத்து அறுதியிட முடியாதவளாயிருக்கிறேன். கடலைக்கரை காண முடியாமை போலே யிருந்தது இவள் வரம்புமீறிச் செய்த செயல்களை அறுதியிடுவது. அதை முற்ற எண்ணிப்பார்க்கவும் இயலாதவளானேன்.*

தெய்வங்காள்

*தெய்வங்களே! தன்னைமறந்து கையற்ற நிலையில் வந்த வாசகம் இது. தன்னினைவோடே பேசினால் தாய் இவ்வார்த்தை கூறாள், பிற தெய்வங்களை விளிக்கும் குடி வந்தவளாதலால். என்ன செய்வது என்று தெரியாது தவிக்கும் நிலையிலே தன் நிலைமையையும் மறந்து கூறுவது அவளது மனமழிந்த நிலையைக்காட்டி நின்றது.*

நெடுங்கண்

*நீண்ட கண்களை உடையவள். 'மாதிரமளக்கின் றகண்ணாள்', "கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்" என்றார் கம்பர். அவனையும் அவன் விபூதிகளையும் தன் கடைக்கண்ணோரத்திலே ஒடுக்கும் பெரிய கண்களை உடையவள்.*

இளமான்

*இளமையான மான். மான்கன்று பருவத்தின் மிறுக்காலே செய்வதன் விளைவு என்ன என்று ஓர்ந்து செயல்படாது பயம் கெட்டு செய்த செயல். இளம் கன்று பயமறியாதன்றே.*

இனி

*இப்படி அவனும் தன்னை மறந்து நோக்கி நிற்கும்படி கண்ணழகு படைத்தவளாயிருந்தும்.*

போய்

*தான் அவனிடம் ஏறப்போய். என்ன மாறுபட்டமான செயல். அவன் வந்து துவண்டு நிற்கும்படி கண்பெற்றவள், தன் நிலை மாறுடி அவனிருந்த இடம் தேடிப்போவதே!*

அனைத்துலகும் உடைய அரவிந்தலோசனனை

*மண்ணும் விண்ணும் உடைய தாமரைக் கண்ணன். தன் கமலக்கண்ணழகு கொண்டே உபய விபூதியையும் தனக்குடைமையாக்கிக் கொண்டவன். அவன் கண்களின் சக்தி அம்மட்டுத்தானே! இவளோ அவ் விபூதியின் உடையவனையே தன்னெதிரே ஏங்கி நிற்கும்படி செய்யவல்ல கண்படைத்தவளாயிற்றே. அப்படியிருந்தும் அவனைத் தேடிப்போனாளே!*

தினைத்தனையும் விடாள்

*கணமும் பிரியப்பொறுதவளாய் அவன் 'நெகிழ்த்தணைக்கவும் பொறுதவள்', என்று ஈடு. "புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக்கொண்டது பயிர்ப்பு" என்றார் வள்ளுவர். ஓரணையிலே அணைத்துக் கிடந்தவன் உறக்க மயக்கிலே கைநெகிழ்த்தானாக அவன் தன்னைப் பிரிந்தான் என்று ஒரு கணம் அஞ்சினாள். உடலில் பசலைபடர்ந்து மூடிற்று. அதுபோலல்லவா இவள் நிலையும்.*

அவன்சேர் திருக்கோளூர்க்கே

அவன் விரும்பிச் சேர்ந்த தலமான திருக்கோளூருக்கே. பாதி ஏறச்சென்று அவனை எதிரே கண்டு கூடினுள் என்றுகூட இல்லை. அவன் திருக்கோளூரளவும்.

செல்ல வைத்தனள்

போவது என்று மனம் வைத்தாள். அங்கேயே போய்விடுவது என்று துணிந்தாள். தன் அழகை நோக்கினல் அவன் இவளிருக்குமிடம் தேடி ஓடி வரவேண்டும். அவள் இளமையை நினைத்தால் அவ்வளவு தூரம் செல்வதிலுள்ள கஷ்டத்தை நோக்கித் தவிர வேண்டும். இப்படியிருந்தும் அங்கு தான் போகவேண்டும் என்று துணிந்தாள். பிறர் கூறி மீட்க முடியாதபடி அத்துணிவிலே ஊன்றினுள்.

மனைக்கு வான்பழியும் நினையாள்

குடிக்குவரும் பழியையும் மதியாதவளானுள். 'கொல்லை என்பர் கொலோ குணம் மிக்கனள் என்பர்கொலோ' என்று பிறர் தன்னைப்பற்றி என்ன சொல்வார்களோ என்று சிந்தித்தாளில்லை. சிந்தித்திருந்தால் போயிருப்பாளா. போகட்டும் அச்சிந்தனை எழவில்லை என்று கொள்வோம். "சேரிதான் பல்பழி தூவியிரைத்ததே" அப்போதாவது தன்னை ஊரார் பழிக்கின்றனர் என்று உணர்ந்து பின் வாங்கினுளா. அந்த அலரைத் தன் உட்கனலுக்கு ஊற்றப்பெற்ற நெய்யாகக் கொண்டு முன்னிலும் அதிக மிறுக்கோடல்லவா போனுள். இவையிரண்டும் அவளைப் பற்றியதாகையாலே பொறுத்தாள், மதிக்கவில்லை என்று கொண்டாலும் தான் இவ்விதம் போவது தன் குடிக்கே பெரும் பழி என்பதை உணர்ந்தாவது போதலைத் தவிர வேண்டாமா? தன் முயற்சி என்பது இக்குடியின் பாங்கல்லவே. பூனைக்குட்டி குரங்காகலாமா. அவன் வந்து பற்றப்பட வேண்டியவள்தான் என்று குடிப்பாங்கோடு ஒட்டியிருத்தலின்றி அவனிருக்குமிடம் தேடிப் போவேன் என்று போனுளே! இவள் செய்கையின் தன்மையை நினைக்க நினைக்க அவர் வரம்பழிவின் எல்லை விரிந்துகொண்டு போகிறதே ஒழிய அதை அறுதியிட முடியவில்லையே என்று அங்கலாய்க்கிருள் தாய். "செல்ல வைத்தனளே' என்பதற்கு தான் அங்கே போய் புக்குமீளாதபடி சென்றதனுல் நம்மையும் அங்கே போகும்படி செய்தவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

## பதினென்றும் பாட்டு

வைத்தமா நிதியாம்
மதுசூதனையேஅலற்றி
கொத்தலர் பொழில்சூழ் குருகூர்ச்
சடகோபன் சொன்ன
பத்துநூற்றுள் இப்பத்து
அவன்சேர் திருக்கோளூர்க்கே
சித்தம் வைத்துரைப்பார் திகழ்
பொன்னுல காள்வரே.

சேமித்துவைத்த பெருஞ் செல்வமாகியவனும், மது என்னும் அசுரனை அழித்தவனுமான மதுசூதனனைக் கூவி அரற்றி கொத்துக்களாக மலரும் சோலைகள் சூழ்ந்த திருக்குருகூரில் அவதரித்த சடரைக் கோபித்து விரட்டிய ஆழ்வார் கூறிய பத்து நூருகிய ஆயிரம் பாக்களில் இந்தப் பத்துப்பாடலையும் அம்மதுசூதனன் உறையும் திருக்கோளூரிலே மனம் வைத்துச் சொல்பவர் ஒளிமயமான அழகிய பரமபதத்தை தாம் விரும்பியபடி ஆள்வார்கள்.

வைத்த மாநிதியாம்

தான் சேமித்துவைத்த பெரும் செல்வமானவன். இவள் தனி வழி போகைக்கும் தாயரை விடுகைக்கும் அடிப்படை. இச்செல்வம் இருக்கவேயன்ருே அவள் பிறரையும் பிறவற்றையும் விட்டுப்போனுள். இதுதான் எய்ப்பினில் வைப்பாயிற்றே. எனவேதான் இடருற்ற காலையில் பிறரும் பிறவும் உதவ வகை தெரியாது போகவே தன் எய்ப்பினில் வைப்பை நாடினுள். சேமித்து வைத்தது எய்ப்பினில் உதவ என்றன்ருே. அது இருக்க எடுத்து அநுபவியாதே இடர் பொறுத்து அலைவாருண்டோ. அதுதானும் மற்றைச் செல்வம் போன்றதொன்ருே. "தளர்ந்தார் தாவளமாய், உண்டு என்ன உயிர் நிற்கும் படியாய், உடையவன் காலிலே எல்லோரும் விழும்படியாய், உடையவனுக்கு அறவிட்டு ஜீவித்தான் என்று ஏசாதபடியுமாய், அவன் தனக்குப் பெருமதிப்பைக் கொடுப்பதுமாய், உடையவனுக்கு ஒன்றும் கரைய வேண்டாதபடியாய் எல்லாம் தன்னைக்கொண்டே கொள்ளலாய், எல்லா ரஸங்களும் போகங்களும் தன்னைக்கொண்டே கொள்ளலாய், இத்தகைய தன்மையுடைத்தாதல்பற்றி நிதி என்கிறது. அதிலும் இது மாநிதி. எல்லாம்

*தன்னைக்கொண்டே கொள்ளா நின்ருலும் தான் குறைவற்றிருக்கை" என்று ஈடு. "கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல் லாம் தரும் கோதிலன் வள்ளல்" என்றும் இவ்வாழ்வாரே கூறினர். அத்தகைய பெருஞ் செல்வமானவனும்.*

மதுசூதனை

*மது என்னும் அசுரனை அழித்தவனு மான இறைவனை. செல்வமான தன்னைத் துய்க்க உண்மையிலே எண்ணுவார்க்கு, அவர் அவ்விதம் அனுபவிப்பதற்குத் தடை யாயிருப்பவற்றையும் இருப்பவரையும் விலக் கித் தன்னைத் துய்க்கத்தானே தன்னைத் தரு மவனை.*

மதுசூதனையே

*அப்படித் தடை நீக்கிக் காத்து ஊட்டு மவனையே.*

அரற்றி

*கூவி அழைத்து. என்றும் எப்போதும் வேறு ஒன்றைக் கூவலின்றி அவன் பெய ரையே கூவிக் கூவி.*

கொத்துஅலர் பொழில்சூழ்

*கொத்துக் கொத்தாக மலரும் சோலைகள் சூழ்ந்த தனித்து மலர்கை யின்றி என்றுமே கொத்தாக அலரும் மலர்களை உடைய சோலை களால் சூழப்பட்ட இந்நில மிதியாலே பகவத் பக்தர்கள் ஒன்றிரண்டின்றிக் குழாங்களாய்த் திரளும் அடியார் நிறைவு பெற்றகுருகூர். அந்நகர் மட்டுமின்றிச் சுற்றிலும் அப்படியே அடியார் குழாங்கள் நிறைந்த ஸ்தலங்கள் சூழ்ந்த*

குருகூர்ச் சடகோபன்

*திருக்குருகூரில் அவதரித்து சடரைக் கோபித்த. "நாட்டில் பிறந்து சடரை ஓட்டி" என்றல்லவா சூத்திரம். தன் சடர் மட்டுமின்றி நாட்டினின்றே சடரை ஓட்டிய ஆழ்வார்.*

சொன்ன

*திருவாய் மலர்ந்தருளிய*

பத்து நூற்றுள்

*ஆயிரம் பாக்களில்*

இப்பத்து

*இப் பத்துபாட்டையும். பாற்கடலின் அமுதம்போன்று அவ்வாயிரம் பாக்களில் இப் பத்துப் பாசுரங்களையும்*

அவன் சேர் திருக்கோளூர்க்கே

*அப்பெருஞ் செல்வம் உறையும் திருக் கோளூர்க்கே. எய்ப்பினில் வைப்பினில் வைப்பு இருத்தலாலேயே திருக்கோளூர் என்று பெயர்பெற்ற அத்தலத்திற்கே*

சித்தம் வைத்து

*மனத்தை ஒன்ற வைத்து. வேறு நினைப் பின்றி, பலனில் இச்சையின்றி, ஒருவழிப் பட்ட உணர்வோடு*

உரைப்பார்

*சொல்லுபவர்கள். பாடக்கூட வேண் டாம். வெறுமனே வசனமாகச் சொன்னாலும் போதும் அப்படி மனம் ஒன்றி உரைப்பவர்*

திகழ் பொன்னுலகு

*"ஒளிவிசும்பு" என்று பெயர் பெற்றதும் எப்பொழுதும் ஒளிமயமாய் விளங்குவது மான பரமபதத்தை*

ஆள்வரே

*தன்னுடையதுபோலவே ஆளப் பெறு வர்.*

*ஏகாரம்:—தேற்றம். இது திண்ணம் என்றபடி.*

*ஒருத்தி கூப்பிட ஒருத்தி தனிபோகை யன்றிக்கே என்றும் எப்போதும் துய்க்கக் கூடிய நிலத்திலே புகப்பெறுவர். தனிவழி போக வேண்டாதே அர்ச்சிராதிகணம் சேவிக்க அழகுருக்கொண்ட தேசத்தே புகப் பெறுவர் என்று ஈடுகூறும்.*

*இனி இப்பதிகம் இறைவனுக்கும் ஆன் மாவுக்கும் இடையே உள்ளதாக முன்கூறப் பெற்ற ஒன்பதுவிதத் தொடர்பில் தாரக தார்ய (சார்பும் சார்வதும்) என்ற தொடர் பைக் காட்டுமென்றும், இப்பதிகத்தின் பருப் பொருள் குலசேகரரின் "தொக்கிலங்கியா றெல்லாம்" என்ற பாசுரக் கருத்தோடொக் கும் என்றும் சில பெரியோர் கூறுவர். இக் கருத்துக்கு 'உண்ணும் சோறு' என்ற பாசு ரத்தையும் 'நினைக்கிலேன்' என்ற பாசுரத் தையும் ஆதாரமாகக் கொள்வர். தனக்கு*

உயிரூட்டுவதாயும், தன்னைப்பேணித் தன் உயர்நிலையை வளர்ப்பதாயும், தான் துய்க்கப் படும் பொருளாயும் உள்ளவை எல்லாம் கண்ணன் என்று கூறினமையின் அவனே தாரகப் பொருள் என்பது காட்டப்பெற்றது. கண்ணனே எனக்குச் சார்வு என்பது அறுதி யிடப்பட்டது. அந்தச் சார்வு, பற்றுக்கோடு கிட்டாவிடில் இவ்வான்மா சார்பு பெறுமல் தவிக்குமென்பதும், அந்தப் பற்றுக்கோட் டைப் பெற்ருலொழிய ஆற்ருமல் அக் கோடிருக்கும் இடம் தேடிப்படர்ந்து அதைப் பற்றி மேல் என்றும் விடாமல் பற்றிப் பட ரும் திடசித்தம் கொண்டு படர்ந்தது. மற் றைப் பற்றுக் கோடுகள்போல் வந்த தாயர் முதலியவர்களையும், தனக்குத் துய்க்கும் பொருள்களாய்த் தோன்றிய பந்துதூதை பூம்புட்டில்கள், பூவை பைங்கிளிகள் இவற்றையெல்லாம் உதறியது. அவனே நம் எய்ப்பினில் வைப்பு என்பதை உணர்ந்தது. இங்கே இப்பதிகத் தோற்றுவாயைக் காண் போமானல் இவ்வுண்மை விளங்கும். இதற்கு முன்னைய பதிகம் 'மாலுக்கு' என்ற பதிகம். அதில் தலைவி எவ்வாறு தன் கைமுதலெல் லாம் இழந்தாள். எவற்றை இழந்தாள் என்று கூறப்பெற்றது. இழந்தவற்றை மீண் டும்பெற மற்றைய கோடுகள் உதவா என் பதை உணர்ந்து எதைப்பற்றினல் தன் சத் தையை, தான் இழந்தவையான கட்டு, எழில், மாமை, நிறை, பொற்பு இவற்றை மீண்டும் பெறலாமோ அதைப் பற்றுகிருள். எனவே தார்யத்துக்கு (சாரும் பொருளுக்கு) தாரகம் (சார்பு) எது என்பது காட்டப்பெற்றது இப் பதிகத்தில் என்பது அக்கொள்கையின் சுருக்க விளக்கம். இதே கருத்து ஓரளவு குலசேகரரின்,

தொக்கிலங்கி யாறெல்லாம்
பரந்தோடித் தொடுகடலே
புக்கின்றிப் புறம்நிற்க
மாட்டாத மற்றவைபோல்
மீக்கிலங்கு முகில்நிறத்தாய்
வித்துவக் கோட்டம்மாநின்
புக்கிலங்கு சீரல்லால்
புக்கிலன்காண் புண்ணியனே

என்ற பாடலுள் காணப்பெறும் என்பர். ஆறு மலையில் தோன்றுகிறது. வெளியே நிலத்தில் பாய்கிறது. மக்களை மகிழ்விக் கிறது. ஆனல் அதன் இலக்ஷ்யம் அதுதானு. இல்லை. அது எப்படியும் ஓடிக் கடலை அடைந்து விடவேண்டும் என்பது அதன் கோட்பாடு. இடையிலே எங்கெல்லாம் எவ் வளவு பரப்பில் தேக்கினலும் எவ்வளவு அழகிய ஏரி அமைத்தாலும் அந்த ஆற்று நீருக்கு அதன் இலக்ஷ்யமான கடலை அடைய வேண்டும் என்ற பாரிப்புத்தான். அடைத்து வைத்த தடை நீங்கினல் அழகிய ஏரியை விட்டு ஆறு ஓடுகிறது. அவ் வோட்டத்தைத் தடைசெய்யாது போகும்படி விட்டால் எங்கு போய்ச்சேரும் கடைசியில்? கடலில் தானே. அதுபோன்று உயிர் எந்த அழகிய கூண்டிலிருப்பினும் அதன் துடிப்பெல்லாம் இறைவனை அடையவேண்டும் என்பதே. இடையே சிலகாலம் வேறு தடைகளால் அந்தக் கோட்பாடு வெளிப்படாமல் இருக்க லாம். கோட்பாடே தெரியாமலும் தவிக்க லாம், அல்லது மாறி நினைக்கலாம். ஆனல் அந்தத் தடைகள் நீங்கினல் அது இறை வனையே நாடும். எனவே உயிருக்கு உண்மை யான சார்வு (தாரகம்) இறைவனே என்பது குலசேகரரின் பாடலிலும் விளக்கப்பெறு கின்றது என்று காட்டுவர்.

இனி இப்பதிகத்தைப்பற்றி 'ஆசார்ய இருதயம்' என்ற நூல் கூறும் பொருள் பொதிந்த மொழிகளைப் பார்ப்போம்.

"கைம்முதல் இழந்தார் உண்ணும் நிதி யின் ஆபத்ஸகத்வம் புகும் ஊரிலே ஸம்ருத் தம்" என்பது சூத்திரம். தனக்கென்றுள்ள, தன்னை அழகுறச் செய்து பலர் புகழும்படி யாக்கிய பொருள்களானவற்றை இழந்த வர்கள் மீண்டும் அவற்றைப் பெறத்தேடும் நிதிபோல்வனுடைய தளர்ந்தார்க்குத் தாவள மாய் உதவும் தன்மை தலைவி புகுமூராகிய திருக்கோளூரிலே நிறைந்தது என்பது பொருள். இதில் 'மாலுக்கு' என்ற பதிகத் தில் தலைவி தன்னைத் தலைவியாக விளக்கிய பொற்பு, எழில், கட்டுமாமை முதலியவை இழந்தமை கைம்முதலிழந்தார் என்பதால் காட்டப்பெற்றது. அப்படி இழந்தவர் மீண் டும் அதைப் பெறவேண்டுமானல் அதற்குத் தாரகமாகப் பற்றவேண்டியது பிறபொருள் களல்ல கண்ணனே என்பதை 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல் லாம் கண்ணன்' என்ற வாக்கியத்தின் முதற் பதமான 'உண்ணும்' என்பதால் உணர்த்தப்

'பட்டது. அவன்தான் வைத்தமாநிதி, எய்ப்பினில் வைப்பு, என்பது நிதி என்ற தொடர் காட்டும். அதன் ஆபத்ஸகத்வம் (தளர்வில் உதவுவது) என்பது "வைத்த மாநிதி" என்ற பாடலின் 'வைத்த' என்ற பதத்திலிருந்து பெறப்பட்டது. 'புகுமூரிலே' என்பதால் 'திண்ணம் என் இளமான் புகும்ஊர் திருக்கோளூரே" என்ற ஆழ்வார் பாசுர அடிகள் காண்பிக்கப்பெற்றது. 'ஸம்ருத்தம்' (நிறைந்துளது) என்பது மாநிதி என்ற பதத்தினின்று பெறப்பட்டது. கொள்ளக் குறையா நிதி எடுத்தாலும் நிறைந்தே காணும் நிதி என்பது காட்டப்பெற்றது.

இத்துடன் நவதிருப்பதி அநுபவம் முற்றுப் பெறுகின்றது. சென்ற இதழ்களிலே அவ்வொன்பது திருப்பதிகளின் தல வரலாறுகளும், அவற்றைப்பற்றி நம்மாழ்வார் எந்தெந்த நிலையிலே எப்பதிகங்கள் பாடினார் என்பதும், அப்பதிகப் பாடல்களின் பருப்பொருள்களும், அப் பாசுரங்களை பூர்வாசார்யர்கள் அநுபவித்ததோடு ஒட்டி சில விளக்கங்களோடு அடியேன் அநுபவித்தபடியும், இப் பதிகங்களைப்பற்றிய ஆசார்யஹ்ருதய சூத்திரங்களும் அவற்றின் விளக்கமும், இப் பதிகங்களோடு குலசேகரரின் "தருதுயரம் தடாயேல்" என்ற பதிகத்தின் ஒன்பது பாடல்களை ஒப்பிட்டு இந்த நவதிருப்பதிகளிலும் ஆழ்வார் தனக்கும் இறைவனுக்கும் உள்ள ஒன்பதுவிதத் தொடர்பை விளக்கியிருக்கிறார் என்று சில பெரியோர் கொண்ட கொள்கையும் விளக்கப்பெற்றன. இவற்றில் ஏதேனும் குறையிருப்பின் பெரியோர்கள் என்னை மன்னித்துவிட வேண்டும் என்று அவர்கள் திருவடிகளை வணங்கி விடைபெறுகின்றேன்.

## சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவ நாயனார் கோயில் திருப்பணி

இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் தொண்டை நாட்டிலுள்ள திருமயிலாப்பூரில் திருவள்ளுவர் அவதரித்தார். அவர் பிறந்த இடத்தில் ஒரு திருக்கோயில் இன்றும் திகழ்கிறது. அவர் இயற்றிய திருக்குறள் உலகப்பொது நூல். சாதி, மதம், நாடு முதலிய பேதமின்றி யாவரும் ஒப்புக்கொண்டிருக்கும் பெருமையுடையது. இத்தகைய பொதுமறையை உலகுக்களித்த திருவள்ளுவர் கோயிலின் முன் மண்டபம், மதில்சுவர்கள் முதலியவற்றைத் திருப்பணி செய்யவும், கல்யாண மண்டபம் ஒன்று கட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திருப்பணிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டு இருக்கிறது. இதற்காக ஒரு திருப்பணிக்குழுவும் அமைக்கப்பெற்றிருக்கிறது. அருள் உள்ளம் கொண்ட அன்பர்கள் தாராளமாகப் பொருள் உதவி புரியுமாறு திருவள்ளுவர் கோயில் தருமகர்த்தர்களும் திருப்பணிக் குழுவினரும் வேண்டிக்கொள்கின்றனர். நன்கொடை அனுப்புவோர் "பி. ஜி. நடராஜன், பொருளாளர்-தர்மகர்த்தர், திருவள்ளுவர் கோயில், மயிலாப்பூர், சென்னை-4" என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| சென்ற திங்கள் நன்கொடை | ... | ரூ. 9,191 |
| **இத்திங்களில் நன்கொடை** | | |
| ஸ்ரீகபாலீசுவரர் கோயில் | ... | ரூ. 2,000 |
| திரு. கே. கமலக்கண்ணன், எம்.எல்.சி. | ... | ரூ. 501 |
| ,, டி. சுப்பிரமணியஞ்செட்டியார் மைலாப்பூர் | ... | ரூ. 501 |
| ,, டி. எஸ். வடிவேலு முதலியார், திருமழிசை | ... | ரூ. 250 |
| ,, எம். கந்தசாமி முதலியார், இராயப்பேட்டை | ... | ரூ. 202 |
| ,, வி. அரங்கநாதன், சென்னை | ... | ரூ. 101 |
| ,, கொத்தமங்கலம் சுப்பு | ... | ரூ. 51 |
| மொத்தம் | ... | ரூ. 12,797 |

# கோவூர் திருமேனீச்சரம்

[வித்துவான் திரு. மு. கு. புண்ணியகோடி, சென்னை.]

## கோவூர்

தொன்றுதொட்டுச் சீரும், சிறப்பும் வாய்ந்த தொண்டை நாட்டின்கண், பாலாறு பாய்ந்து வளம் பல சுரக்கும் தன்மையுடையதும், நஞ்சையும், புஞ்சையும் நிறைந்துள்ளதுமான செங்கற்பட்டு மாவாட்டம் சிறந்த ஒரு பகுதியாகும். இம்மாவட்டத்தில், பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலராகிய சேக்கிழார் பெருமான் அவதரித்த குன்றத்தூருக்குக் கிழக்கில் 2½ கல் தொலை தொலைவில் உள்ளதும், சென்னைப் பட்டினத்திற்கு மேற்கில் 12 கல் சேய்மையில் உள்ளதுமான ஊரே கோவூர் என்னுந் திருப்பதியாகும்.

## கோவூர்கிழார்

சங்க காலத்தில் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இன்றி விளங்கியவரும், எட்டுத் தொகையுள் ஒன்றான புறநானூற்றுள் பல பாடல்களைப் பாடியவரும், புலிக்கொடி பொறித்த சோழ மன்னர்களான, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகியோருக்கு உண்டான பூசலைத் தம் நுட்பமதியினால் நீக்கியவருமான 'கோவூர்கிழார்' என்னும் புலவர் பெருமான் பிறந்தவூர் இக் கோவூரேயாகும் என்று ஆராய்ச்சி யறிஞர்கள் கருதுகின்றனர்.

மதுரை தியாகராயர் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரான, திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் கோவூர் தேவஸ்தான நிர்வாக அதிகாரிக்கு எழுதிய கடித மொன்றில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்:— "கோவூர் என்று பெயர் கொண்ட ஊர்கள் தொண்டைநாடு, சோழநாடு, கொங்குநாடு, சேரநாடு என்ற நாடுகளில் உள்ளன. அவை யெல்லாவற்றிலும் பழமைச் சிறப்பு இடைக்காலச் சோழ, பாண்டியர் காலமுதலே குன்றாமல் இருப்பது தொண்டை நாட்டுக் கோவூரே. பழங்காலச் சான்றோர்க்குரிய ஊர்கள் பல இன்றும் ஓரளவு சிறப்புடன் பெரும்பாலும் சிவன் கோயில்களைக் கொண்டு விளங்குகின்றன. அவ்வகையில் தொண்டைநாட்டுக் கோவூரே சங்ககாலக் கோவூர்கிழார்க்குரியதாகும் என்பது என் கருத்து. ஏனைநாட்டுக் கோவூர்களுக்கு மேலே காட்டிய சிறப்பு காணப்படாமை யொன்றே என்னை இம்முடிவு கொள்ளச் செய்தது". இதனால், சங்கப் புலவரான கோவூர்கிழார் தோன்றிய இடம் இது என்பது நன்கு போதரும்.

## தினகரர்

புலவர் பெருமானைத் தோற்றுவித்துப் புகழ்கொண்ட இவ்வூர், கி. பி. பதினாறும் நூற்றாண்டில், 'தினகரர்' என்னும் புரவலரைத் தோற்றுவித்துப் பெருமைகொண்டது. இவர், கல்வி, வீரம், கொடை, பக்தி முதலியவற்றிற் சிறந்தவர் என்று 'தினகர வெண்பா' என்னும் நூல் விளக்குகின்றது. இது, சோமேசர் முதுமொழி வெண்பாவைப் போன்று, பின்னிரண்டடிகள் திருக்குறளால் முடிந்துள்ளது. முன்னிரண்டடிகள் தினகரரின் பெருமை முதலியவற்றையும், பின்னிரண்டடிகள் திருக்குறளாகவும் அமைந்துள்ளது.

இவர், இக் கோயிலுக்குப் புதிய தேரொன்றைச் செய்து தேர்த்திருவிழா நடைபெறுமாறு செய்தார் என்று ஒருபாடல் கூறுகின்றது. அது,

> "தேர்த்திருநாள் பூசைத் திருப்பணிநீ கண்ட பின்னைத்
> தீர்த்தமுள்ள கோவூர்த்தின கரா—பார்த்தால்
> மணியிற் றிகழ்தரு நூல்போல் மடந்தை
> அணியிற் றிகழ்வதொன் றுண்டு."

என்பதாகும்.

## சிவசங்கரர்

ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முன்னர், சைவவேளாளர் குலத்தில் சிவசங்கரர் என்னும் பெயர்கொண்ட ஒரு பெரியார்

தோன்றி, இளமையிலேயே கற்பன கற்றுக் கற்றவழி நின்று பின்னர்த் துறவுபூண்டு, திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகளின் அருமை மாணவராக விளங்கி, ஸ்ரீ சுவாமிகளுக்குப் பின்னர் அம்மடத்தின் தலைவராக இருந்து அரிய பலதொண்டுகளைச் செய்துள்ளார் என்பது திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் வரலாற்றின்மூலமாக அறியக் கிடக்குஞ் செய்தியாகும். இவருடைய தந்தையாரின் பெயர் திரிபுராந்தக முதலியார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

## திருக்கோயில்

இன்னோரன்ன, புலவர்களையும், புரவலர்களையும் தன்னகத்தேகொண்டு பெருமை பெற்ற இவ்வூரில் அழகிய திருக்கோயில் ஒன்று ஊரின் நடுவே அமைந்துள்ளது. அழகிய நான்கு மாடவீதிகளையும், நடுவில் ஓர் சிறந்த கோயிலும் அமைந்திருக்கும் மாட்சி, காண்போர்க்குக் கழிபேருவகையைத் தருவனவாகும். இவ்வூரின் அமைப்பு முறையினை நோக்கியே அரசியலார், செங்கற்பட்டு மாவட்டத்திலே இதனை, 'மாதிரி கிராம' (Model Village) மாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

## இறைவன், இறைவி

மூலபண்டாரம் வழங்கும் மூலமூர்த்தியாக விளங்கா நின்ற இறைவன் ஸ்ரீசுந்தரேசுவரர் என்னும் பெயரோடும், பால்நினைந் தூட்டுந்தாயினும் சாலப் பரிந்து மன்னுயிர் கட்கு இன்னருள் சுரக்கும் உமாதேவி ஸ்ரீ சௌந்தராம்பிகை யென்னும் பெயரோடும் விளங்குகின்றார்கள். திருமேனீசுவரர் என்றும் இறைவன் பெயர் வழங்கப்படுகிறது. இக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களின் பட்டாக்களில் திருமேனீசுவரர் என்றே காணப்படுகின்றது. ஆனால், ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் பாடிய பஞ்சரத்ன கீர்த்தனங்களில் சுந்தரேசுவரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருக்கோயில் அமைப்பு

நான்கு பக்கங்களிலும் நான்கு அகன்ற மாடவீதிகளைக் கொண்ட ஊரின் நடுவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் அமைப்பு க்ஜப்பிரஷ்ட வடிவில் (அதாவது யானைபடுத்திருப்பதைப் போன்று) அமைந்துள்ளது. இத்தகைய கோவில்களைக் கட்டியவர்கள் சோழமன்னர்களாவர் என்பது ஆராய்ச்சியாளருடைய முடிபாகும்.

## சுந்தரசோழன்

இராஜராஜனுடைய தந்தையும், இரண்டாம் பராந்தகனுமாகிய சுந்தரசோழன் என்பவன் இக்கோயிலைக் கட்டியிருத்தல் கூடும் என்று எண்ண இடமிருக்கின்றது. (இம் மன்னன், பொன்மாளிகைத் துஞ்சியதேவன் என்றும் அழைக்கப்படுகின்றான்.) ஏனெனின், இவ்வூர்க்கு அணித்தாகவுள்ள மாங்காடு என்னும் ஊரில் உள்ள கல்வெட்டொன்றில் இவ்வூர் (கோவூர்) 'சுந்தரசோழநல்லூர்' என்று இம் மன்னன் பெயரால் அழைக்கப்படுகின்றது. எனவே, கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த இரண்டாம் பராந்தக மன்னனால் கட்டப்பெற்றிருத்தல் கூடும் என்பதும், இக்கோயில் ஏறத்தாழ ஆயிரத்து நூறு ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியிருத்தல் வேண்டும் என்பதும் விளங்கும்.

## கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஒன்று, இரண்டாம் பராந்தகனை சுந்தரசோழன் ஆட்சிக்குவந்த ஒன்பதாம் ஆண்டில் (கி. பி. 965-ல்) இறைவன் நிவேதனத்திற்காக, இடையர் குலத்தைச்சேர்ந்த 'கலியன்' என்பவரால் நிலதானம் அளிக்கப்பெற்றது. மற்றொன்று, இராஜராஜசோழன் ஆட்சிக்கு வந்த இருபத்து மூன்றாவது ஆண்டில், நந்தா விளக்கெரிப்பதற்காக, ஒருவர் தானம் கொடுத்தது. வேறொன்று, கோயிலில் திருவிளக்கேற்றுவதற்காகக் காஞ்சியில் வாழ்ந்த ஒருவர், கோயில் அர்ச்சகரிடத்தில் பணம் 10 தானமாகக் கொடுத்தது.

## ஸ்ரீ தியாகராஜர்

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவரும், இசையுலகில் சிறந்த மேதையாக விளங்கியவருமான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், திருமால் உறையும் பல பதிகளை வணங்கி இவ்வூர்ப் போந்தார்கள். அப்போது, கோயில் தர்மகர்த்தராக இருந்த திரு. சுந்தரேச முதலியாரவர்கள், ஸ்ரீ சுவாமிகளை வரவேற்று உபசரித்தார்கள்.

திரு. முதலியாரின் அன்பினால் பிணிப் புண்ட ஸ்ரீ சுவாமிகள் சில நாட்கள் இங்கேயே தங்கியிருந்தார்கள். அவ்வமயத்தில் திரு. முதலியாரின் வேண்டுகோட்கிணங்கி, ஸ்ரீ சுவாமிகள், இவ்வூர்ப் பெருமான்மீது, 'கோவூர்ப் பஞ்சரத்னம்' என்னும் ஐந்து கீர்த்தனங்களைப் பாடியருளினர்.

## 'கோவூர்ப் பஞ்சரத்னம்'

ஸ்ரீ தியாகராஜர் பாடிய ஐந்து கீர்த்தனங்களாவன:—1. 'சம்போ மகாதேவா' (பந்துவராளி) 2. 'ஈசுவத நீவம்டி' (சகானு) 3. 'நம்மிவச்சிநநந்து' (கல்யாணி) 4. 'கோரிஸே விம்பராரே' (கரகரப்ரியா) 5. 'சுந்தரேஸவருநி' (சங்கராபரணம்) என்பனவாகும்.

## கீர்த்தனமும் பொருளும்

'சம்போ மகாதேவா' என்னும் கீர்த்தனத்தில், இன்பத்திற்கு இருப்பிடமானவனே! உன்னிடம் அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பவனே! உன்னிடம் அன்பு செய்ய அருள்வீராக! எனக் கூறுகின்றார். 2. 'ஈசுவதநீவம்டி' என்னுங் கீர்த்தனையில், "கோவூர்ப்பதியில் வீற்றிருக்கும் சுந்தரேசப் பெருமானே, உன்னிடம் அன்புகொண்டு அரை நிமிஷமேனும் உன்னுடைய புண்ணிய க்ஷேத்திரத்தில் தங்குவராயின், அவர்கட்கு, நிறைந்த செல்வமும், நீண்டவாழ்வும், நல்லோரிடத்து அன்பும், சிறந்த புகழும் ஒருங்கே தரக்கூடியவன்" என்று கூறுகின்றார்.

3. 'நம்மிவச்சிநநந்து' என்னுங் கீர்த்தனையில், "சௌந்தர்ய நாயகியின் மணவாளனே! வேத, புராண, ஆகமங்கள் நின் திருவடியைக்காண முடியாமல் வருந்துகின்றன. வீண் வாதங்களும், பேதங்களும் ஏன்? ஒலி வடிவாகவுள்ள இறைவனே! உன்னை நம்பி வந்த என்னைக் காப்பாற்றுக" என்று கூறுகிறார்,

4. 'கோரிஸே விம்பராரே' என்னுங் கீர்த்தனையில், "நாம் நினைத்த காரியங்கள் நிறைவேற, கோவூரில் அழகுத்தெய்வமாக விளங்கும் ஸ்ரீ சுந்தரேசனை வந்து வழிபடவும். தேவர்களும், சனகாதி முனிவர்களும், இவ்வூரின்கண் வந்து, இறைவன் அருளைப் பெறக் காத்து நிற்கின்றனர்" என்று கூறுகிறார்.

5. 'சுந்தரேஸவருநி' என்னுங் கீர்த்தனையில், "அழகு மிகுந்த சுந்தரேசனைக் கண்ட கண்கள் வேறு தெய்வங்களைக்காண ஒருப்படுமோ? அழகு மிக்கவும், தூயகாசிக்கு ஒப்பானதுமான, சிறந்த கோவூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுந்தரேசனை, அயன் முதலான தேவர்களும், அன்னநடை வாய்ந்த தேவப்பெண்களும், தும்புருநாரதரும், இனிய பக்தர்களும் வழிபட்டு இறைவன் இன்னருளைப்பெற்றுச் செல்கின்றனர்" என்று கூறுகின்றார்.

## ஸ்ரீ தியாகராஜர் பயணம்

இங்ஙனம், பஞ்சரத்னம் பாடிப் பரவசமடைந்த ஸ்ரீ தியாகராஜர், சுந்தரேச முதலியாரிடம் விடைபெற்றுச் செல்லலானார். அப்போது முதலியார், ஸ்ரீ சுவாமிகளுக்குத் தெரியாவண்ணம், ஆயிரம் வெண் பொற்காசுகளைக்கொண்ட கிழியொன்றை, அவருடைய பல்லக்கில் வைத்துவிட்டார்கள். விடியற்காலம், பொழுது சரியாக புலராத நேரம் பல்லக்கு புறப்பட்டது. பல்லக்கில் ஆயிரம் ரூபாய் இருக்கின்றது என்று அறிந்த சிலர், அதனைக் களவாடும்பொருட்டு அப்பல்லக்கின் அருகில் வந்தனர். அப்போது, இராம, இலக்குமணர்கள், இருவரும் இரு பக்கத்திலும் காவல்புரிந்துகொண்டு வந்து, பொழுது புலர்ந்த பின்னர் அவ்விடத்தைவிட்டு நீங்கினர்.

பின்னர், கள்வர்கள் தம்முடையதவறை யுணர்ந்து, ஸ்ரீ சுவாமிகளிடம் மன்னிப்பு கேட்க ஓடோடி வந்து, அவருடைய கால்களில் விழுந்து, 'நாங்கள் கள்வர்கள் தங்கள் பல்லக்கில் உள்ள பொருளைக் களவாடும் பொருட்டு வந்தோம். அப்போது தங்கள் பல்லக்கின் இருபுறத்திலும் வந்த காவலர்களைக் கண்டு அஞ்சி அகன்று விட்டோம், எங்கள் பிழையை மன்னித்தருள்க' என்று வேண்டினர். சுவாமிகள் அப்போதுதான், திரு. முதலியார் தம் பல்லக்கில் ஆயிரம் ரூபாய் வைத்ததையும், இராம, இலக்குமணர் காவல் புரிந்ததையும் அறிந்தார்கள். உடனே, தியாகராஜர், அக்கள்வர்களை நோக்கி, "தோழர்களே! அந்தத் திவ்விய புருஷர்களை எனக்குக் காட்டுங்கள் இந்த ஆயிரம் ரூபாய்களையும் தங்கட்குத் தந்துவிடுகின்றேன்' என்று கூறி, இராம, இலக்குமணர்கள், தம்

மிடங்கொண்டுள்ள, பெருங்கருணையையும், பேரன்பினையும் நினைந்து நினைந்து உருகி, 'வாசாமகோசரமே' என்னும் கீர்த்தனையைப் பாடித் தம் அன்பினை வெளிப்படுத்தினர்.

### திருவிழாக்கள்

ஒவ்வோராண்டும், வைகாசித் திங்களில், இக்கோயிலில், பிரம்மோற்சவம் பத்து நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. அன்றியும், நவராத்திரி கந்தர்சஷ்டி, மாணிக்கவாசகர் விழா, சைவசமய குரவர் நால்வர்களின் திருநாள், பஞ்சபருவம் முதலிய காலங்களிலும் விழாக்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த விழாக்காலங்களில், பல அறிஞர் பெருமக்கள், அவ்வப்போது வந்து சமயச்சொற்பொழிவாற்றுகின்றார்கள். இக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமைதோறும் வாரவழிபாடும், அவ்வார வழிபாட்டினை யொட்டிப் பெரிய புராணச் சொற்பொழிவும் நடைபெற்று வருகின்றன.

—※—

ஆணையர் அலுவலகம், இந்துசமய அறநிலைய (ஆட்சி)த்துறை, சென்னை.

சுற்றறிக்கை (R. Dis.) எண். 27902/61-நாள் 12—8—61.

**பொருள்:** நிலம்—கோயில் புறம்போக்கு நிலம்—கோயிலின் தேவைக்குமேலுள்ள நிலத்தை விவசாயம் முதலியவற்றிற்குப் பயன்படுத்துதல்.

**குறிப்பு:** 1. இவ்வலுவலக சுற்றறிக்கை ஆர். டிஸ். 32239/59 தேதி 15—10—59.

2. G. O. (M. S.) எண். 3069, ரெவின்யூ, தேதி 22—7—61.

புறம்போக்கு நிலங்களை கோயில்களின் திருவிழா முதலியவைகளுக்காகவும், தற்காலிகமாகவும் பயன்படுத்தப்படுதலை (occupation) மட்டும் அனுமதிப்பதென்றும், மற்ற எல்லாவிதமான பயன்படுத்துதலை ஆக்கிரமிப்பு (encroachment) எனக்கருதவேண்டும் எனவும் அரசினர் முடிவு செய்துள்ளனர்.

கோயிலின் தேவைக்கு அதிகமான புறம்போக்கு நிலங்களை விவசாயத்திற்குமட்டுமல்லாமல், வீடு கட்டவும் வணிக நிலையங்கள் முதலியன ஏற்படுத்தவும் அனுமதித்து அதன் மூலம் கோயிலின் வருமானத்தை அதிகப்படுத்தவேண்டும். அப்படி அனுமதிக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைப் பகுத்து கோயிலுக்கு மாற்றி உரிமையாக்கி இலவசமாக பட்டாவும் அளிக்கப்படும். பின் அந்நிலங்களை விவசாயத்திற்கு குத்தகைக்கு விடுவது முதலியவைகளின்மூலம் பயன்படுத்தி, கிடைக்கும் வருமானத்தை கோயிலுக்குப் பயன்படுத்த வேண்டும்.

மேற்கண்ட சலுகையை அரசினர் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு அளித்திருக்கின்றனர்.

(1) கோயில் நிர்வாகிகள், வழிபாட்டிற்கும் கோயிலின் தேவைக்கும் அதிகமான புறம்போக்கு நிலங்களை உரிமையாக்கக் கோரி மனுச்செய்யுமுன் அவர்கள் இந்துசமய அறநிலைய (ஆட்சி)த் துறை அலுவலர்களின் ஒப்புதல் பெற்றாக வேண்டும்.

(2) கோயிலின் நலனைக் கருத்திற்கொண்டு, ஷை நிலங்கள் விவசாயத்திற்கு ஏற்புடைத்தாயின் விவசாயத்திற்கும், ஏற்புடைத்ததன்றாயின் வேறு வழிகளிலும் பயன்படுத்த அனுமதிக்கவேண்டும்.

(3) நிலங்கள் எந்த நோக்கத்திற்காக கோயிலுக்கு உரிமையாக்கிக் கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்குப் பயன்படுத்தவேண்டும்.

கோயில் நிர்வாகிகள் கோயிலின் புறம்போக்கு நிலங்களைப்பற்றிய எல்லா தகவல்களையும் சம்பந்தப்பட்ட துணை ஆணையர், உதவி ஆணையர் அவர்களுக்கு அறிக்கைகள்மூலம் தெரிவிக்கவேண்டும்.

எல்லா உயிர்கள் மீதும் ஆட்சி நடத்துகிற இந்த நியதி தான் கடவுள்.

—மகாத்மா காந்தி.

# திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

## சமணரது சூழ்ச்சி

இவ்வாறு திருநாவுக்கரசு நாயனார், சிவ நெறியை அடைந்து சூலைநோய் நீங்கப்பெற்ற செய்தியைப் பாடலிபுரத்திலிருந்த சமணர்கள் கேள்வியுற்று, வெகுளியும் அவமானமும் உடையவராய், உள்ளமும் உடலும் பதைத்தனர். 'தருமசேனர்க்கு வந்த சூலை நோயை நாம் நீக்க இயலாது கைவிட்டமையாலே, அவர் சைவசமயத்தை அடைந்து சூலைநோய் நீங்கிப் பிழைத்தார்; இதனால், நமது சமண் சமயம் இனி வீழ்ச்சியடைவது உறுதி; இதற்கு நாம் என் செய்வது!' என்று திகைத்தார்கள். 'சமண சமயம் தருமசேனரால் பிற சமயங்களை வென்று, இந்நாட்டில் வேரூன்றி நின்றது. இப்பொழுது அவரே இதில் பயனில்லை என்று சொல்லி வெறுத்துச் சைவசமயத்தை அடைந்து விட்டார் என்றால், இனி இச்சமயம் அழிந்ததேயாம்' என்று சொல்லி மிகவும் வருந்தினர். பின்பு, அவர்கள் அனைவரும் ஒன்று கூடி ஆராய்ந்தனர்.

'தருமசேனர்க்கு வந்த சூலைநோயை நாம் நீக்க இயலாமல் கைவிட்டு விட்டதையும், பின்பு, அவர் சைவசமயத்தை அடைந்து அந்நோய் நீங்கப்பெற்றதையும் அரசன் அறிவானாயின், அவனும் வெறுப்புக்கொண்டு, சைவனாகி, நம்முடைய பாழிகளை அழித்து, நமக்கு விடுத்துள்ள முற்றூட்டுக்களையும் பறித்துக்கொள்வான்; இதற்கு நாம் என்ன செய்வது!' என்று பலவாறு சிந்தித்தனர்; பின்பு அவர்கள் ஒரு முடிவிற்கு வந்தார்கள். அஃதாவது.

"தாய் தந்தையர் இறந்த பின்பு தம்மைக் காப்பாற்றிய தமக்கை சைவசமயத்தையே மேற்கொண்டிருப்பதால், தாமும் அதன் கண்ணே பற்றுடையவராய், நமது சமயத்தை அழித்து, அவர்கள் சமயத்தை வளர்க்க எண்ணிச் சிறிது காலம் நமது சமயத்தில் பற்றுடையவர்போல வந்திருந்து, இப்பொழுது 'சூலைநோய் வந்தது' என்றும், 'அதனைச் சமண் சமயத்தவரால் தீர்க்கமுடியவில்லை' என்றும், 'சைவ சமயத்தை அடைந்த பின்பு, அது சிவபெருமானது திருவருளால் எளிதில் தீர்ந்துவிட்டது' என்றும் பொய் புகன்று, நமது சமயத்தை அழித்தலும், நமது தெய்வத்தைப் பழித்தலும் செய்தார்" என்று, அரசன் உளங்கொள்ளும்படி திரித்து உண்மைபோல மிகப் பொருத்தமாகச் சொல்லவேண்டும் என்பதே. சமண் சமயம், அதுபொழுது பல்லவன் நாட்டில் ஆட்சிச் சமயமாய் இருந்தமையால், அதற்குக் கேடு சூழ்தல் அப்பொழுது பெருங்குற்றமாகும். அக்குற்றத்தினைச் சமணர்கள் திருநாவுக்கரசர்மீது அஞ்சாது சுமத்தத் துணிந்தனர். இவர்கள் தாம், "ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்-பின்சாரப் பொய்யாமை நன்று" என்ற திருவள்ளுவரது திருமொழியை முற்றிலும் கடைப்பிடிப்பவர்கள். உண்மையை விரும்பாது, அரசனது அன்புள்ளம் முதலியவற்றை விரும்புவோர் இவ்வாறு நெறிபிறழ்ந்து நடத்தல் இயல்பேயாம். இது பற்றியே இவர்களைச் சேக்கிழார்,

> "கொலையும் பொய்ம்மையும் இலம்என்று
> கொடுந்தொழில் புரிவார்"

எனவும்,

> "மெய்வ கைத்திறம் அறிந்திடில்
> வேந்தனும் வெகுண்டு
> சைவ னாகிநம் விருத்தியும்
> தவிர்க்குமற் றினிநாம்
> செய்வ தென்னென வஞ்சனை
> தெரிந்துசித் திரிப்பார்"

என்வும் கூறினார்.

இங்ஙனமாகவே, இளங்கோவடிகள் போன்ற சங்க காலச் சமணர்கள் போன்றவர் அல்லர், தேவாரத் திருமுறைகளிற் குறிக்கப்படுகின்ற பல்லவர் காலத்துச் சமணர்கள்

என்பது விளங்கும். சங்ககாலச் சமணர்கள் தங்கள் சமய நெறியில் உண்மை ஆர்வங் கொண்டு, அதில் பிழையாது நின்று, பிறரையும் அதில் அவ்வாறு நிற்பிக்க முயன்றனர். ஆயினும், தமிழ்நாட்டுப் பழஞ்சமயங்களை அவர்கள் பழிக்க முன்வரவில்லை. அதனால், தமிழ்நாட்டு மக்களிடையே சமயப்பூசல்கள் அக்காலத்து எழாது, எல்லாச் சமயத்தவரும் அமைதியாகவே வாழ்ந்தனர். பல்லவர் காலத்துச் சமணர்கள் அவ்வாறின்றி, அரசரது சார்பைப்பெற்று, அச்செருக்கினால் தங்கள் சமயத்தில் தாங்கள் நிற்பதில் கருத்தைப் பெரிதும் செலுத்தாது, பழஞ்சமயங்களை அழித்துப் பேசி, அவற்றிற்குக் கேடு சூழ்வதிலும், அதன் பொருட்டுக் கட்டுப்பாடாக அமைந்த அமைப்புக்களை அரசரது உதவியால் அங்கங்கே அமைத்துக்கொண்டு வாழ்வதிலுமே கருத்தைப் பெரிதும் செலுத்தினார்கள். அதனால், தமிழ் நாட்டில் சமயப்பூசல்கள் மிகுந்து, அரசர்க்கும் குடிமக்கட்கும் உள்ளத்து ஒற்றுமை நீங்கி, அடக்குமுறை மேலிட்டு, அமைதி குலைந்து குழப்பம் பெருகுவதாயிற்று.

இந்நிலையில், தமிழ்நாட்டு மக்கட்கு மேல் நாட்டு மக்களது மனப்பான்மை இருந்திருக்குமானால், அவர்கள் பெரியதொரு புரட்சியை உண்டாக்கி அரசரை அகற்றி அப்பொழுதே மக்கள் ஆட்சியைத் தோற்றுவித்திருப்பார்கள். ஆனால், அப்படிப்பட்ட மனப்பான்மை இன்றி, 'யாவும் இறைவன் செயல்; இதற்கு இறைவனே தீர்வு காண வேண்டும்' என்னும் நேர்மையான எண்ணத்தில் உறைத்து நின்றவர்கள் ஆதலால், அவர்கள், புரட்சி ஒன்றையும் எண்ணாது, ஆண்டவனையே வேண்டி வந்தனர். அதனால், ஆண்டவன், திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஆகிய இருவர் பேரருளாசிரியரை ஒரு காலத்தே தமிழ் நாட்டின் இரு பக்கங்களில் தோற்றுவித்து, அதற்குத் தீர்வு உண்டாக்கினான். எனவே, பல்லவர் காலத்துச் சமணர்கள் தங்கள் செயலாலே தாங்கள் அழிந்தனர் என்பதன்றிப் பிறிதில்லை; அதனால், அவர்களது அழிவினைச் சங்ககாலச் சமணரது அழிவாகக் கருதி வருந்துதல், வரலாற்றினை நோக்காமையால் வருவதேயாம்.

"அறம்காட்டும் சமணரும்
சாக்கியரும் அலர்தூற்றும்
திறம்காட்டல் கேளாதே
தெளிவுடையீர் சென்றடைமின்"

என்றாற்போலப் பலவிடத்தில் திருஞான சம்பந்தர் கூறிச் சென்றமையால், அவர் காலத்துச் சமண பௌத்தர்கள் சைவசமயத்தைப் பலரிடத்தும் அழித்துப் பேசிவந்தமை நன்கறியப்படுகின்றது.

"நீற்று மேனிய ராயினர் மேல்உற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணர்"

என அந்நாயனாரும்,

"கண்டுமுட் டடிகள்மார்கள்;
கேட்டுமுட் டியானும்"

எனப் பாண்டிய மன்னன் கூறியதாகச் சேக்கிழாரும் கூறியவாற்றால், அக்காலத்துச் சமணர்கள், சைவர்களிடத்து எவ்வளவு வெறுப்புணர்ச்சியை நாட்டில் வளர்க்க முயன்று வந்தார்கள் என்பது விளங்கும். (முட்டு - பட்டினி. சைவரைக் கண்டாலும், கண்டதாகப் பிறர் சொல்லும் சொல் காதில் விழுந்தாலும் அதற்குக் கழுவாயாகச் சமணர்கள் உண்ணா நோன்பிருந்தனர்.)

சைவர்களிடத்து அவர்கள் எத்துணைக் கொடிய எண்ணத்தையும் செயலையும் உடையவர்களாய் இருந்தார்கள் என்பதை, இனி இங்கு வரும் இந்நாயனார் வரலாற்றுப் பகுதியினாலும், திருஞானசம்பந்தர் வரலாறு முதலிய பிறநாயன்மார் சிலரது வரலாறுகளாலும் நன்குணரலாம். இது பற்றியே திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சமணர்களை இகழ்ந்தனரன்றி, அவர்கள் வேற்றுச் சமயத்தினர் என்னும் கருத்துப்பற்றி இகழ்ந்தாரல்லர். பொதுவாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு சமயத்தை ஒவ்வொருவர் தோற்றுவித்ததாகச் சொல்லப்படினும் உண்மையில், உயிர்களின் அறிவு நிலைக்கேற்ப, எல்லாச் சமயங்களையும் இறைவனே அமைத்துள்ளான் என்பதே அவர்கள் கண்ட உண்மை. அதனை,

'துணைநன் மலர்த்தூய்த் தொழுந்தொண்
டர்கள் சொல்லீர்......
ஈசன்-அணைவில் சமண்சாக்
கியம்ஆக் கியவாறே"

எனத் திருஞான சம்பந்தரும்,

"விரிவிலா அறிவி னார்கள்
வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்"

எனத் திருநாவுக்கரசரும் அருளிச்செய்தவாற்ருல் இனிது விளங்கும். அது நிற்க.

பாடலிபுத்திரத்தில், சமணர்கள் தாங்கள் முடிவு செய்தபடியே செய்யத் துணிந்து, பல்லவ அரசனது அரண்மனைக்குத் திரண்டு சென்று அடைந்து, தங்கள் வருகையை அரசனுக்குத் தெரிவிக்குமாறு, வாயில்காவலரிடம் கூறினர். அவர்கள் சென்று, 'அடிகள்மார் அனைவரும், மனக் கவலையுடன் மிகவும் வருத்தங்கொண்டு, நம் அரண்மனை வாயிலில் வந்திருக்கின்றனர்' என்று அறிவித்தனர். அது கேட்டு அரசன், 'அவ்வாறு அவர்கள் என்னிடம் தாங்களே விரைவில் நேரில் வந்து முறையிட்டுக் கொள்ளும்படி அவர்களுக்கு என்ன துன்பம் நேரிட்டது' என்று வருத்தத்துடன் சொல்லி, அவர்களைத் தன்னிடம் அழைத்துவருமாறு வாயில் காவலர்களுக்குக் கட்டளை இட்டான். பல்லவன் இயல்பாகவே சமண சமயத்தவனுதலின் அவர்களிடம் அவனுக்கு அத்துணை அன்பும் நன்மதிப்பும் இருந்தன.

அரசனது கட்டளைப்படியே வாயில் காவலர்கள் அழைத்துச் செல்ல, சமணர்கள் உட்சென்று, அரசனைக் கண்டு, முன்பு தாங்கள் முடிவு செய்துகொண்டு வந்த படியே விரைந்து கூறினர். அஃதாவது, 'நம் சமயத் தலைவராய் விளங்கியிருந்த தருமசேனர், இப்பொழுது, தமக்குச் சூலை நோய் வந்து பெரிதும் தம்மை வருத்தியதாகவும், அது நம் சமயச் செயல்களால் நீங்காது மிகுந்ததாகவும் பொய்கூறி, திருவதிகையில் சென்று தம் தமக்கையுடன் தாமும் சைவராகி, அதன்பின்பு சூலைநோய் தீர்ந்ததாகக் காட்டி, உனக்குரிய சமயமாகிய சமணசமயத்திற்கு அழிவைத் தேடிவிட்டார்' என்று கூறினுர்கள்.

அதைக் கேட்டவுடன், பல்லவன் சீறியெழுந்து, 'எல்லையில்லாத தவத்தினையுடைய அடிகண்மீர், தருமசேனர், வஞ்சனை பொருந்திய மனத்தை யுடையவராய், தம் தமக்கையது சமயத்தைத் தாம் அடைதற் பொருட்டு, சில பொய்களைக்கூறி, புகழ்மிகுந்த மெய்ச் சமயமாகிய நமது சமயத்திற்கு இழிவுண்டாக்கிவிட்டுச் செல்வதோ! நன்று! நன்று!! இனி இதற்கு என்ன செய்வது?' என்று வெகுளியோடுங் கேட்டான். அதற்குச் **சமணர்கள்**, 'சமயங்களிடெல்லாம் தலையாயதாகிய ஓர் உண்மைச் சமயத்திற்கும் அழிவு தேடி, உன்னுடைய ஆணையையும் கடந்து சென்றவனுகிய நல்லூழ் இல்லாத அந்தத் தருமசேனனை, பலவாறு துன்புறுத்தி அழித்தல் வேண்டும்' என்று, தீவினை வழியும் வாயால், அஞ்சாது கூறினுர்கள்.

அவர்களை உண்மையான அறவோர்கள் என மயங்கிய மயக்கம் காரணமாக, அருள் உள்ளத்தையும், அறிவையும், நடுவுநிலைமையையும் இழந்த பல்லவ அரசன், உடனே அமைச்சர்களைப் பார்த்து, 'தெளிந்த அறிவினையுடையவர்கள் இம் முனிவர்கள்; ஆதலின், இவர்கள் சொல்லை, நாம் ஆராய்ந்து முடிவுசெய்ய வேண்டுவதில்லை; ஆகவே, இவர்களால், 'குற்றவாளி' என்று முடிவு செய்யப்பட்ட தருமசேனனை, இவர்கள் சொல்லும் முறைப்படி ஒறுத்தற்கு விரைவில் என்னிடம் கொணருங்கள்; நீவிர், அவன்பால் ஏதேனும் கைக்கூலி பெற்றுக் கொண்டு, அவனை விட்டு வந்து, அவனைக் கொணராமைக்கு எவையேனும் சில பொய்க் காரணங்களைக் கூறுதீர்கள்; எவ்வாருயினும் அவனைக் கொணராது நீவிர் இங்கு வருதல் கூடாது' எனக் கடுமையாகக் கட்டளையிட்டான்.

அமைச்சர்கள் அரசன் கட்டளையை நிறைவேற்றுவாராய்த் திருவதிகையை அடைந்து திருநாவுக்கரசரைக் கண்டு, 'அரசர் உங்களைக் கொணருமாறு கட்டளையிட்டிருக்கின்ருர்; ஏவலாளர்களை விடுத்தால் அவர்கள் எவையேனும் சில காரணங்களைக் கொண்டு, வாளா மீண்டுவிடுதலும் கூடும் என்று எங்களையே உங்கள்பால் விடுத்துள்ளார்; ஆதலின், வாருங்கள்' என்று அழைத்தார்கள். அக்கால நிலை இவ்வாறிருந்தமையின் சமண சமயத்தை விட்டு நீங்கினுல், அரசனுல் பல இன்னல்கள் நேரும் என்பதைத் திருநாவுக்கரசர் முன்னரே அறிந்திருந்தல் வேண்டும். இருந்தும் சிவபிரானது திருவருள் உறைப்பினுலேயே அதினின்றும் நீங்கித் தம் தமக்கையாரது ஆணையின்படியே சைவராகிக் கவலையற்றிருந்தனராதல் வேண்டும்.

## திருமறுமாற்றத் திருத்தாண்டகம் அருளல்

அமைச்சர் கூறியவற்றைக் கேட்ட நாயனுர், அவர்களை நோக்கி, 'நீங்கள் யார்?

உங்கள் அரசன் யாவன்? உங்களுக்கும் எமக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது? எமக்கு உற்ற சூலநோயைத் தீர்க்கமாட்டாது உங்கள் குருமார்கள் கைவிட்ட அன்றே உங்களுக்கும் எமக்கும் இருந்த தொடர்பு அற்றொழிந்தது'. நின்றுண்ணும் உங்கள் குருமார்கள் எம்மை என்றும் மறவாது நினைக்கும்படி சொன்ன மந்திரம் முதலியவற்றையெல்லாம் அப்பொழுதே மறந்தொழித்தோம். தனக்குமேல் ஒரு தலைவனை இல்லாது, தானே எல்லார்க்கும் தலைவனுகிய சிவபெருமானுக்கு யாம் என்றும் மீளாத ஆளானேம்; அதனுல் அப்பொழுதே சூலநோய் தன் சுவடும் தோன்ருது ஓடி மறைந்தது. அதுவேயன்றி நாம் அடைந்துள்ள நன்மைகள் அளப்பரியன. இப்பொழுது இவ்வுலகத்தில் எமக்கு எதிர்நிற்பார் ஒருவரும் இல்லை. சிவபெருமான் ஒருவனுக்கே நாம் அடியோம்; பிறரொருவருக்கும் நாம் அடியோமல்லோம். அதனுல், நமனும் எம்மைக் கொணருமாறு தன் ஏவலர்கட்குக் கட்டளையிட வல்லனல்லன். ஆகவே, உங்கள் அரசன் எம்மைக் கொணருமாறு கட்டளையிட எங்ஙனம் உரியனுவான்! ஆகவே, அவன் கட்டளைப்படி நாம் உங்களோடு வரக் கடமைப்பட்டோமல்லோம். யாம் உங்களோடு வாராதொழியின், எமக்கு உங்கள் அரசனுல் தீங்கு நேரும் என்னும் அச்சமும் எமக்கில்லை. நமனுக்கே நாம் அஞ்சவில்லை என்ருல், உங்கள் அரசனுக்கு நாம் அஞ்சாமை சொல்லவேண்டுமோ! என்று மற்றும் இப்படிப்பட்ட பல மறுமொழிகளை, "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" எனத் தொடங்கும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தால் விரிவாக அருளிச்செய்து, 'இவற்றை உங்கள் அரசனுக்குத் தெரிவியுங்கள்' என்று சொல்லி யருளினர்.

நாயனரது பெருநிலையை உணர்ந்த அமைச்சர்கள் அவரை நெருங்க அஞ்சினர். அதனுல், அவர்கள், அவரது திருவடிகளில் விழுந்து வணங்கி, 'அடிகளீர், உங்களை அழைத்துச் செல்லாது அரசனை அடைந்தால் அவன், எங்களைக் கைக்கூலி பெற்று மீண்டதாகவே முடிபுசெய்து, எங்களை ஒறுப்பான்; ஆதலின், அருள்கூர்ந்து எவ்வாறேனும் எங்களுடன் வந்து நீவிர் அரசனை யடைதல்வேண்டும்' என்று பெரிதும் வேண்டிக்கொண்டனர். அமைச்சர்கள், தங்கள் உயிரைக் காத்துக்கொள்ளத் திருநாவுக்கரசரது உயிரை அவரே வேருேர் இடத்திற்கு வந்து தருமாறு அவரை வேண்டிக்கொள்கின்றனர். என்னே தன்னலத்தின் தகைமை!

அமைச்சர்களது நிலைபைக் கண்டு மனமிரங்கிய நாயனுர், இவர்கள் அரசனையன்றி வேறு பற்றுக்கோடு இல்லாதவர்கள்; அவன் ஒறுப்பின், இவர்களைக் காப்பாற்றுவார் ஒருவரும் இலர். நமக்கு அரசனுல் வரும் தீங்குகட்கு எம்பெருமான் இருக்கின்ருன் என்று நினைந்து, அவர்களுடன் செல்ல இசைந்தார். எனவே, முறையின்றி அமைச்சர்கள் உயிரிழத்தலைப் பொருத இரக்கங் காரணமாகவே, தமக்குத் தீங்குள்ள இடத்தினைத் தாமே சென்றடைதல், நாயனுர்க்கு இன்றியமையாததாகிவிட்டது என்பது விளங்கும். இதனுல், 'இறைநெறியில் நின்று இறைபணி செய்து வாழ்வோர் உயிர்களிடத்து இரக்கமுடையராதல் இல்லை' எனச் சிலர் கருதுதல் தவறு என்றும், இறைநெறியில் நிற்பவரே உண்மையில், உறவு பகை இன்றி, மகவெனப் பல்லுயிரையும் ஒப்பநோக்கி, இரக்கமுடையவராய் இருப்பர் எனவும் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். (தொடரும்)

---

**பரதூர்:** வரதராஜப்பெருமாளுக்கு மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா 27-8-61-ல் நடைபெற்றது. மாலையில் சமயச்சொற்பொழிவும் நடைபெற்றது.

**திருவெண்காடு:** சுவேதாரண்யேசுவரசுவாமி கோயிலில் அஷ்டபுஜதுர்க்கா பரமேசுவரிக்கு 14-8-61ல் தொடங்கி இலட்சார்ச்சனை நடைபெற்றுவருகிறது.

---

ஆண்டவனிடமிருந்து ஒதுங்கி விலகும் வாழ்க்கையால் ஒரு பயனும் இல்லை. அப்படிப்பட்ட வாழ்க்கையில் மன நிம்மதியோ சந்தோஷமோ ஏற்படாது.

—மகாத்மா காந்தி

# கல்வெட்டுக்களினால் அறியப்படும் சில உண்மைகள்

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

குறிப்பு:—இக்கட்டுரையில் காணப்படும் கருத்துக்களும் முடிவுகளும் மேலும் ஆராய்வதற்குரியன. —ஆசிரியர்.

## திருச்சிற்றேமம்

திருச்சிற்றேமம் என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது திருஞான சம்பந்தப் பெருந்தகையாரால் பாடப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. திருநாவுக்கரையரும் இதை க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் "சிரபுரம் சிற்றேமம் சேறை"—என்று வைத்துப் பாடியுள்ளனர். இப்பதி யாண்டுள்ளது என்பதைப்பற்றி ஆராய்ந்து உண்மை காண்பாம்.

தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப்பூண்டி தாலூகாவில் உள்ள சித்தாம்பூர் என்ற ஊரையே பலரும் திருச்சிற்றேமம் எனக் கொண்டனர். உண்மை அதுவன்று. அச் சித்தாம்பூரிலுள்ள சிவன் கோயில் கல்வெட்டுக்கள் அவ்வூரை வண்டாழைக் கூற்றத்துச் சிற்றூமூர் எனக் குறிப்பிடுகின்றன. மேலும் திருவொற்றியூர்ச் சிவன்கோயிலிலுள்ள இராசகேசரி வர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழனது (முதற் குலோத்துங்க சோழன்) 37-ஆம் ஆண்டில் (அதாவது கி—பி. 1107 இல்) செதுக்கப்பட்ட கல்வெட்டொன்று இவ்வூரை, "சோழமண்டலத்து இராஜேந்திர சோழவளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்து சிற்றூமூர்-" என்றும் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. (Annual report on South Indian Epigraphy for the year 1912 Number 1112) எனவே இச்சிற்றூரே சித்தாம்பூர் என்று சிதைந்து வழங்கப்பெறுகின்றது. ஆதலால் இச்சிற்றூமூர், சிற்றேமம் அன்று என்பது வெளிப்படை. ஆயின் திருச்சிற்றேமம் என்பது யாண்டு உள்ளது எனின் தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலூகாவிலுள்ள திருச்சிற்றம்பலம் என்னும் ஊரே திருச்சிற்றேமம் ஆகும். ஏனெனில் அவ்வூர்ச் சிவன்கோயிலில், பாண்டியரில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்த வரகுண பாண்டியன் காலத்துச் செதுக்கப்பட்ட கல்வெட்டிலும், சோழமன்னர்களில் முதலாம் ஆதித்தன், பராந்தகன் இவர்கள் காலம் முதல் கி. பி. 13,14 ஆம் நூற்றாண்டுகளில் உள்ள அரசர்கள் கல்வெட்டுக்களிலும் அவ்வூர், திருச்சிற்றேமம் என்றும்; அவ்வூர்க் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவரது திருப்பெயர் திருச்சிற்றேமத்து மகாதேவர் என்றும் குறிக்கப்பெற்றுள்ளன. எனவே இத்திருச்சிற்றேமம் என்ற ஊரே திருச்சிற்றம்பலம் எனச் சிதைந்து வழங்கப்பெறுகின்றது. இதுவே திருச்சிற்றேமம் என்னும் பாடல் பெற்ற பதி என்பது ஐயமின்றி ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். இதற்குச் சான்றாக இக்கோயில் கல்வெட்டொன்றைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

"கோவிராச கேசரி பன்மர்க்கு யாண்டு கூ ஆறாவது இவ்வாண்டு புன்றிற் கூற்றத்து குளக்குடி ஊரோம். இராசராச நாட்டு தேவதானப் பிரமதேயம் திருச்சிற்றேமத்து மகா தேவற்கு வேழ்வூருடையான் பூதி உத்தமன் வைத்த அத்தி மத்தியான அமுதினுக்கு ஊரோம் கொண்ட பொன் பன்னிரு கழஞ் சரையுங்கொண்டு இத்திருவமுதுக்கு இறை இழிச்சிக் குடுத்த நிலமாவது-[உடை] வாய் குளச்செயும், தெங்கன் விளாஞ்செயும் இவ்விரண்டும் சந்திராதித்தவல் திருவமிர்து அரிசி இருநாழி, நெய் அமிர்தும், கறியமிர்தும், அடைக்காய் அமிர்தும் இது சந்திரா

தித்தவல் ஸ்ரீ, [Taken from the South Indian Inscriptions Volume XIII No 156]

இராசராச நாட்டு தேவதானப் பிரம தேயம் திருச்சிற்றேமத்து மகாதேவர்க்கு, மத்தியான அமுதினுக்கு, வேழ்வூருடையான் பூதி உத்தமன், பன்னிருகழஞ்சரை பொன்னை, புன்றிற் கூற்றத்து குளக்குடி ஊரார்களிடத்தில் கொடுத்துள்ளான். அவ் வூரார்கள் அப்பொன்னைப் பெற்றுக் கொண்டு, இறைவர்க்குத் திருவமுது, நெய் அமுது, கறியமுது, அடைக்காய் அமுது இவைகளின் பொருட்டு, உடைவாய் குளச் செய், தெங்கன் விளாஞ்செய், என்னும் இரண்டு வயல்களை வரி நீக்கிக்கொடுத்துள்ள னர்—என்பது மேல் கூறப்பட்ட கல்வெட் டின் பொருட் சுருக்கமாகும்.

குறிப்பு:—மறையூர், பறையூர், சாத்தமங்கலம், விரைக்குடி முதலான ஊர்கள் புன்றிற் கூற்றத்தி லுள்ள ஊர்களில் சிலவாகும். இக்கூற்றம், முத லாம் இராசராசன் காலத்தில் பாண்டி குலாசனி வளநாட்டுப் பிரிவுகளில் ஒன்ருய் இருந்தது.

### ஏமநல்லூர் என்னும் வைப்புத் தலம்

தனிப்பதிகமின்றிப் பொதுப் பதிகங் களிலேனும், வேருெரு தலப்பதிகங்களி னிடையிலேனும் வைத்துக் கூறியிருப்பவை வைப்புத்தலங்கள் என்று கூறப்படும். அத்த கைய தலங்களிற் பல இக்காலத்தில் பண் டைப்பெயர் சிதைந்தும், அவையாண்டுள் ளன என அறிதற்கும் இயலாது இருக்கின் றன. அவற்றை அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுக்கள் உதவி செய்கின்றன. திரு நாவுக்கரசு சுவாமிகளது க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்திலுள்ள,

“எச்சி லிளம ரேம நல்லூ
  ரிலம்பையங் கோட்டூ ரிறையான் சேரி
அச்சிறு பாக்க மளப்பூ ரம்ப
  ராவடு தண்டுறை யழுந்தூ ராறை
கச்சினங் கற்குடி கச்சூ ராலக்
  கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியு மேகம் பத்துங்
  கயிலாய நாதனையே காண லாமே”

என்னும் பாசுரத்தால் ஏமநல்லூர் என்னும் வைப்புத்தலம் ஒன்று உண்டென்று பெறப் படுகின்றது. அது யாண்டுள்ளது என்று ஆராய்வுழி:—“கோவிராசகேசரி பன்மர்க்கு யாண்டு 2-ஆவது தென்கரை திரைமூர் நாட்டு திருவிடை மருதில் ஸ்ரீ மூலஸ்தானத் துத் தெற்கே எழுந்தருளியிருக்கும் புராண கணபதிகளுக்குக் கீழாநாட்டுக் கோனூர் கன்மி, வடகரை மண்ணிநாட்டு பிரமதேயம் ஏமநல்லூர் குராலை துக்கையகிரமவித்தன், திருவிடைமருதில் சேனையார் வழிகுடுத்த ஈழக்காசு அ. இக்காசு எட்டினுல் வந்தபொலி யூட்டினுல் சந்திராதித்தவல் நிசதம் பத்து வாழைப்பழம் இடுவோமானேம். திருவிடை மருதில் சேனையோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை”—என்னும் திருவிடை மருதூர்க் கல் வெட்டினுல்* காவிரிக்கு வடகரையிலுள்ள மண்ணிநாட்டில் உள்ளது என்று பெறப் படுகிறது.

காவிரிக்கு வடகரையில் உள்ள மண்ணி நாட்டு ஏமநல்லூர் என்னும் ஊரில் இருந்த குராலை துக்கைய கிரமவித்தன் என்னும் அந்தணன், கீழாநாட்டுத் தலைவனுக்குக் காரி யம் பார்ப்பவனுய் இருந்தான். இவன் திரு விடைமருதூர்க் கோயிலில் மூலஸ்தானத்துக் குத் தெற்கே எழுந்தருளியிருக்கும் புராண கணபதிகளுக்கு நாடோறும் பத்து வாழைப் பழங்களை இடுவதற்கு, திருவிடை மருதூரில் இருந்த சேனையாரிடம் (Military body) எட்டு ஈழக்காசைக் கொடுத்து அதன்வட்டி கொண்டு அதை நடத்துமாறு ஏற்பாடு செய் திருந்தான் என்பது இக்கல்வெட்டின் பொருட் சுருக்கமாகும்.

இந்த ஏமநல்லூர் முதலாம் இராசராச சோழனுடைய இராச்சிய ஆண்டு 29, அதா வது கி. பி. 1014-க்குச் சிறிது முன்பே திரை லோக்ய மகாதேவி சதுர்வேதி மங்கலம் என் னும் பெயர் பெற்றுள்ளது. இச்செய்தி “இராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு மண்ணி நாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்ய மகாதேவி சதுர்வேதி மங்கலத்து ஸபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு”—என்னும் கல்வெட்டுப் பகுதியால்* அறியக் கிடக்கின்றது. [பரிசாரகம்—ஏவல் தொழில்; சமையல் தொழில். மாண் — பிரமசாரி] திரை லோக்ய மகாதேவி என்பார் முதலாம் இராச ராச சோழனுடைய தேவியர்களில் ஒருவர் ஆவர். அவர் பெயரை இந்த ஏமநல்லூர்க்கு முதல் இராசராச சோழன் இட்டுள்ளான்.

* S. II. I Vol. XIII. No. 7
* S. I. I. Vol. II Part III Page 317.

இந்த ஏமநல்லூரில் உள்ள கைலாசமுடையார் கோயிலில், முதலாம் இராசராசசோழனுடைய மகனாகிய இராசேந்திர சோழனின் பதினொன்றாம் இராச்சிய ஆண்டில் பொறிக்கப்பெற்றுள்ளகல்வெட்டு "இராஜேந்திரஸிங்க வளநாட்டு மண்ணி நாட்டுப் பிரமதேயம் திரைலோக்ய மகாதேவி சதுர்வேதிமங்கலம்" என்று இவ்வூரைக் குறிப்பிடுகின்றது. எனவே இந்த இராசேந்திர சோழன் காலம் தொடங்கி ஏமநல்லூர் என்னும் பெயர்போய், திரைலோக்ய மகாதேவி சதுர்வேதிமங்கலம் என்றே வழங்கப்பெற்று வந்தது. இவ்வூரில் இக்காலம் சுந்தரேஸ்வரர் கோயில் என்று அழைக்கப்பெறும் திருப்பரசுராமேச்சரம் உடையார் கோயிலிலுள்ள திரிபுவனச்சக்கரவர்த்தி இராஜராஜதேவரின் 19-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இவ்வூரை விருதராச பயங்கர வளநாட்டு மண்ணி நாட்டு தைலோக்கியாகிய விருதராச பயங்கரச் சதுர்வேதி மங்கலம் என்று கூறுகின்றது. எனவே இத்திரைலோக்கி என்ற பெயரும் மாறி விருதராச பயங்கரச் சதுர்வேதி மங்கலம் என்னும் புதுப்பெயரும் இதற்கு உண்டாயிற்று. எனினும், இக்காலம் இதற்குத் திருலோக்கி என்ற பெயர் நின்று நிலவுகின்றது.

இடையார்நல்லூர், இடவை, நாட்டார் மங்கலம், திருப்பனந்தாள், வேம்பற்றூராகிய அவனிநாராயண சதுர்வேதி மங்கலம் (வேப்பத்தூர்), திருக்குடித் திட்டை (திருக்கழித் திட்டை), திருவிசலூர் முதலான ஊர்கள் இம் மண்ணிநாட்டில் உள்ள ஊர்களுள் சில வென்று கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இவ்வூர்களெல்லாம் இக்காலம் தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுகாவில் இருக்கின்றன. எனவே ஏமநல்லூர் என்னும் வைப்புத்தலம் கும்பகோணம் தாலுகாவில் திருப்பனந்தாளுக்குத் தென்கிழக்கே சுமார் மூன்று மைல் தொலைவில் உள்ள திருலோக்கி என்னும் ஊரிலிருக்கும் கைலாசமுடையார் கோயிலேயாகும் என்பது தேற்றம்.

குறிப்பு:—இராசேந்திரசிங்க வளநாட்டின் கிழக்குப் பகுதி முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் விருதராச பயங்கர வளநாடு என்னும் பெயர் பெற்றுள்ளது என்பது ஈண்டு அறியத்தக்க தொன்றும்.

இந்த ஏமநல்லூர் கயிலாயமுடையார் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டுப் பகுதியில் "இராஜேந்திர சோழதேவர் கங்கைகொண்டு எழுந்தருளுகிற இடத்து திருவடிதொழுது" எனக் குறிக்கப்பெற்றுள்ளது. முதலாம் இராசேந்திரசோழன் வடநாட்டு மன்னர்களை வென்று கங்கை கொண்டுவந்தபொழுது, நேரே, தன்னுடைய தலைநகர்க்கு எழுந்தருளாது இந்த ஏமநல்லூர் வந்து இறைவரை வணங்கி அதன்பிறகு இவ்வூர்க்கு வடமேற்கே சுமார் பத்து மைல் தொலைவில் உள்ள தன் தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்துக்குச் சென்றான் என்றால் இது ஒரு சிறப்புடைய பதி என்பது அவன் உள்ளத்தில் நிலவி யிருக்கவேண்டும்.

---

இந்துசமய அறநிலைய (ஆட்சி)த்துறை ஆணையர் அலுவலகம், சென்னை.

சுற்றறிக்கை (D. Dis) எண். 30894/61-நாள் 21—8—61.

**பொருள்:** திருட்டு—கோயில்களில் திருட்டு—இந்துசமய அறநிலைய (ஆட்சி)த்துறை அலுவலர்களுக்குத் தெரிவித்தல் பொருட்டு அறிவுறுத்துதல்.

சமீபகாலமாகக் கோயில்களில் திருட்டுகள் நடந்து வந்திருக்கின்றன. (வெகு சமீபத்தில் அம்பாசமுத்திரத்திலுள்ள கோயில்களில் திருட்டுகள் நடந்திருக்கின்றன). ஆனால் அவைகளில் எந்த நிகழ்ச்சியைப்பற்றியும் ஆணையருக்குத் தகவல் அறிவிக்கப்படவில்லை. கோயில்களில் திருட்டுகள் நடப்பதைப் பற்றி—நடந்த இருபத்துநான்கு மணிக்குள்—ஊர்க்காவல் அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்படுவதைப்போல—இந்து சமய அறநிலைய (ஆட்சி)த்துறை அலுவலர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது மிகவும் அவசியமும் தவிர்க்கக்கூடாததுமாகும்.

2. கோயில் நிர்வாகிகள் அனைவரும் மேற்படி கட்டளையைப் பின்பற்றத் தவறுவார்களானால் கடுமையான நடவடிக்கைக்கு உரியவர்களாவார்கள்.

---

கடவுளே உயிர், கடவுளே சத்தியம், கடவுளே ஒளி, கடவுளே அன்பு என்று நான் அறிந்துகொள்கிறேன்.

—மகாத்மா காந்தி.

# சிவஞானபோதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன்இதழ்த் தொடர்ச்சி)

இரண்டாம் சூத்திரம்: முதலதிகரணம்:—

## (v) அத்துவிதம் என்னும் சொல்லியல்பு

அத்வைத என்பது ந+த்விதா என வைத்துப் புணர்த்தப்படும் ஒரு தொகை நிலைத் தொடர் ஆகும். இதில் உள்ள த்விதா என்னும் வருமொழி இருதிறன், இருவிதம், அல்லது சுருக்கமாக இரண்டு எனப் பொருள்படும். முன் உள்ள ந என்பது பின் வரும் மொழிப்பொருளை நீக்குவது. இதனை வடநூலார் நஞ்(ஞு) எனக் குறியிட்டு வழங்குவர். ந+களங்கம்=அகளங்கம் என்றாற்போல வருமொழி முதல் மெய்யெழுத்திருந்தால் தன் மெய் கெட்டு அ என நிற்கும். உயிர் முதல் மொழியோடு புணரும்போது தன் உயிரும் மெய்யும் முன்பின்னாக மாறி அந் என நிற்கும்; ந+அச்சுவம்=அநச்சுவம் (அந்+அச்சுவம்) என ஆதல் காண்க. இது பொதுவிதி.

ந என்பது யசுர்வேதத்தும் சுவேதாசுவதர உபநிடதத்தும் த்விதீய (இரண்டாவது) என்னும் சொல் முன்வந்து மேற்கூறிய மாறுதலின்றியே நத்விதீய என நிற்றல் அதன் பழைய புணர்நிலை இயல்பைக் காட்டும் என அறிஞர் கூறுவர். இவ்வாட்சி அவற்றில் "ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாயதஸ்தே" எனவும், "ஏகோஹி ருத்ரோ நத்விதீயாயதஸ்து:" எனவும் முறையே வந்துள்ளன. இவற்றின் பொருள் "ஒருவனே உருத்திரன்; இரண்டாவது அல்லாத நிலையினன்" என்றபடி.

நேர்ந்த மொழிப்பொருளை நீக்கவரும் இந்த நகாரம் பல்வகைப் பொருளை உடையதேனும், இங்குக் குறிப்பிடத்தக்கவை மூன்றே ஆகும். அவை இன்மை. அன்மை, மறுதலை என்பவையாகும். அகளங்கன், அநங்கன் என்னும் சொற்கள் களங்கம் இல்லாதவன், அங்கம் (உருவம்) இல்லாதவன் என்னும் பொருளைத் தருதலின் இவற்றில் உள்ள ந அதனது இன்மை (தத் அபாவம்) என்னும் இன்மைப்பொருளை உடையது என்று உணரப்படும்; இன்மையாவது பொருளையோ குணத்தையோ இல்லை எனல். அப்பிராமணன் என்பது பிராமணனைப் போலப் பூணூல் அணிந்து வேத ஒழுக்கம் பூண்டுள்ள க்ஷத்திரியனை அல்லது வைசியனைக் குறித்துப் பிராமணன் அல்லாதவன் என்ற பொருளில் வழங்குவது; அநச்சுவம் என்பது. அச்சுவம் போன்ற (குதிரையைப் போன்ற), ஆனால் அச்சுவம் அல்லாத கோவேறு கழுதையைக் குறிப்பது. அநேகம் என்பது ஒன்றைப் போன்ற, ஆனால் ஒன்று (ஏகம்) அல்லாத பல என்னும் எண்ணுப்பொருளையே குறிப்பது. இவ்விடங்களில் நகாரம் அஃது அன்மை (தத் அந்நியம்) என்னும் அன்மைப்பொருளில் வந்ததாகக் கூறப்படும். இப்பொருளையே அதனது ஒப்புமை (தத் சாதிருச்யம் அல்லது தத் சாமியம்) எனவும் வழங்குவர். அன்மையாவது குறிப்பிட்ட பொருளாக இராமை. இனி, அதன்மம் என்னும் சொல் தன்மத்திற்கு மறுதலையாகிய பாவத்தைக் குறித்தலின், இதில் உள்ள நகரம் அதனது மறுதலை (தத்விருத்தம்) எனப்படும் எதிர்மறைப் பொருண்மையைக் குறித்தது எனப்படும். நஞ்ஞு இங்ஙனம் மூவகைப் பொருள் உணர்த்தும் என்பதைப் பிரயோக விவேக நூலார் "நஞ்ஞுச்—சொற்பொருள் அன்மை, மறை இன்மை காட்டும்" எனவும்,

"ததபாவம் ததன்னியம் தத்விருத்தம்—
என மூன்றாகும் நஞ்ஞுதற் புருடன்" எனவும் தமிழ் வழக்கும் வடமொழி வழக்கும்பற்றிக் கூறினர்.

இனி அத்வைதம் என்னும் சொல்லில் வரும் நகரத்திற்கு இன்மைப்பொருள் கொள்வர் சங்கரர், இராமாநுசர் முதலியோர்.

சத்தியத்தை நாடுவதுதான் உண்மையான பக்தி —மகாத்மா காந்தி.

கொள்ளும்போது இரண்டின்மை ஒன்றின் கண்ணேயாகலின், "ஒன்று" எனப் பொருள் படும் என்பார். இவ்வாறு இன்மைப் பொருள்பற்றி ஒன்றெனப் பொருள்கொள்ளி னும் அச்சொல்லையுடைய சுருதிக்குத் தாற் பரியம் (கருத்து) கொள்ளும்போது வேறு வேறு தாற்பரியம் கொள்வர்.

இவ்வாராய்ச்சியில் இவர்களால் எடுத்துக் கொள்ளப்படும் முக்கிய சுருதி "ஏ குழந்தாய், இது முன் சத்தாகவே இருந்தது; ஒன்றே அத்வி தீயம்" என முன்னர்க் காட்டிய சாங்தோக் கிய உரையே ஆகும். இச்சுருதிப்பொருள் பற்றித் திருநாவுக்கரசர்

'காலமு நாள்கள்ஊழி படையாமுன்
ஏக உருவாகி மூவர்உருவில்
சாலவுமாகிமிக்க சமயங்கள் ஆறின்
உருவாகி நின்ற தழலோன்'

என அருளிச்செய்தமை அதன் கருத்தை ஐய மின்றித் தெளிதற்கு உறுதுணையாக நிற்கும். இதனுல் கடவுள் ஒருவரே என்பதும் அவர் உலகெல்லாமாகி நிற்பவர் என்பதும் விளங்கும். இனி, மேற்சுருதியில் வந்துள்ள இது (இதம்) என்பது காணப்படும் உலகைக் குறிக்கும். உலகு அறிவுள்ளது (சீவான்மாக்கள்), அறி வில்லது (தனுகரண புவன போகங்கள்) என இருவகைப்பட உள்ளது. சத்தாகவே (ஸதேவ) என்பதில் உள்ள சத்து (உள்ளது, செம்பொருள்) என்னும் சொல் முதற் பொருள் அல்லது பெரும்பொருள் (பிரமம்) எனப்படும் கடவுளைக் குறிக்கும். பின்னர் வந்துள்ள ஒன்றே இரண்டாவது அற்றது (ஏக மேவ அத்விதீயம்) என்னுங் தொடரில் உள்ள 'ஒன்று' 'இரண்டாவதற்றது' என்பவற் றின் பொருள்பற்றியதுதான் நமது ஆராய்ச்சி. இரண்டாவதற்றது (அத்விதீயம்) என்பதன் பொருளும் ஒன்று என்பதே என்று பிரம சூத்திர பாடியகாரர் எல்லோரும் கொண்டுள்ளனர்.

அவர்களுள் சங்கரர், ஒன்று எனப் பொருள் கொண்டதோடு அமையாது, கேவ லம் ஒன்று (ஒன்று மாத்திரம்) எனத் தம் கருத்தை வலியுறுத்துவர். இவர் கருத்தின் படி த்விதீய என்பதனுற் குறிக்கப்படும் உலகு, முதற்பொருள் என்னும் இரண்டனுள் உலகின் உண்மையை மறுக்கின்றது முன் னின்ற நகாரம். மேலும் சத்தாகவே என்ற தற்கு உண்மை மாத்திரமாக எனப் பொருள் கூறுவர் இவர்; இதனுல், பிரமம் ஒரே பொருள்; அது குணகுணி என வேற்றுமை தோன்ற நிற்ப தன்று; தன்னின் வேருய் ஒரு பொருளுமின் றித் தானும் குணம் உடைய பொருள் எனக் கூறப்படுதலின்றி நிருவிசேடமாய் நிற்பது முதற்பொருள் என்பதே அத்விதீயம் என்ற தன் தாற்பரியம் என்பர். இங்ஙனம் இவர் கேவலம் என்னும் அடையை அத்வைதம் என் பதோடு சேர்த்துத் தங் கருத்தைச் சாதித்த லின் கேவலாத்துவிதி என வழங்கப்படுவர். இவர் கருத்தின்படி சந் என்பது உள்ளது செம்பொருள் எனப் பொருள்படாது; இருப்பு, இருத்தல் என்பதாகவே பொருள்படும்.

முதற்பொருளுக்குச் சத்திய சங்கற்பம் முதலிய குணங்கள் உபநிடதங்களுட் கூறப் படுகின்றன. "அது. நான் பலவாக வளர் வேன் ஆக என நினைத்தது" (தத் ஐக்ஷத் பஹூஸ்யாம் ப்ரஜாயே யேதி) என்முற் போன்ற வசனங்கள் கருதத்தக்கவை; பசு, பாசங்களின் உண்மையும் அதன்தன் இலக் கணங்களோடு கூறப்படுகின்றன. ஆதலினுல் நீலகண்டரும், இராமநுசரும் கேவலாத்துவி தக் கொள்கையை மறுத்து விசிட்டாத்துவிதம் கொண்டனர். இவர்கள் கொள்கையின்படி யும் அத்விதீயம் என்றது ஒன்று என்றே பொருள்படும். ஆனுல் அதுபற்றிப் பசுபாசங் கள் இல்லையென்றே, பரப்பிரமத்துக்குக் குணங்கள் இல்லையென்றே கூறவேண்டா; 'இந்நாட்டு அரசன் ஒருவனே' என்முல், அங்கு வேறு மக்கள் யாரும் இலர் என்றே, அவ னுக்கு ஆடை, அணி, முடி முதலிய எதுவும் இல்லை என்றே பொருள்படாது; அது போல முதற்பொருள் அத்விதீயம் என்ற சுருதி உலகத்தின் உண்மையினையும், முதற் பொருளின் இறைமைக் குணங்களையும் மறு தலைக்காது. பசு பாசங்கள் முதற்பொரு ளோடு,(உயிர்க்கு உடம்புபோல) அநந்நிய மாம் இயைபுடையவை; சத்திய சங்கற்பம் முதலியவை முதற்பொருளின் வேறல்ல. ஆதலால், பசு பாசங்களாலும் இறைமைக் குணங்களாலும் அடுக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை, ஒன்றேன்

---

நாம் செய்த தவறுகளுக்கு மனம் வருந்தும் சந்தர்ப்பங்களை கடவுள் எப்போதும் அளிப்பார்.

—மகாத்மா காந்தி.

பதே கருத்து என்பர். இவர்கள் தம் கருத்தைச் சாதித்தற்கு விசிட்டம் (விசேடணத்தோடு கூடியது) என்னும் அடைமொழியை அத்துவிதத்தோடு கூட்டி உரைத்தலின், விசிட்டாத்துவிதிகள் என வழங்கப்படுவர்.

சங்கரர் கி. பி. எட்டாம் நூற்றாண்டினர் என்பதும், அவர்தம் கேவலாத்துவிதத்தை மறுத்து விசிட்டாத்துவிதம் நிறுவிய இராமாநுசர் பதினொன்றாம் நூற்றாண்டினர் என்பதும் கருதத்தக்கவை. நீலகண்டரைச் சங்கரர்க்கு முற்பட்டவர் என்பாரும் ஒன்பதாம் நூற்றாண்டினர் என்பாரும் உளர். நீலகண்டர் மதம் சிவாத்துவிதம் என வழங்கப்படுகிறது.

இனி, பதின்மூன்றாம் நூற்றாண்டினராகிய மத்துவர் தன்மத்தின் மறுதலையை அதன்மம் என்றாற்போல இரண்டன் மறுதலை என்பது இருபொருட் கண்ணது ஆதலின், உலகமும் உண்டு, முதல்வனும் உளன்; அவை ஒன்றை ஒன்று சார்ந்தவை அல்ல; முதல்வனுக்கும் உலகுக்கும் சுதந்தரம் உடைமையும் இன்மையும் இயல்பு; உலகு முதல்வனால் ஆளப்படுவது எனக் கூறலாமேயன்றி, வேறு அந்நிய சம்பந்தம் கூறுதல் பொருந்தாது என்பர். இவர் மதம் பேதவாதம், அல்லது துவிதம் எனப்படும். இவர் கொள்கைப்படி அத்விதீயம் என்ற சொல் த்விதம் என்றே பொருள்படும். இதனால் இவர்களுக்கு நேர்ந்துள்ள இடர்ப்பாடுகள் நன்கு விளங்கும்.

மேற்கூறிய மதங்களுள் சங்கரர் மதமும் மத்துவர் மதமும் சுருதிகளோடு முரண்படுபவை. நீலகண்டரும் இராமாநுசரும் கூறும் பொருள் சுருதிகளோடு முரணாதவை எனினும், அத்விதீயம் என்பது ஒன்றெனப் பொருள்படாது என்பது உணரத்தக்கது. த்வி, த்விதா, த்விதீய என்பவை எண்ணுப் பெயரின் முன்வரும் நகரம் இன்மை, மறுதலைப் பொருள்களை உணர்த்துதல் வழக்கின்கண் இல்லை. அநேகம் அப்பிராமணன் என்ற சொற்களில் உணர்த்தி நிற்றல்போல அன்மைப்பொருளையே உணர்த்தும். உணர்த்துதலின், அத்துவிதம் என்றது இரண்டு அல்ல எனவும், அத்விதீயம் என்றது இரண்டாவது அல்லது எனவும் பொருள்தந்து முதற்பொருளும் உலகமும் வேறன்றி (அநந்நியமாய்ப் பிரிப்பின்றி) உடனாய் நிற்கும் என்ற கருத்தையே தரும். இக்கருத்தை முதல் முதல் தெளிவுபடுத்தி வெளியிட்டவர் மெய்கண்டதேவரே ஆவர். இஃது அவர் கூறிய "அத்துவிதம் என்ற சொல்லே அந்நியநாத்தியை உணர்த்துமாயிட்டு" என்னும் வார்த்திகப் பகுதியாலும் பிறவாற்றாலும் உணரப்படும்.

## (vi) சில தடையும் விடையும்

(அ) தடை: வேதத்துள் அத்துவிதம் என்றதோடு ஏகமே என்பதும் கூறப்படுகின்றது. அது வேறு பொருள்படாமையால், அதனோடு முரண்படும் வகையில் அத்துவிதம் என்ற சொல் உடனாய் நிற்றலைக் குறிக்கும் என்றல் பொருந்தாது; மேலும் 'அவனையன்றிக் காண்பார், கேட்பார், நினைப்பார், அறிவார் பிறர் இல்லை' என முன்னர்க் காட்டிய பிருகதாரணிய உரை பிரமப் பொருளையன்றிப் பிறிதொருபொருளும் இல்லை என்றே பொருள்படும். இதுவும் ஒரு பொருட் கொள்கையினையே ஆதரிக்கின்றது—எனின்,

விடை: ஏகமேவ என்றது ஒன்றே எனவே பொருள்படும்; வேறு பொருள் படாது. ஆனால் சொற்களின் பொருளை அகராதி முதலியவற்றைப் பார்த்துத் தெரிந்து கொண்டால் போதாது. அவை வந்துள்ள இடம்பற்றி உய்த்துணர்ந்து சுருதிகளின் தாற்பரியம் உணர்தலே வேண்டற்பாலது. இங்கே ஒன்றே என்றதன் தாற்பரியம் பதிப்பொருள் ஒன்றே என்பது ஆகும். அது "விண்ணும் மண்ணும் தோற்றுவிக்கும் தேவன் ஒருவனே" எனவும், "ஒருவனே உருத்திரன் அவன் இரண்டாமவனாக நிற்பான் அல்லன்" எனவும் சுவேதாசுவதரத்து வந்துள்ளமையாலும், பிறவாற்றாலும் தெளியப்படும். இங்ஙனம் சுருதிப்பொருளைக் கேட்டுத் தெளியும் நீ பிரமம் ஆகாய்; பாசத்தோடு கூடியிருத்தல்பற்றிப் பசு (கட்டுப்பட்டவன்) எனப்படுவாய் என்பதும் உணர்க. எழுத்துக்களின் இயக்கம் அகரவுயிரின்றி நிகழாது; ஆதலால் 'அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இல்லை' எனப்படும். அது போல, உயிர்களின் காண்டல், கேட்டல், நினைத்தல், அறிதல் முதலிய பிரவிருத்திகள்

---

கடவுள்கூட வெவ்வேறானவர்களுக்கு வெவ்வேறு உருவங்களில் தோன்றுவதில்லையா? ஆயினும் அவர் ஒருவரே என்பதை நாம் அறிவோம். —மகாத்மா காந்தி.

எல்லாம் பிரமப்பொருளின் உபகாரத்தை இன்றியமையாதவை என்பதே பிருகதாரண்ணிய சுருதியின் கருத்தாம் என உணர்க. "அவன் அன்றி ஓரணுவும் அசையாது" என்பதும் காண்க.

'ஒன்றென்ற(து) ஒன்றேகாண்;
ஒன்றே பதி; பசுவாம்
ஒன்றென்ற நீ; பாசத்
தோடுளேகாண்—ஒன்றின்ருல்
அக்கரங்கள் இன்ரும்
அகர வுயிரின்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கு'

என்பது மேற்கூறிய கருத்தடங்கிய உதாரணச்செய்யுள். 'இருக்கு அகர உயிரின்றேல் அக்கரங்கள் இன்ரும் (என்னும்) இக்கிரமத்து, (பிரமம் இன்ருயின்) ஒன்று(ம்) இன்று என்னும்—என முடிக்க.

(ஆ) தடை: நல்லது; ஏகமாகிய பிரமத்தை ஏகம் என்றல் பொருந்தும். சில இடங்களில் 'சிவோத்வைத' என்ருற்போல 'பிரமம் அத்துவிதம்' எனவும் கூறப்படுதற்குக் காரணம் யாது? அத்துவிதம் இருபொருட்கண்ணது எனக் கொள்ளின், ஒருபொருளை அத்துவிதம் என்றல் பொருந்தாது அன்றே!—எனின்,

விடை: அவ்விடங்களில் அத்துவிதம் என்றது பிரமம் உயிர்களில் வேற்றுமையின்றி நிற்பது என்ற பொருளை உடையது. ஆதலின், அஃது ஏகம் என்பதனேடு முரணுமாறில்லை என உணர்ந்துகொள்.

பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம்—
அண்ணல்தாள்
அத்துவித மாதல் அருமறைகள் ஒன்றென்
ல(து)
அத்துவிதம் என்றறையும் ஆங்கு

என்பது இக்கருத்தைக் கொண்ட உதாரணச் செய்யுள்.

தொகுப்புரை:—

இங்ஙனம் செய்த ஆராய்ச்சியால் சித்தாந்த சைவர்களது கருத்தின்படி, அத்துவிதம் என்னும் சொல் முதற்பொருள்; உலகு எனக் கருதப்பட்ட இருபொருள்களுள் முதற்பொருளின் உண்மையை மறுத்து உலகு ஒன்றே உண்டு என்ருே, உலகின் உண்மையை மறுத்து முதற்பொருள் ஒன்றே உண்டு என்ருே அழித்துக்கூற எழுந்தது அன்று; உலகை முதற்பொருளின் காரியம் எனக் கொண்டு ஒன்று மற்ருென்றன் விகாரம் என்ருே, விருத்தி என்ருே, விவர்த்தம் என்ருே கூறவும் வந்தது அன்று; ஒன்றை மற்ருென்றன் குணம் என்று கூறவந்ததும் அன்று; பின்னர், காந்தம் இரும்பைத் தன் சத்தியால் அடங்கக்கொண்டு வியாபித்து இயக்குமாறுபோல, முதற்பொருள் உலகுஉயிர்களைத் தன் ஆளும் ஆற்றலின் அடங்கக்கொண்டு அவற்றை உணர்த்தியும் செலுத்தியும் நிற்கும் நிலையில் அவ்விரண்டு பொருளுக்கும் உள்ள இயற்கைச் சம்பந்தத்தைக் குறிக்க வந்ததே ஆகும். இச்சம்பந்தம் அது தான் ஆதல் (தாதான்மியம்) எனப்படும். தத்—அது, ஆன்மா—தான்; தாதான்மியம்-அதுதான் என நிற்கும் இயைபு. இக்கருத்துப்பற்றியே 'அவையேதானேயாய்' எனச் சூத்திரம் செய்யப்பட்டது.

அதுதான் ஆதல் எனப்பட்ட தாதான்மியம் இருவகைப்படும்:

(i) பூவும் மணமும் ஒரு பொருளே குணகுணிகளாய் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்பவை; கையும் விரலும் அங்ஙனமே ஒரு பொருளே அவய அவயவிகளாய் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்பவை. இங்ஙனம் ஒருமையின் இருமை (duality in unity) ஆதற்கு ஏதுவாய் உள்ள சம்பந்தம் தாதான்மியம் (அதுதான் ஆதல்) எனப்படும்; பேதாபேதம் எனப்படுவதும், தருக்க நூலுள் சமவாயம் எனப்படுவதும் இச்சம்பந்தமே ஆகும்.

(ii) இனி, கண் பொருள்களைக் காணும்போது, அதனைக் காணும் உணர்வுடையதாக்கிப் பொருள் முகமாகச் செலுத்துவது காண்போனது கருத்தென்பது வெளிப்படை. இங்கே கண்ணும் கருத்தும் இருவேறு பொருள்கள்; இவை காணுதற்ருெழில் நிகழும்போது, அது அதுவாய் ஒற்றுமைப்

கடவுளே சத்தியம் என்று கூறுவதைக் காட்டிலும் சத்தியமே கடவுள் என்று சொல்லுவதுதான் அதிகப் பொறுத்தமானது.
—மகாத்மா காந்தி.

பட்டு ஒன்ருய் நிற்கும். இங்ஙனம் இரு பொருள் ஒற்றுமைப்பட்டு ஒன்ருய் நிற்றற்கு ஏதுவாகிய சம்பந்தமும் தாதான்மியம் என்றற்கு உரியது. ஆயினும் இது முன்னையதைப் போல ஒருமையின் இருமையாகாது இருமையின் ஒருமை (unity in duality) ஆதல் பற்றி, அத்வைதம் என வேறு வழங்கப்படும். அத்துவிதம் என்னும் சொல்லியல்பு மேற் கூறியபடி வேறு பொருள் தருதல் இன்றி அன்மைப் பொருள்பற்றி இரண்டல்ல என வேற்றுமைப்படாமையை உணர்த்தி நிற்றலால் இருமையின் ஒருமையாகிய, அது அது ஆதல் என்னும் வாய்பாட்டால் உரைக்கத் தக்க, சம்பந்தத்தைக் குறிப்பது ஆதல் காண்க.

ஏகமேவாத்விதீயம் என்னுந் தொடரின் பொருளை இங்ஙனம் கோடலே திருநெறி எனப்படும் சிவநெறியின் தொன்று தொட்ட மரபு என்பதை

"இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்"

என்னும் ஆளுடைய பிள்ளையாரது அருமறையால் உணரலாகும். இங்கு ஆராயப்பட்ட சுருதியில் ஏகமேவ (ஒன்றே) என்ற தன் பொருளை ஒருமையின் பெருமை (எல்லாந் தன்னுட்கொண்டு தானே ஆம் பெருமை) என்றதனுலும், அத்விதீயம் என்பதன் பொருளை இருமையின் ஒருமை என்றதனுலும் பெறவைத்தமை உணரத்தக்கது. இப்பொருள் செறிந்த (மலத்தினீங்கிச் சிவமேயாய) தமது உறுதியுரையாகிய திருஎழுகூற்றிருக்கையைக் கழுமலம் எனப்படும் பழைய பதியில் எழுந்தருளிய கபாலத்தில் உண்போனுகிய முதல்வன் பொருளாகக் கொண்டு அருளும் என்கின்ருர் பிள்ளையார்.

அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளை இங்ஙனம் இரண்டு அல்ல எனக் கொண்டு உரைக்கப்படும் அவையேதானே ஆதல் என்னும் இருமையின் ஒருமைச் சம்பந்தம் (அத்வைத சம்பந்தம்) அச்சொல்லோடு கேவலம் என்றோ, விசிட்டத்தினுல் என்றோ, மறுதலையான் என்றோ யாதேனும் ஓர் அடைமொழி கூட்டாமலே, அச்சொல்லினின்றும் இயற்கையாகப் பெறப்படும் பொருளாதல் காண்க. இக்கருத்துப்பற்றி இதனைச் சுத்தாத்துவிதம் என்றல் வழக்கு. சுத்தம்—அடையொடு புணர்க்கப்படாதது. மேலும், இங்குக்கூறிய பொருள் தத்துவமசி முதலிய மகாவாக்கியப் பொருள் உணர்தற்குக் கருவியாதல் பற்றி மகர வாக்கியத்தில் உள்ள வாய்பாடு தோன்ற அவையே தானேயாய் எனச் சூத்திரம் செய்யப்பட்டது என்பதும் உணரத்தக்கது.

அத்வைத, அத்விதீயம் என்ருற்போல உபநிடதங்களுள் முதற்பொருளுக்கு அடையாகக் கூறப்படும் அத்துவிதச் சொல்லை மேற்காட்டியவாறு முதற்பொருளுக்கு உலகுயிர்களோடு உள்ள இருமையின் ஒருமைச் சம்பந்தத்தை உணர்த்துவதாகக் கொள்வதே தொன்றுதொட்டு வரும் கேள்வியோடு உண்மையனுபவம் பெற்ற மெய்யுணர்ந்தோர் மரபு என்பதையும், பிறவாறு உறைப்பன எல்லாம் கலை ஞானத்தால், யாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் எனச் சாதிப்பேம் என்பாரைப் போன்ருரால் எழுதிவைத்துப் பிரசாரஞ் செய்யப்படும் ஆரவார உரைகளே ஆம் என்பதையும் பின்வரும் தாயுமான அடிகளின் வேண்டுகோளோடு கூடிய இரக்கவுரைகள் தெரிவிக்கும்:—

"பொய்கண்டார் காணப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதன்அருள் மேவுநாள் எந்நாளோ!"

"ஆணவத்தோ டத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவிதம் சாருநாள் எந்நாளோ!"

"அத்துவிதம் என்ற அருமறைச்சொற் கண்டுணர்ந்து
சுத்தசிவத்தைத் தொடருநாள் எந்நாளோ!"

எனவரும்.

இங்குக் கூறிய அத்துவித சம்பந்தம் யாற்று நீரும் கடல் நீரும் சேர்ந்தாற்போல எனவும், குடாகாயமும் மகாகாயமும் சேர்ந்தாற்போல எனவும் உவமைகாட்டிக் கூறப்

---

கடவுளுக்குக் கோடானகோடி ரூபங்கள் இருப்பதால் அவர் ரூபமற்றவர் என்றும் சொல்லுகிருேம். —மகாத்மா காந்தி.

படும் அபேத சம்பந்தமாகிய ஐக்கியம் (ஏகத்தின் சம்பந்தம்) அன்று; பொற்பணிபோல் எனக் கூறப்படும் அபேதமும் அன்று; குண குணிகளுக்கும் அவயவ அவயவிகளுக்கும் உள்ளதாகிய பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமும் அன்று; விரலும் விரலும் கூடி நின்றாற்போல எனப்படும் பேதசம்பந்தமாகிய சையோகமும் அன்று. பின்னர் உடலுயிர் போன்றதோர் கலப்பும், கண்ணும் ஞாயிற்றின் ஒளியும் போன்று வேருதலும், கண்ணும் கருத்தும் போன்று உடன் ஆதலும் என்னும் மூன்றும் தோன்ற நிற்பது.

இதனையும் தாயுமான அடிகள் சிந்தித்துத் தெளிந்து பின்வரும் செய்யுளால் உணர்த்துகின்றார்:—

"அப்பொருளும் ஆன்மாவும் ஆரணநூல்
சொன்னபடி
தப்பிலாச் சித்தொன்ருஞ் சாதியினல்—
எப்படியும்
தேரில் துவிதம் சிவாகமமே சொல்லுமிட்டை
ஆருமிடத்(து) அத்துவிதம் ஆம்"

எனவரும்.

இங்கு அத்துவிதம் என்ற சொல்லை உடனுதல் என்னும் பொருளைத் தரும்படி ஆண்டிருத்தலை உய்த்துணர்ந்து கொள்க.

(தொடரும்)

---

**சென்னை—மயிலாப்பூர்** :—கபாலீசுவரர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபம், கபாலீசுவரர் தேவாரப்பாடசாலை என்ற இருமண்டபங்களுக்கும் கால்கோள் விழா 28—8—61-ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் செய்து வைத்தார்கள்.

**தாராபுரம்** :—கலியாணராமர் கோயிலில் மகா கும்பாபிஷேகம் 14—9—61-ல் நடைபெற்றது.

**உப்பிலியப்பன்கோயில்** :—சீனிவாசப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 12—9—61 முதல் 22—9—61 வரையில் நடைபெற்றது.

**பழனி** :—தண்டாயுதபாணிசுவாமி கோயிலுக்கு ஆந்திரமாகாண அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. கே. சந்திரமௌலி அவர்களும், திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. சி. அண்ணாராவ் அவர்களும் விஜயம் செய்தார்கள். அவர்கள் பழனி ஆண்டவர் கீழ்த்திசைக் கலைக்கல்லூரியையும் சுற்றிப் பார்த்தார்கள்.

**பெண்ணகடம்** :—பிரளய காலேசுவரர் கோயிலில் மெய்கண்டரார், கலிக்கம்ப நாயனார் இவர்களுக்கு மகாகும்பாபிஷேகம் 14—9—61-ல் அறநிலைய ஆட்சித்துறை, சென்னை துணை ஆணையர் திரு. டி. இராமலிங்க ரெட்டியார், அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**காரைக்குடி** :—மீனாட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் இந்து மதாபிமான சங்கத்தின் 44-ஆவது ஆண்டுவிழாவும், பாரதி விழாவும் 10—9—61, 11—9—61 ஆகிய இருதினங்களிலும் நடைபெற்றன.

**இராமநாதபுரம்**:—கோதண்டராமசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 14—9—61-ல் நடைபெற்றது.

**பேரூர்** :—24—8—61 பட்டீசர் கோயிலில் மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அதற்கு முன்னால் மூன்று நாட்கள் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சென்னை தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள், கலைமகள் ஆசிரியர், திரு, கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., முதலியவர்கள் கலந்துகொண்டார்கள். கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள் பிரதான ஆசாரியராக இருந்து நடத்தி வைத்தார்கள்.

# செம்பியன் மாதேவி

தில்லைக்கூத்தன் திருவடிகளில் பேரன்பு பூண்டு, திருவிசைப்பா பத்துப்பாடல்கள் பாடியவரும், சோழப் பேரரசராக வீற்றிருந்து கி.பி. 950 முதல் 957 வரை ஆட்சி செலுத்தியவரும் கண்டராதித்தர் என்னும் சோழ மன்னராவர். "ஆரா இன்சொற் கண்டராதித்தன் அருந்தமிழ் மாலைவல்லார் பேராவுலகிற் பெருமையோடும் பேரின்பம் எய்துவரே" என்று தாம் பாடிய பதிகத்தின் இறுதிப் பாடலில் கூறுகிறார். அவருடைய மனைவியார் செம்பியன்மாதேவியார். திருநாவுக்கரசராம் தம்பியார் உளராக வேண்டுமென்ற தயவினால் உயிர் வாழ்ந்த தூண்டு தவ விளக்கனைய திலகவதியாரை இந்த சோழப் பேரரசியார் நினைவூட்டுகின்றனர். இளமையிலேயே தம் கணவனாரைப் போரில் இழந்த இவ்வம்மையார் குழந்தையாக இருந்த தம் ஒரே அருமைச்சிறுமகன் உத்தம சோழனுக்காக உயிர்தாங்கி நின்றார். தம் வாழ்நாள் முழுவதும் சிவப்பணியில் செலவிட்டார். இந்த அரசியார்போல அறச் செயல்கள் புரிந்த வேறெந்த மன்னன் மனைவியையும் இந்திய வரலாற்றில் காண்பதரிது. பல சிவத்திருப்பணிகள் செய்த இவ்வம்மையாரை "மாதேவடிகள்" என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இப் பேரரசியார் திருநல்லம் (கோனேரிராசபுரம்), திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), திருவாரூர் அரநெறி, திருமணஞ்சேரி, தென்குரங்காடுதுறை, திருத்துருத்தி (குற்றாலம்), ஆநாங்கூர், திருவக்கரை முதலிய ஊர்களிலிருந்த செங்கற் கோயில்களைக் கருங்கற் கோயில்களாகக் கட்டினார். நாகப்பட்டினத்துக் கருகில் தம்முடைய பெயரால் செம்பியன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்ற ஊரை உண்டாக்கி அங்கே சிவபெருமானுக்கு ஒரு திருக்கோயிலையும் எழுப்பினர். அப்பதியே இப்போது செம்பியன்மாதேவி என்று வழங்கி வருகிறது.

செம்பியன்மாதேவி, தஞ்சாவூர் மாவட்டத்தில் நாகப்பட்டினம் பகுதியில் இருக்கிறது. திருவாரூர்—நாகை இருப்புப்பாதையில் கீழ்வேளூர் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து ஏறக்குறைய ஆறுகல் தொலைவிலுள்ளது. கீழ்வேளூரிலிருந்து தேவூர் இரண்டுகல் தொலைவிற்கு மோட்டார் பஸ்ஸில் போகலாம். அவ்வூரிலிருந்து தென் கிழக்கே நான்கு கல் தூரம் வண்டிகளின் மூலம் செல்லலாம். செம்பியன்மாதேவியிலுள்ள கோயில் ஸ்ரீகயிலாசம் என்ற பெயருடையது. கயிலாசநாதசுவாமி கோயில் என்று வழங்கப்பெறுகிறது.

திருக்கோயில் கிழக்குநோக்கியிருக்கிறது. கோயிலுக்கு வெளியில் முன்னால் திருக்குளம் உள்ளது. கோயில் 80,000 சதுர அடிகள் பரப்புடையது. இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. முடிவு பெறாத நிலையிலுள்ள இரண்டு மாடங்களுடைய கோபுரம் முதல் வாயிலின் மேலிருக்கிறது. இரண்டாவது திருவாயிலின்மேல் மூன்று மாடங்களுடைய அழகிய சிறு கோபுரம் உள்ளது. வெளிப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் அம்பிகையின் கோயில் கிழக்கு நோக்கி இருக்கிறது. தேவியின் திருப்பெயர்கள் பெரியநாயகி, பிருகந்நாயகி என்பன. வடகிழக்கு மூலையில் வசந்த மண்டபம் இருக்கிறது. உட்பிரகாரத்தில் வடகிழக்கே நடராஜர் சந்நிதி இருக்கிறது. தென்கிழக்கில் அழகிய ஒரு சிறு மண்டபத்தில் செம்பியன்மாதேவியார் திருவுருவம் இருக்கிறது. (படம் காண்க).

மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்க மூர்த்தியை கயிலாசநாதசுவாமி என்று அழைக்கின்றனர். கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் அப்பெருமானை "ஸ்ரீகயிலாசமுடைய மகாதேவர்" என்று குறிக்கின்றன. இம் மூர்த்தியிருக்கும் கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ள விமானம் அழகிய சிற்ப வேலைப்பாடுடையது. (பின் அட்டைப்படம் பார்க்க).

இத்தல விருட்சம் அரச மரமாகும். தீர்த்தம் சதுர்வேத புஷ்கரிணி (நான்மறைக் குளம்). சேதுமாலி என்ற மன்னன் தன் அவையில் பெண்கள் நடனத்தைப் பார்த்துக் கொண்டு தன் குருமார் வருவதையும் கவனியாமல் இருந்தான். அவர்கள் அவன் அப்படியிருந்தமையால் புலிமுகத்துடன் போகக் கடவன் என்று சாபமிட்டனர். அவ்வாறே திரிந்து இத்தலத்திலுள்ள நான்மறைக்

குளத்தில் நீராடி இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றான் என்று சொல்லப்படுகிறது. இக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரையில் பத்துநாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மற்ற மாதங்களிலும் உரிய விழாக்கள் நடைபெறுகின்றன. நாள்தோறும் ஐந்து கால பூசை நிகழ்ந்து வருகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திகழ்ந்த சிறந்த கல்வெட்டாராய்ச்சிப் பேரறிஞரும் அண்மையில் காலஞ்சென்றவருமான திரு. தி. வை. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள் "செம்பியன்மாதேவித் தலவரலாறு" என்ற சிறந்த ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியிருக்கின்றனர்; தேவஸ்தானத்தார் வெளியிட்டிருக்கின்றனர். சோழப் பேரரசி செம்பியன் மாதேவியார் இக் கோயிலைக் கற்றளியாக்குவதற்கு முன்னால் இங்கு ஒரு கோயில் இருந்திருக்கவேண்டுமென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இக்கோயிலில் இருபத்து மூன்று தமிழ்க்கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றைப் படியெடுத்து அரசாங்கக் கல்வெட்டுத்துறையினர் 1925—26-ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியிட்டிருக்கின்றனர். அவை, உத்தம சோழன் (கி.பி. 970—985), இராஜராஜசோழன்-I (கி.பி. 985—1014), இராஜேந் சோழன்-I (கி.பி. 1013—1044) இராசாதிராசன்-I (கி.பி. 1044—1054), இராஜராஜன்-III (கி.பி. 1216—1256), சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1253—1268) முதலிய மன்னர்கள் காலத்தவை. அவைகளில் காணப்படுபவற்றைச் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்படுகிறது. சோழமண்டலத்தில் அருமொழி தேவவளநாட்டின் உள்நாடான அளநாட்டில் உள்ளது செம்பியன் மாதேவிச் சதுர்வேதிமங்கலம். அந்தணர்களுக்கு அரசியார் பிரமதேயமாக வழங்கினார்.



சோழப்பேரரசி செம்பியன்மாதேவி

உத்தமசோழன் ஆட்சிக்காலத்தில்தான் செம்பியன்மாதேவியாரால் ஊரும், கோயிலும் அமைக்கப்பெற்றன. உத்தமசோழனுக்குப் பல பட்டத்தரசிகள் இருந்தனர். அவர்கள் தம் கணவனாரை திருவயிறுவாய்க்கப்பெற்ற செம்பியன்மாதேவியாரான தம் மாமியார் பிறந்த நாளான சித்திரைக்கேட்டையன்று கோயிலில் சிறப்பு விழா நடத்த பல தானங்கள் செய்தனர்; இரு அரசிமார் சுவாமிக்குப் பொன்னாலான நெற்றிப்பட்டமும், பொற்கைப் பிடியுடைய வெண்சாமரையும் அளித்தனர். தொண்டைநாட்டினர் ஒருவர் விழாக்காலத்தில் அடியார்களுக்கு உணவளிப்பதற்காக முதற்பொருளாக 150 பொன் வழங்கினார். கோயிலிலுள்ள ஒரு மண்டபத்தில் ஊர்ச்சபை கூடுவது வழக்கம். ஊர்ச்சபையார் கோயிலுக்குச் சொந்தமான சில நிலங்களுக்கு வரி நீக்கினர். சந்தி விளக்குகள் ஏற்றிவைக்கத் தானங்கள் செய்யப்பட்டன. நந்தவனப் பாதுகாப்பிற்காகக் கொடுக்கப்பட்ட நிலத்துக்கு வரி தள்ளப்பட்டது. ஊர்ச்சபை இரவில் நடக்கக்கூடாதென்றும், பகலிலே நடைபெற வேண்டுமென்றும், முன்னர் சபை உறுப்பினராக இருந்தவர்களை ஐந்து ஆண்டுகள் வரை மீண்டும் தேர்ந்தெடுக்கக் கூடாதென்றும் முடிவு செய்தனர். செம்பியன்மாதேவியார், திருக்கயிலாசமுடைய மகாதேவர்க்கு நெற்றிப்பட்டம், பொற் பூக்கள், பொற்கவசம் முதலியன அளித்தனர். திங்கள்தோறும் முதல் நாளில் சிறப்பு அபிடேகம் செய்யவும், நுந்தா விளக்கு வைப்பதற்கும், உத்தராயண தட்சிணாயன நாட்களில் அந்தணர்க்கு அமுதளிக்கவும் நிலதானம் வழங்கினார். முதல் இராஜேந்திர சோழன் கி.பி 1019ல் இடபவாகன தேவரையும், செம்பியன்மா தேவியாரையும் இக் கோயிலில் எழுந்தருளுவித்தான். ஆதலின் இப்

பேரரசியார் இதற்குச் சில ஆண்டுகள் முன்னர் இந்நிலவுலகை நீத்திருக்கவேண்டும். இவ்வம்மையார் அறுபதாண்டுகளுக்கு அறச்செயல்கள் புரிந்தார் என்பதற்கு, திருக்கற்குடி (உய்யக்கொண்டான் மலை)யில் கி.பி. 941-ஆண்டுக் கல்வெட்டொன்றும், திருவக்கரையில் கி.பி. 1001-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றும் சான்று பகர்கின்றன. இவர் எண்பத்தைந்து ஆண்டுகள் உலகில் வாழ்ந்திருக்க வேண்டுமென்பது ஆராய்ச்சியாளர் கண்ட முடிபு. இப் பெருந்தேவியாரின் புகழ் தமிழ்நாட்டு வானத்தில் தாரகை நடுவே தண்மதியெனக் குன்றாப் பேரொளி பரப்பி என்றும் நின்றும் நிலவும் என்பதில் ஐயமில்லை. இவர் எழுப்பிய செம்பியன் மாதேவிக் கோயில் இவருடைய பெருமைக்கு அணிகலனாக விளங்கி நிற்கிறது.

---

**சின்னமனூர்:** இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயிலில் புரட்டாசி சனிவார விழா ஒவ்வொரு சனிக்கிழமையும் தொடர்ந்த 6 சனிக்கிழமைகள் நடைபெறும். 16-9-61, 23-9-61, 30-9-61 தேதிகளில் சிறந்த பூசைமுறைகளும், இன்னிசையரங்குகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

**பண்ணுரி:** மாரியம்மன் கோயிலில் 12-9-61 ல் திரு. சி. பி. வீரப்ப கவுடர் அவர்கள் தலைமையில் திரு வி. இராகவன், எம்.ஏ. பி.எச்.டி அவர்கள் "உலக தர்மம்" என்னும் பொருள் பற்றிச் சொற்பெருக்காற்றினார்கள்.

**சத்தியமங்கலம்:** வேணுகோபாலசுவாமி கோயிலில் 12-9-61ல் திரு. எஸ். கே. வெங்கட்டரமணன் அவர்கள் தலைமையில் திரு. வி. இராகவன், எம்.ஏ. பி.எச்.டி அவர்கள் 'காளிதாசர் விருந்து' என்னும் பொருள்பற்றிச் சொற்பெருக்காற்றினார்கள்.

**சென்னை:** பைராகிமடம் திருவேங்கடமுடையான் வெங்கடேசபெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 11-9-61 முதல் 22-9-61 வரை நடைபெற்றது.

**எட்டிவயல்:** பாலசுப்பிரமணியசுவாமி கோயிலில் 28-8-61ல் ஆரம்பித்த இலட்சார்ச்சனை 1-9-61ல் சிறப்பாக முடிவுற்றது.

**தேரழுந்தூர்:** வேதபுரீசுவரர் கோயிலைச்சார்ந்த ஞானசம்பந்த விநாயகர் கோயிலில் சதுர்த்தி விழா 4-9-61 முதல் 13-9-61 வரை நடைபெற்றது.

**பழனி:** பட்டத்துவிநாயகர் கோயிலில் 13-9-61ல் சதுர்த்திவிழா நடைபெற்றது. அதுசமயம் விநாயகர் தோத்திரப்பாக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டை பழனி திரு. பி. எஸ். கே. இலட்சுமிபதிராஜு, எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் போடிநாயக்கனூர் திரு. ஏ. எஸ். சுப்பராஜ், எம்.எல்.ஏ. அவர்கள் திறந்துவைத்தார்கள். மற்றும் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

**திருமாலிருஞ்சோலை:** அழகர் கோயிலில் யாத்திரிகர் தங்கும் விடுதிக்கு சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் 26-9-61ல் அடித்தளக் கல் நாட்டினார்கள்,

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஏற்கனவே அறிவித்தபடி அடுத்த ஆண்டுக்கான (1961 அக்டோபர் திங்கள் முதல் 1962 செப்டம்பர் திங்கள் முடிய) சந்தா பணம் ரூ. 10-ஐ இதுவரை அனுப்பாதவர்கள் அந்தந்த உதவி ஆணையர் அலுவலகங்களுக்குப் பண அஞ்சல் மூலம் உடனே அனுப்பிவைக்கப்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

பிரார்த்தனை எவ்வளவு நேரம் நீடிக்கவேண்டும் என்பதற்குத் திட்டவட்டமான விதி எதுவும் கிடையாது. அது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விருப்பத்தைப் பொறுத்தது. ஒருவருடைய அன்றாட வாழ்க்கையில் விலை மதிக்கவொண்ணாத நேரம் இதுதான்.

—மகாத்மா காந்தி.

# திருச்சுழியல்

உற்றுன்நமக் குயரும்மதிச்
சடையான்புல னைந்தும்
செற்றூர்திரு மேனிப்பெரு
மானூர்திருச் சுழியல்
பெற்றுனினி துறையத்திறம்
பாமைத்திரு நாமம்
கற்றூரவர் கதியுட்செல்வ
ரேத்தும்மது கடனே

—சுந்தரர்.

பாடல்பெற்ற பாண்டிய நாட்டுச் சிவப் பதிகள் பதினுன்கில் ஒன்று திருச்சுழி. இது இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக் கோட்டைப் பகுதியிலிருக்கிறது. விருது நகர் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து 20 கல் தொலைவு; மதுரையிலிருந்து அருப்புக் கோட்டை வழியாக 38 கல் தொலைவு மதுரையிலிருந்தும், விருதுநகரிலிருந்தும் திருச்சுழிக்கு நேரே பஸ்கள் போகின்றன.

திருச்சுழியல், சுழிகை, சுழிகாபுரி, முத்திபுரம், முத்திநகர், சூலபுரம், சூலநகர், திரிசூலபுரம், வயலூர், அரசவனம், போதி வனம், ஆவர்த்தபுரம் என்று இத்தலத்துக்குப் பல பெயர்கள் உள்ளன. கோயில் ஊர் நடுவே கிழக்குநோக்கிருக்கிறது. சுவாமி, அம்பாள் இரண்டு சந்நிதிகளுக்கும் நேரே இரண்டு வாயில்கள் உள்ளன. அவைகளில் இரண்டு கோபுரங்களும் இருக்கின்றன. வடக்குவாயில் ஒன்றும் இருக்கிறது. கோயிலுக்குமுன் வீதியில் அரசமரத்தடியில் போதி குஞ்சர விநாயகர் கோயில் இருக்கிறது. அதன் மேற்கில் திருக்குளம் சுவாமி சந்நிதிக்கெதிரில் இருக்கிறது. வெளிப்பிரகாரத்தின் தென் மேற்கு மூலையில் அண்டபகிரண்ட விநாயகர் சந்நிதியும், வடமேற்கு மூலையில் முருகப் பெருமான் சந்நிதியும் இருக்கின்றன. வடக்கு வெளிப்பிரகாரத்தில் பிரளயவிடங்கர் சந்நிதி இருக்கிறது. இக்கோயில் திரு. வீர. ராம. அள. சுப்பிரமணியஞ் செட்டியாரால் திருப் பணி செய்யப்பட்டு 4-2-1957ல் கும்பாபி ஷேகம் செய்யப்பெற்றது. அதே பிரகாரத்தில் மேற்குநோக்கி பழனிக்குமாரசுவாமி சந்நிதியும் இருக்கிறது. கிழக்கு உட்பிரகாரத்தில் சூரியன், சந்திரன், பைரவர் சந்நிதிகளும், தெற்கு உட்பிரகாரத்தில் அறுபத்துமூவர், கௌதமர், அகலிகை திருவுருவங்களும், மேற்கு உட்பிரகாரத்தில் உற்சவமூர்த்திகள், காசி விசுவநாதர், சுழிகைப்பெருமான், முருகப்பெருமான் இவர்களுடைய சந்நிதிகளும் இருக்கின்றன. நடராஜப்பெருமானின் சிலா விக்கிரகம் பெரியது; மிகவும் அழகியது.

மூலத்தானத்தில் சிவலிங்கமூர்த்தி எழுந்தருளியிருக்கின்றூர். அவர் திருநாமங்கள் பூமீசர், பூமிநாதர், புவனேசர், மணக்கோல நாதர், திருமேனிநாதர், சுழிகேசர் முதலியன. "செற்றூர் திருமேனிப்பெருமான் ஊர்திருச்சுழியல்" என்பது தேவாரம். சுவாமிகோயில் திருப்பணி தேவகோட்டை தி. அ. சு. அண்ணுமலை செட்டியாரால் செய்யப்பெற்று பிங்கள, தை மாதம் 4-ஆம் தேதி (17-1-1918) கும்பாபிஷேகம் நடைபெற்றது. அம்பிகையின் தனிக்கோயில் சுவாமி சந்நிதிக்குத் தென்புறம் கிழக்குநோக்கியிருக்கிறது. தேவியின் திருநாமங்கள் துணைமாலையம்மை, சகாயவல்லி, முத்துமாலையுமையாள் என்பன.

இத்தலத்தில் பத்து தீர்த்தங்கள் இருக்கின்றன என்று தலபுராணம் கூறுகிறது. கௌவைக்கடல் (ஒலிப்புணரி) என்னும் திருக்குளம் கோயிலுக்கெதிரில் இருக்கிறது. "கௌவைக்கடல் கதறிக் கொணர் முத்தம்" என்பது தேவாரம். இதில் நீராடி இறைவனை வழிபட்டு பைத்தியம், குட்டம் முதலியன நீங்கப் பெறுகின்றனர். பாவகரிநதி (கௌண்டின்ய நதி) கோயிலுக்குக் கிழக்கே ஓடுகிறது. குண்டாறு என்று வழங்குகின்றனர். யானைமால் பக்கத்திலுள்ள கிணறு பூமிதீர்த்தம். கோயிலுக்கு வெளியில் மேற்குப்புறம் ஞானவாவி என்ற சுத்த தீர்த்தம் இருக்கிறது. இது ஐந்து மூலைகளையுடையது; ஐம்பூதத்தைக் குறிப்பதென்பர். கோயிலுக்குள் அம்மன் சந்நிதிக்கெதிரிலிருப்பது

உலகமெலாம் நிறைந்து இருப்பவர் கடவுள் ஒருவரே; வேறு எதுவும் உண்மையில் இல்லை.

—மகாத்மா காந்தி.

**கோடிதீர்த்தம்.** பிரளய விடங்கர் சந்நிதிக்கு முன்னுல் பிரமதீர்த்தம் இருக்கிறது. சூலதீர்த்தம், கண்ணுவதீர்த்தம், காலவதீர்த்தம், திரிநயனசூலதீர்த்தம் முதலியனவும் இத்தலத்தைச் சார்ந்தனவே.


இத்தலத்தின் விருட்சம் புன்னை. இது மேற்கு வெளிப்பிரகாரத்தில் இருக்கிறது. கோயிலில் நாள்தோறும் ஆறுகால பூசை நடைபெறுகிறது. போதிக்குஞ்சர விநாயகர் கோயிலில் ஆரம்பித்துத் தருமதாவர விநாயகர் சந்நிதியில் பூசை முடிவது வழக்கமாக இருக்கிறது. ஆடிப்பூரத்தைக் கடைசியாகக் கொண்டு பத்துநாள் திருவிழா நடைபெறுகிறது. கோயில் இராமநாதபுரம் சமஸ்தான மேற்பார்வையில் இருக்கிறது.

இத்தலத்து இறைவனை, பராக்கிரம பாண்டியன், கௌதமர், காலவர், கௌண்டின்யர், கண்ணுவர், சதாநந்தர், பூமிதேவி முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றதாகத் தலபுராணமுடையார் கூற்று.

இத்தலத்தைப்பற்றிய நூல்கள் பல உள. சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான்பெருமாள் நாயனுருடன் இத்தலத்துக் கெழுந்தருளி "ஊனுயுயிர்" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடியருளினுர். அன்றிரவு திருமடத்தில் சுந்தரர் துயிலும்போது கனவில் காளை வடிவில் சிவபெருமான் தோன்றி "கானப்பேர் நாமிருப்பது" என்று சொல்லி மறைந்தார். விழித்தெழுந்த நம்பியாரூரர் எம்பெருமான் திருவருளை நினைந்து "தொண்டரடித் தொழலும்" என்ற திருப்திகத்தைப் பாடியருளினர். குண்டாற்று அக்கரையிலுள்ள பள்ளிமடம் (சுந்தரர் பள்ளிகொண்டிருந்தது) என்ற ஊரிலுள்ள சிவாலயமே காளையார் கோயில் என்று கூறுகின்றனர். ஆனுல் சிவகங்கைக்குக் கிழக்கே 11 கல் தொலைவிலுள்ள காளையார் கோயிலையே பாடல்பெற்ற தலமாக மக்கள் கொண்டாடுகின்றனர். சுந்தரர் பாடியருளிய திருநாட்டுத் தொகையில் ஒரு பாடலில் "தென்னுர் கைம்மைத் திருச்சுழியல் திருக்கானப்பேர்" என்று குறித்திருக்கிருர்.

மாணிக்கவாசகப் பெருந்தகையார் திருக்கோவையாரில்

அன்புடை நெஞ்சத் திவள்பே
துறஅம் பலத்தடியார்
என்பிடை வந்தமிழ் தூறநின்
ரூடி யிருஞ்சுழியல்
தன்பெடை நையத் தகவழிந்
தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேல்துயி லும்வய
லூரன் வரம்பிலனே



திருச்சுழி—திருமேனிநாதசுவாமி கோயில்

என்ற பாடலில் இத்தலத்தைப்பற்றிக் கூறுகிறார். இன்னும் பெரியபுராணத்தில் சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் சேக்கிழார் பெருமான், "பெருவிமானத்திமையோர் வணங்குபெருந் திருச்சுழியல் மருவினார் வன்றொண்டர் மலைவேந்தருடன்கூட" என்று சேரமான் பெருமாளும், சுந்தரரும் இப்பதிக்கெழுந்தருளியதையும், "திருச்சுழியலிடங் கொண்ட" என்று தொடங்கும் பாடலில் சுந்தரர் பதிகம்பாடியருளியதையும் சொல்லியிருக்கிறார்.

திருவிளையாடற்புராணம் அருச்சனைப்படலத்தில் "மலைமகளை விரதயோக நெறிநின்று மணந்தார் சுழியல் வியனகரும்" என்று பார்வதி தேவியார் தம்மைச் சிவபெருமான் மணம் புரியும்படி செய்ததைக் கூறப்பட்டிருக்கிறது. சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா என்ற நூலில் "தேவி துணைமாலையோடும் சுழியனகர்மேவும் இணையார் திருமேனி யீசா" என்று கூறப்பெற்றிருக்கிறது. இத்தலத்தினரான ஆராவமுதாசாரியார் என்பார் 'திருச்சுழியற் புராணம்' என்ற செய்யுள் நூலை இயற்றியுள்ளார்; அந்நூலின் கடைசியில் திருநெல்வேலி அம்பலவாண நாவலர் "காளையார் காட்சிச் சருக்கம்" என்பதைப் பாடிச் சேர்த்திருக்கிறார். நூல் சொற்சுவை பொருட்சுவை பொதிந்து விளங்கும் பெற்றியுடையது. கடவுள் வாழ்த்து, பாயிரம் நீங்கலாக பதினைந்து சருக்கங்கள் உள்ளன; 744 பாடல்கள் இருக்கின்றன.

"திருச்சுழியல் வெண்பா அந்தாதி" என்ற நூல் இத்தலத்தைப் பற்றியது ஆசிரியர் தெரியவில்லை. பண்டித P. R. கிருஷ்ணமாசாரியார் இதற்கு ஒரு உரை எழுதியிருக்கின்றனர். தாமோதரபுரம்—சுப்பிரமணிய பிள்ளை என்பவர் "திருச்சுழியல் கொம்பிலா வெண்பா அந்தாதி" என்னும் நூலை இயற்றியிருக்கின்றார். "திருச்சுழியல் துணைமாலையம்மை பிள்ளைத் தமிழ்", "திருச்சுழியற் குரவைப் பாட்டு", "திருச்சுழியற் பள்ளு" என்ற நூல்களும் இப்பதியைப் பற்றி யெழுந்த நூல்களே. அவை முழுவதும் கிடைக்கவில்லை. ஆசிரியர்கள் பெயர்களும் தெரியவில்லை. திருச்சுழியல்—குமார கவிராயர் என்பவர் "திருச்சுழியல் கயிற்றுப் பின்னல்—நாடகத்தரு" என்ற நூலைப் பாடியிருக்கிறார். "திரிசூலபுர மகாத்மியம்" என்ற நூலை விசுவநாதப் பிரமசாரி என்பவர் வடமொழியிலிருந்து தமிழில் வசனமாக எழுதி வெளியிட்டிருக்கின்றார்.

திருவண்ணாமலையில் புகழ்பெற்று விளங்கிய தவத்திரு—இரமண அடிகளார் இவ்வூரிற் பிறந்தவர். அவர் பிறந்த வீடு 'சுந்தர மந்தரம்' என்பது கார்த்திகை வீதியில் இருக்கிறது. இரமணசுவாமிகள் இத்தலத்திறைவன்மேல் பாடிய பாடல் கீழ் வருவது:—

அன்புடை யார்த மகமக லாம லனவரத
மின்புடை யாட்ட மிடலென வென்று மெழிற்சுழியற்
றன்புடை நீங்கா தொளிர்பரஞ் சோதித் தனிச்சிவமே
யென்புடை யன்பீங் திலகிட வென்ற னிருதயமே

மேலே சொன்ன திருக்கோவையார்ப் பாடலின் ஓசையில் இப்பாடல் அமைந்து விளங்குவது காண்க.

சுவாமி சந்நிதி கர்ப்பக்கிரக வாயிலின் இருபுறங்களிலும், அம்பாள் கோயில் கர்ப்பக் கிரகச் சுவர்களிலும், பிரளய விடங்கர் சந்நிதியிலுள்ள ஒரு கல்லிலும் தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி, 985—1013) காலத்தவையான இரண்டு கல்வெட்டுக்களில் விளக்கு தானம் செய்ததைக் கூறுகின்றன. கி.பி. 1230-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் ஜனநாதன் என்ற ஒருவனை தோல்வியுறச் செய்ததைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

நின்னை நினைக்க நினைந்தாய் நிரந்தரமும்
உன்னை அடியேன் உளம்வைத்தாய்—என்னில்
என்க்கினியான் ஆனாய் எழிற்சுழியல் நாதா
உனக்கினியான் செய்வ துரை.

—திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

---

**திருவிடைமருதூர்:** மகாலிங்கசுவாமி கோயிலில் நான்காவது ஆண்டு பன்னிருதிருமுறைப் பாராயணவிழா 14-9-61 முதல் 8-1-62 வரை நடைபெறும்.

**மதுரை:** தெற்குமாசி வீதி காமாட்சி ஏகாம்பரரேசுவரர் கோயிலில் நவராத்திரி திருவிழா 10-10-61 முதல் 20-10-61 வரை நடைபெறும்.

# மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[வித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருக்கடித்தானமென்னும் திருப்பதியை யனுபவிப்போமிப்போது. மலைநாடர் இத்தலத்தைத் திருக்குடித்தானமென்று வழங்குவர். அது விகாரவழக்கெனக் கொள்ளத்தக்கது. கடியென்று நறுமணத்திற்குப் பெயர், பரிமளம் மிக்க தலமென்று தேறும். மலைநாட்டுத் திருப்பதிகளில் நறுமண மிகுதியைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. விசேஷித்து இத்தலத்தின் நறுமணத்தைப்பற்றிப் பூருவாசாரியர்கள் திருவுள்ளம் பற்றியதை முடிவிற் பேசுவோம். எம்பெருமானிடத்தில் ஸகலவிதமான பரிமளங்களும் பொருந்தியிருப்பதாக உபநிடத மோதுகின்றது. "ஸர்வகந்த:" என்பது ஓர் உபநிஷத்தின் வாக்கு. அத்தகைய எம்பிரானது திவ்விய மங்கல விக்ரஹத்தின் பரிமளம் கமழுமிடம் திருக்கடித்தானம் என்று கொள்ளலாம்.

இத்தலத்தை நம்மாழ்வாரொருவரே பாடியுள்ளார். அவருடைய திருவாய்மொழியில் எட்டாம் பத்தில் "எல்லியுங்காலையும்" என்று தொடங்கும் ஆறும் பதிகம் இத்தலத்தைப் பாடியதாம். இப்பதிகத்திற்கு முந்தின பதிகம் "மாயக்கூத்தாவாமனா!" என்று தொடங்குவது. அப்பதிகத்தில் ஆழ்வாரடைந்த கிலேசம் அபரிமிதமானது. அப்பதிகத்தின் ஸாரமான பொருளைக் கூறியருளின மணவாள மாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில், "மாயன் வடிவழகைக் காணாத வல்விடாயால் அது அறவிஞ்சி யழுதலற்றுந் தூயபுகழுற்ற சடகோபன்" என்றருளிச் செய்திருப்பது கொண்டு அந்த கிலேசத்தின் மிகுதியை ஒருவாறு உணரலாம்.

அதற்கு முந்தின பதிகம் "வார்கடா வருவியானை மாமலையின்" என்னுமது திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறென்னும் மலைநாட்டுத் திருப்பதியை யநுபவித்தது. அதில் "திருச்செய்ய கமலக்கண்ணும் செவ்வாயும் செவ்வடியும் செய்ய கையும், திருச்செய்ய கமலவுந்தியும் செய்ய கமலைமார்பும் செய்யவுடையும் திருச்செய்ய முடியுமாரமும் படையுந் திகழவென் சிந்தையுளானே" என்று உள்ளம் பூரித்து உடல் பூரித்து அநுசந்தித்த அத்தலத்துப் பெருமானது வடிவழகு ஆழ்வாரது திருவுள்ளத்திலே வேரூன்றியிருந்தபடியாலே அவ்வடிவழகைக் கண்ணாரக்கண்டு களிக்கவேணுமென்றும் திருமேனியைத் தழுவி யனுபவிக்க வேணுமென்றும் விருப்பமுண்டாகி, அவ்விருப்பம் நிறைவேறப்பெறுமையாலே, இனி இதற்கு மேற்பட்ட கிலேசம் இல்லையென்னும்படி அபரிமிதமான கிலேசத்தையடைந்து காட்டுத்தீ கதுவினாரைப்போலே தபித்து "என் விடாயெல்லாம் தீரும்படி திவ்யாவயவங்களின் சோபையைக் காட்டிக்கொண்டு வரவேணும், அழகிய மகுடத்தையணிந்து "கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியன்" என்று உள்குழையும்படி வரவேணும்; காளமேகத் திருவுருவனாய் வரவேணும்; உதயகாலத்து ஆதித்தியனைப்போலே பெரிய புகரோடே வரவேணும்" என்றிப்படி கூப்பிட்டு அலமந்து நின்றார் கீழ்ப்பதிகத்திலே. அப்பதிகத்தின் இறுதிப்பாட்டிலே "எங்கே காண்கேன் ஈன்துழாயம்மான் தன்னை யானென்றென்று, அங்கே தாழ்ந்த சொற்களால் அந்தண்குருகூர்ச்சடகோபன் சொன்ன" என்றிருப்பது கொண்டே அந்தக் கிலேசத்தின் அளவின்மையை யறியலாம்.

ஆழ்வார் ஒரு மூலையில் ஒரு திருப்புளி மரத்தடியிலே கிலேசப்பட்டிருந்தாலும் "உள்ளுவாருள்ளிற்றெல்லா முடனிருந்தறிதி" என்னப்பட்ட எம்பெருமான் அறி

---

கடவுள் அநேக நாக்குகளின் மூலமாக பேசுவதால் அவர் பேசாத மௌனி என்கிறோம்.

—மகாத்மா காந்தி.

யாததொன்றுண்டோ? கஜேந்திராழ்வான் ஒரு நீர்ப்புழுவின் வாயிலே யகப்பட்டுத் துடித்து "நாராயணா ஓ! மணிவண்ணா நாகணையாய்! வாராய் என்னாரிடரை நீக்காய்" என்று கதறியழைத்தவாறே அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து மடுவின் கரையிலே நின்று துடித்த வைகுண்டபதி ஆழ்வாருடைய கூப்பீட்டைக் கேட்டு வாளாவிருக்க வல்லவனோ? கஜேந்திராழ்வானைக் காத்தருளின கதையை யறிந்தவர்களும் சொல்லுபவர்களும் "பரமன் திருநாட்டிலிருந்து பதறியோடிவந்தான், யானையிடர்ப்பட்ட மடுவின் கரையிலே வந்து சேர்ந்து சக்கரப்படையையேவி முதலையை முடித்திட்டான்" என்றிவ்வளவு சொல்லுகின்றார்களேயல்லாது, அங்கு முதலைவாய்க் கோட்பட்ட களிற்றின் கழல் நொந்துகிடக்கும்படியைக் கண்டு அப்பரமன் துடித்த துடிப்பை யாரேனுமறிந்து கூறுவாருளரோ?

ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் அக்கதையை யநுபவிக்கின்ற ஸ்ரீபராசர பட்டர் "திங்மாமிதி அநுகஜகர்ஜமாஜகந்த" என்றார்; 'கெட்டேன்! கெட்டேன்!! அடியவனை இப்படி ஒரு நீர்ப்புழுவின் வாயிலே துடிக்கவிட்டேனே பாவியேன்!' என்று முடிமேல் மோதிக்கொண்டே திருநாட்டிலிருந்து பெருமான் ஓடி வந்ததாக இந்த சுலோகத்தில் சொல்லப்பட்டது; மடுவின் கரையிலே வந்து சேர்ந்த பின்பு அப்பரமன் பட்ட பாட்டை இவருடைய திருத்தந்தையாரான கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்திலே "விச்வம் தியைவவிரசய்ய... ஆஜக்முஷஸ்தவ கஜோத்தம ப்ரும்ஹிதேந பாதம் பராமம்ருசுஷோபிச காமநீஷா" என்கிற சுலோகத்தினால் வெளியிட்டருளினார். இந்த சுலோகத்தின் கருத்தாவது—(இதைச் சிறிது விவரித்துக் கூறுவோமிங்கு.) கஜேந்திராழ்வான் ஒரு மடுவின் கரையிலே முதலைவாய்க் கோட்பட்டு "கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே" என்னும்படி, முதலை நீருக்கிழுக்க, யானை தரைக்கிழுக்க இப்படி நெடுங்காலம் துவண்டு இனி நம்மைக் காத்துக்கொள்ள நம்மாலாகாதென்று துணிந்து ஆதிமூலமே! என்று ஓலமிட, அக் கூக்குரலைக் கேட்ட ஸ்ரீவைகுண்டநாதன் பதறியோடி வந்து மடுவின் கரையிலே விழுந்து யானைக்கு உபசாரங்கள் பண்ணி காத்தருளினதாக இதிஹாஸம். இதனை ஆழ்வார்கள் "மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த, கானமர் வேழம் கையெடுத்தலறக் கராவதன் காலினைக் கதுவ, ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்றுநின்றாழி தொட்டான்" என்றும், "பெண்ணுலாஞ்சடையினானும் பிரமனுமுன்னைக் காண்பான், எண்ணிலா வூழியூழி தவஞ்செய்தார் வெள்கிநிற்ப, விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கன்றருளையீந்த" என்றும் நூற்றுக்கணக்கான பாசுரங்களினாற் பேசியுள்ளார்கள். யானையின் துயரம் தீர்க்க வேண்டுமானால் அரைகுலையத் தலைகுலைய மடுவின் கரையிலே வந்து விழவேண்டுமோ? இங்கு வந்தும் "குட்டத்துக் கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்" என்கிறபடியே திருவாழியாழ்வானை ஏவியன்றோ காரியஞ் செய்தது. இந்தத் திருவாழியாழ்வானைத் திருநாட்டினின்று போகவிட்டால் அவன்தானே மடுவின் கரையிலே வந்து முதலையைத் துணித்து மீளானோ? அன்றியும், திருவாழி யாழ்வானை ஏவவேணுமென்கிற நிர்ப்பந்தந்தானும் இல்லையே; ஸகல சராசரங்களினுடையவும் ஆக்கலளித்தல் துடைத்தலென்னுங் காரியங்களை ஸங்கற்ப சக்தியினாலே நிர்வஹித்துப் போரு பெம்பெருமான் அந்த சக்தியைக் கொண்டே முதலையைத் துணித்துக் களிற்றின் துயரைத் தீர்க்கலாமாயிருக்க, அங்ஙனம் செய்யாதே நேர் கொடு நேரே ஓடிவந்ததென்னோ? என்று எம்பெருமானை நோக்கிக் கேள்வி கேட்கப்படுகிறதிங்கு. இந்தக் கேள்வியோடு நில்லாமல் மற்றோர் அற்புதமான கேள்வியும் கேட்கப்பட்டுள்ளது, அதாவது [பாதம் பராமம்ருசுஷோபி ச கா மநீஷா?] முதலை கவ்வி உதிரமொழுக நின்ற யானையின் காலைத் திருக்கையிலேந்தித் தடவிக் கொடுத்து உபசாரங்கள் செய்ததுதான் என்னோ? இங்ஙனே செய்ததற்கு என்ன திருவுள்ளம் பிரானே, என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கின்றது.

---

உலகில் எத்தனை உயிர் வாழ்வன இருக்கின்றனவோ அத்தனை பெயர்கள் கடவுளுக்கு இருப்பதாக நாம் நம்புகிறோம். அதனால்தான் கடவுள் நாமமற்றவர் எனவும் நாம் கூறுகிறோம்.

—மகாத்மா காந்தி.

கூரத்தாழ்வான் ஊனக் கண்ணற்றவ ரென்பதும், ஞானக் கண்ணொன்றையே உடையவ ரென்பதும் பிரசித்தம். அந்த ஞானக்கண்ணாலே கண்ட விஷயத்தையன்றோ இங்குக் கூறியுள்ளார். (அதாவது) யானைக்கால் என்றுநாம் அருவருக்கும்படியான காலைப் பராத்பரனை பெருமான் தனது திருக்கை யால் தடவிக்கொடுத்து உபசாரங்கள் செய்த தாகக் கூறுகின்றார். இதனால் என்ன தெரி விக்கப்படுகிறது? கஜேந்திராழ்வானுடைய துயரத்திற் காட்டிலும் பரமபுருஷனுடைய துயரம் மிகப் பெரிதென்று தெரிவிக்கப் பட்டதாகிறது.

பிரகிருதத்தில் நம்மாழ்வாருடைய துய ரத்தை நாம் திருவாய்மொழி கொண்டு அறி கின்றோமானாலும் எம்பெருமான் ஆழ்வார் படுந்துயரத்தைத் தான் சிந்தித்துப் படுகின்ற துயரம் நம்போல்வார் தெரிந்துகொள்ள வரிதேயாம். ஸ்ரீராமாயணம், பகவத்கீதை முதலான நூல்களில் பகவான் தான் சோதி வாய்திறந்து பணிக்கும் வார்த்தைகளையும் நாம் பார்த்து வருகிறோமாதலால் அவற்றைக் கொண்டு பகவானுடைய சித்தவ்ருத்திகளை உள்ளபடியுணர நமக்கு ஸௌகரிய மேற்படு கிறது. திவ்வியப் பிரபந்தங்களில் ஆழ் வார்கள் தங்கள் நிலைமையைத் தெரிவிக்கும் பாசுரங்களை யிட்டிருக்கின்றார்களே யல்லது, எம்பெருமானுடைய பாசுரமாக ஒன்றும் வெளிவந் திருக்கவில்லை யன்றோ. ஆதலால், ஆழ்வார்கள் மிகமிக வருந்தும் போதுகளில் எம்பெருமானுடைய மனநிலைமை எவ்வா றிருக்கின்ற தென்பதை நாம் செவ்வனே தெரிந்து கொள்வது அரிதே. ஆனாலும், எம் பெருமானுடைய நிலைமையையும் தெரிவித் துக் கொண்டே ஆழ்வார்பாசுரம் அவதரித் துள்ளதனால் இது கொண்டே அதையும் நாம் தெரிந்துகொள்ளத் தட்டில்லை.

ஆழ்வார் பாசுரங்கொண்டு அறிவதென் பது கிடக்கட்டும். எம்பெருமானுடைய இயல்வு கொண்டு அறிவது மிகவெளிது. சக்ரவர்த்தி திருமகனார் [இராமபிரான்] தண்டகாரணியத்திற்கு எழுந்தருளினபோது பல மாமுனிவர் திரண்டு தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்வதற்காக அவருடைய பர்ணசாலைக்கு வந்து சேர்ந்தார்கள். அப் போது அவர்களை நோக்கி ஸ்ரீ இராகவன் பணித்த வார்த்தை என்னவென்பதை அறி வீர்களோ? "ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹி மமாதுலா" என்று தொடங் கிச் சொன்ன வார்த்தை கல்நெஞ்சையும் கரையப் பண்ணும். "மாமுனிவர்களே! என்னை மிகவும் மன்னிக்க வேண்டுகிறேன்; நீங்கள் துன்புறவே தகாது; அபரிமிதமான துன்பமுற்றீர்கள்; உற்ற துன்பத்தை அறி விப்பவர்களும் நீங்களேயானீர்கள்; நான் உங்கள் இருப்பிடந்தேடி யோடிவந்து உங் களை விசாரித்து உங்களுக்கு அபயமளித்து ஆத்மசாந்தி பெறுவதாக எண்ணியிருக்க, துன்புற்றதற்கு மேலே உற்ற துன்பத்தை யறிவிக்க ஓடிவந்திர்களும் நீங்களானீர்களே! ஐயோ! என்பிழைப்பு என்னாயிற்று! நான் படும் வெட்கத்தை என்னவென்று சொல்லு வேன்? என்னை க்ஷமிக்கக் கடவீர்கள்" என்று அஞ்சலிசெய்து வேண்டிக் கொண் டதை ஆரணிய காண்டத்தில் வாசியாநின் றோம். அந்த மஹர்ஷிகளோ "ஏஹி பச்ய சரீராணி" என்று சொல்லி இராக்கதர் தின்ற தங்களுடம்பைக் காட்டி அதற்குச் சேமஞ் செய்துகொள்ள வந்தவர்களேயல்லது ஆழ் வார்களைப் போலே "பொய்ந் நின்ற ஞான மும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்பு மிந் நின்ற நீர்மை யினியா முறாமை" என்று சொல்லித் தங்களுடைய ஊனவுடலைத் தவிர்த்துக் கொள்ள வந்தவர்களல்லர். அம் படிப்பட்டவர்கள் திறத்திலேயே எம்பெரு மான் அப்படி உள்குழைந்து பேசினானென் றால், அவர்களிற் காட்டில் எவ்வளவோ வைலக்ஷண்யம் பெற்றவர்களான ஆழ்வார் கள் திறத்தில் அவன் படும்பாட்டை என் னென்பது!

மாயக் கூத்தா வாமனாவென்னும் பதிகத் தில் ஆழ்வார்க்குண்டான விடாய் பேச்சுக்கு நிலமன்று என்று நினைப்போம் நாம்; உண் மையில் ஆழ்வாருடைய விடாயைச் சிந்தித்த எம்பெருமானுடைய விடாய்தான் வாசாம கோசரமாக விருந்தது. 'அந்தோ! ஆழ்வாரை

---

அன்பே கடவுள் என்று கூறுபவர்களுடன் நானும் சேர்ந்து அன்பே கடவுள் என்று கூறுவேன்

—மகாத்மா காந்தி

இப்படி அலமந்து கூப்பிடப் பண்ணி னோமே!' என்றும், 'கூப்பிடுகிற ஆழ்வார்க்கு உதவப் பெற்றிலோமே!' என்றும் மிகவும் தபித்து ஆகுலனாய் வெட்கமுமுடையனாய் 'இனிநாம் செய்யத் தகுவது என்?' என்று ஆலோசித்தான். 'உடனே சென்று ஆழ் வார்க்கு முகங்காட்டினோமாகில் அவருடைய துயரம் தீர்ந்துவிடு மன்றோ; ஆகவே அது செய்யலாம், என்று நினைத்தான். சிறிது ஆராய்ச்சி செய்தவாறே அது கூடாதென்று தோன்றிற்று; 'உடனே சென்று நாம் கடுக முகங்காட்டினோமாயின் ஆழ்வார் மகிழ்ச்சி யின் மிகுதியினாலே உடலுமுயிரும் உக்கி சிதிலராய்ப் போவர்; அப்படியாகாமே ஸந் தோஷத்தைப் பொறுப்பித்து உளராக்கி அடைவே கலந்து பரிமாறவேணும்' என்று துணிந்து நேரே வந்திடாமல் திருக்கடித்தான மென்னுந் திருப்பதியிலே வந்து புகுந்தான்.

வனவாஸத்தை முடித்துவந்த இராம பிரான் பதினாலாண்டு பிரிவாலே நொந்த பரதாழ்வானுக்கு உடனே சென்று முகங் காட்டாமல் தரிப்பித்து முகங்காட்டுகைக்காக அனுமனை முன்னே செல்லவிட்டுத்தான் பரத்வாஜமுனிவனாச்ரமத்திலே அவருடைய நியமனத்தை நிறைவேற்றுவதாகிற ஒரு வியாஜத்தினால் தங்கியிருந்தாப் போலவும்;

கண்ணபிரான் பாண்டவர்களுக்காகத் தூது செல்லும்போது பிரேமபரவசர்களான விதுரர் முதலானாருடைய பிரீதியைப் பொறுப்பித்து அவர்கட்குக் காட்சி தருதற் காக "குச ஸ்தலே நிவஸதி ஸச ப்ராதரிஹைஷ் யதி" என்றபடியே குசஸ்தலத்திலே தங்கி யிருந்து மற்றைநாள் ஹஸ்திநாபுரிக்கு எழுந் தருளினாப் போலவும்

ஆழ்வார் தம்மோடே கலந்து பரிமாறிக் களிக்க விரும்பிய ஸர்வேச்வரன் திருக்கடித் தானத் திருப்பதியிலே தங்கியிருப்பதை யறிந்த ஆழ்வார், இப்படியாக எம்பெருமான் தம் பக்கலில் பண்ணுகிற வியாமோஹத் தைச் சிந்தித்து உள்குழைந்து பதிகம் பாடு கின்றார்.

(தொடரும்.)

---

**திருப்பாதிரிப்புலியூர்:** வீரஆஞ்சநேயசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 4-4-61 முதல் 15-4-61 வரை நடைபெற்றது. 16-4-61 அன்று விடாயத்தி உற்சவம் தென்னாற் காடு மாவட்ட கலெக்டர் திரு. எஸ். ஏ. சுந்தரராஜன், ஐ ஏ.எஸ்., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. 13-4-61ல் இலட்சதீபப் பெருவிழா மின்ஒளி விளக்கு அலங்காரத்துடன் நடைபெற்றது.

**கடவாசல்:** மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் ஆலயத்திருப்பணியும், அஷ்டபந்தன கும்பாபிஷேகமும் 15-9-61ல் நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன. நாகப்பட்டினம் அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் அவர்களும் இவ் விழாவில் கலந்துகொண்டார்கள்.

## இறைபணியாளர் மாற்றங்கள்

**திரு. எல். வெங்கடராமன்:** திருத்துறைப்பூண்டி பாவா ஔஷதேசுவரர் கோயில், சேகல் வர்த்தமானேசுவரர் கோயில், தண்டலாஞ்சேரி நீள்நெறிநாதர் கோயில் இவைகளுக்கு இறைபணியாளராக மாற்றம்.

**திரு. வி. எஸ். கோதண்டபாணி:** கோயிலூர், ஸ்ரீமந்திரபுரீசுவரர் கோயிலுக்கு மாற்றம்.

**திரு. சேதுமாதவராவ்:** திருத்தங்கூர் இரஜகிரீசர்கோயில், திருக்கொள்ளிக்காடு அக்கினீசுவரர்கோயில் இவைகளுக்கு இறைபணியாளராக மாற்றம்.

---

நமக்கு என்ன இன்னல்கள் நேர்ந்தாலும், என்னென்ன தோல்விகளை நாம் அடைந்தாலும் சத்தியத்தைத் தேடும் முயற்சியை நாம் விட்டுவிடக்கூடாது. ஏனெனில் சத்தியமே தெய்வம்.

—மகாத்மா காந்தி.

### சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச் செய்த

# நால்வர் நான்மணி மாலை

(சிதம்பரம் - ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள் உரை)

—:※:—

*முன் தொடர்ச்சி*

வேதமுதலிய எண்ணெண்கலைகளையும் ஈரெட்டாண்டு எல்லையிற் பயின்று தக்கார்மாட்டுத் தகுபொருளுணர்வான் தருக்கித்தொழுகிய சால்புடையரென்பார், 'நல்லிசைப்புலவ' என்றும், புறப்பகையனைத்தையும் பொருதுவென்றார்க்கும் உட்பகையாய்நின்று உறுகண்விளைக்கும் ஐம்புலங்களைவென்ற பேராண்மையரென்பார், 'புலனெறிவிலங்குறுவீர' என்றும், திங்களினோர்கலையாற் திருமுடி காணப்பட்டாரேனும் சுருதியாகிய கலைகளுள் ஒன்றானும் துணியப்படாதவரென்பார், 'திங்கள் வார்சடைத் தெய்வநாயகனொருகலையேனுமுணரான்' என்றும், திருக்கரங்களுண்மூன்று, முத்தொழிற்கிணங்கத் துடியும் அனலும் ஏந்துதலானும் அமைத்தலானும் சிறிதுவளைவுற்றவாக; மற்றொன்று, ஒருகாற்கும்பிட்டாற்போதும் கதிகூடுமென்னும் அபிநயக்குறிப்போடு, டோளமாகக் குஞ்சிதபதத்தைக் குறித்து நிற்பதென்பார், 'கைகளோமுறிபடுங்கைகள்' என்றும், சூரியசோமாக்கினிகளென்னும் முக்கண்களில் இரண்டு, உலகின் தோற்றநிலைகட்கேதுவாகிய பகலிரவுகளைத்தோற்றுவிக்கப் பிறிதொன்று, அவ்வுலகிறுதிக்கேதுவாவதென்பார், 'ஒன்றுகாலையிற்காணும் ஒன்றுமாலையிற்றோன்றும் ஒன்றுவிழிப்பினெரியும்' என்றும், இவ்வியல்புடைய இறைவராயிருந்தும் தம் அளவிடாப் புகழை ஒருவாறு அளவிட்டுரைத்தலின், உலகினர் ஓதியுணர்ந்துய்வான், தந்தலைமைநாடாது தாமே வந்து வரைந்தனரென்பார், 'ஆயினுமெழுதினன்' என்றும், அவை ஒவ்வொரு பாடலும் தப்பாது பயன்படுதலுடைய திருவாசகமும் திருக்கோவையுமென்பார், பொதுப்படப் 'பழுதில்செய்யுள்' என்றும், வரைதலினுட்கிடை உய்த்துணரார்க்கு, இச்செயலாற் புகழ்ச்சிவிருப்பரிற் புலப் படுவரென்பார், 'அதனாற்புகழ்ச்சி விருப்பன்போலும்' என்றும், அவர், தம்மாட்டு நிகழ்வவெல்லாம் ஆன்மாக்களுய்தற்குரிய அருட்செயல்களேயாகலின், என்றும் அணுத்துணையும் இகழ்வெய்திலராய், இறுதிக்காலத்து அச்சுதனாதியரையுமழித்து, அவரென்பையுமணிந்துவிளங்கும் முதற்கடவுளேயென்பார், 'இகழ்ச்சியறியாவென்பணிவானே' என்றும் கூறினார்.

கல்லாதவராய் முறிபட்டகரத்தராய்க் காலைமாலைகளில் விளங்கலும் எதிரியவற்றை நீற்றலுமியைந்த கண்ணராயிருப்பினும், தம்மை விசேடித்துவியந்தமை நோக்கி, இகழச்சியறியா எலும்பணிந்த அவரே வரைந்தனரெனவும் பொருள்பட்டு, இது நிந்தாஸ்துதியாகவும் நிற்பதுணர்க. இகழ்ச்சியறியாவென்பதும் இப்பொருட்கிணங்க இகழ்ச்சி பயக்கும் குறிப்புமொழியாதல் உலகவழக்கிற் கொள்க. கலங்குறுபுலனெறியெனக் காரியத்தைக் காரணமாகவுபசரித்தார். புலனெறிவிலங்குதலாவது அவற்றின்கட் சென்ற மனத்தைமீட்டு அருட்குரவன் பணியினிறுவல். கலங்குறு விலங்குறு வென்பன ஒருசொன்னீர்மைய. உணரானென்னும் செய்வினை தனக்குரிப்பொருளையன்றிச் செயப்பாட்டுவினைப்பொருளையும், விழிப்பினென்பது என்றும் விழித்தலின்மையையும், ஆயினுமென்பதின் உம்மை கொண்ட இருபொருட்கியைய உயர்வுதாழ்வுகளையும், என்பணிவானென்பது அவனென்னும் சுட்டுப்பொருளையும் குறித்துநின்றன. அஃதன்றியெனற்பா

லது அஃதான்றெனத்திரிந்தது; செய்யுளாகலின். ஓகாரங்கள் வினா. முறிதளிருமாம். தீக்கண்ணுகலின் பழிப்பிறென்றென்றார். எவரும்புகழப் படுதலின் இகழ்ச்சியறியா என்பென்னலும் ஒன்று. ஏகாரம் பிரிநிலை.

[1]"கற்க கசடறக் கற்பவை" என்றபடி உண்மை நூலாராய்ச்சியின் உவப்புடையராய் முதனூ லிரண்டனுள் வேதமானது, பத்திசெய்து அரனருட்பெறும் பத்தருக்கன்று முத்தியெய்தரிது எனமொழியும் பொதுநூலும், சிவாகமம், அப்பொது நூற் சத்தியப்பொருட்டெளிவெலாம் சத்திநிபாதர்க்கு உய்த்துணர்த்திய சிறப்புநூலுமாகலின், அவ்வாகமவுணர்ச்சியுடையோரே அளவுபடாச்சிவனியல்புட் சிறிதறிந்தோராவரெனத் துணிந்து, ஏனை நூலாராய்ச்சியினும் அவ்வாராய்ச்சியின்மிக்குத் தேர்ந்தவரென்பது தோன்ற, நல்லிசைப்புலவரென்றாரெனினும் அமையும்.

தகுபொருளுணர்வான் தருக்கித் தொழுகியதை [2]"மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின் மேவு - நற்கனி கொள்ள வேண்டி நயந்துகல் லெறிவார் போலச் - சற்குரு வுளனே வென்று நாடுவார் தருக்க மெலாஞ் - சொற்கலை ஞானசைவர் தம்முடன் சொல்லலுற்றார்" என்பதனானும், அருட்குரவன்பணியினிறுவலை [3]"பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீ - ராட்டிச் சொன்மலரணிந்துதற் போதவின் னமுதை யூட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலை - மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சிய ரானார்" என்பதனானும், ஒருகலையுமுணராமையை [4]"வேதக் காட்சிக்கு முபநிடத் துச்சியில் விரித்த - போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன் - மூதக் கார்க்குமூதக்கவன் முடிவிற்கு முடிவா - யாதிக் காதியாயுயிர்க்குயி ராய்நின்ற வமலன்" என்பதனானும், சிருட்டியாதிநிகழ்வை, [1]"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற் - சாற்றியிடு மங்கியிலே சங்கார - மூற்றமா - யூன்று மலர்ப்பதத்தே யுற்றதிரோத முத்தி - நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்பதனாலும், குஞ்சிதபதத்தைக் குறித்தலை [2]"கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமென - நாடு மபிநயத்தை நண்ணிற்றா, லோடியகட் - காதனார் காணவொரு கால்காட்டிக் கையமைத்து - நாதனார் செய்யு நடம்" என்பதனானும், செய்யுளெழுதிய குறிப்பை [3]"அங்கவ ருரைத்த வெல்லா மம்பலத் தாடு மையர்-செங்கையி லேடு வாங்கித் தெளிவுற வரைந்த பின்னர்ப் - பொங்கிய வருளி னாரும் புகன்றிடரகலத் தையல் - பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டுமென்றார். மன்னிய தவத்தின் மிக்கா ரதற்குளமகிழ்ந்து கூற — முன்னுறவிருந்து கோவையெழுதினர் முடிந்த பின்னர்ப் - பொன்னவிர் வேணி யார்தாம் புத்தகஞ் சேமித் தங்கண்-மின்னென மறைந்தார் சொன்ன வித்தக ரயற்சி கொண்டார்" என்பதனானும், என்பணிந்த இயல்பை [4]"பரம னிவ்வகை யடுந்தொறு மடுந்தொறும் பலவாம்-பிரமனாதியோ ரென்பினைத் தரிக்குமப் பெரியோர் - சிரமெ லாந்தொடுத்தணியலாவணிந்திடுஞ் சிகைதன் - னுரமு லாவுமுந் நூலென வேயணிந் துறையும். ஆத லாற்றனை வியப்பதற் கன்றவையணித-லிதலாதொரு திறமுள தியாவரு மெவர்க்கு - நாத னேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித் - தீதெ லாமொரீஇ முத்திபெற் றுய்ந்திடுஞ் செயலே" என்பதனானும், ஆகமவாராய்ச்சி முதன்மையாக்கொண்டமையை [5]"மிக்க கலையுஞ் செழுநீரு மதிக்கலையு மிலைக்குமவ - ரக்கலையுந் தோளர்புலியதட்க லையர் நல்லருளா - லொக்கலையும் பிறக்கலையு மொழித்திடுமா கமகலையு - மெக்கலையுங் கற்றுணர்ந்தா ரீரெட்டாண்

1. திருக்குறள்-௩௯௧.
2. திருவாதவூரர் புராணம் மந்திரிச்சருக்கம்-௨௩.
3. திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்-இக.
4. கந்தபுராணம் சூரனமைச்சியற்படலம்-௧௨௭.

1. உண்மை விளக்கம்-௩௬.
2. சிதம்பரமும்-மணிக்கோவை-௨௧.
3. திருவாதவூரர் புராணம் திருவடிபெற்ற சருக்கம்-௧௧-௧௨.
4. கந்தபுராணம் ததீசியுத்தரப் படலம்-௧௨.
5. திருவாதவூரர் புராணம் மந்திரிச்சருக்கம்-௧௨௧.

டெல் லையினில்'' என்பதனானும், ஆகமம் சத்திநிபாபதர்க்குணர்த்திய தென்பதனை [1]''சத்திநிபா தர்க்கமலன் சாற்றினு னாகம நூல் - மற்றையர்க்குக் காண்வேத வாக்கு'' என்பதனானும், ஆகமவுணர்ச்சியோரே சிவனியல்பு சிறிதறிவரென்பனை [2]''தத்த மாற்றங்க ணிறுவிய சமயிகள் பலருங் - கத்து புன்சொலை வினவின ரவன்செயல் காணார் - சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி - யுய்த்து ணர்த்திடு நீரரே யொருசிறி துணர்வார்'' என்பதனானும் அறிக. (உச)

**வானும் புகழ்புகலி மன்னன் றொடர்பொன்று**
**தேனுந் திதழியோன் சீரேடு—தானுங்**
**கரியாய் மொழியுங் கரியாய் விடாம**
**லெரியா ரழல்வீழ்ந் தெழுந்து.**

(இ - ள்.) வானும் புகழ்புகலி மன்னன் - தேவருந்துதிக்கும் திருப்புகலியில வதரித்த திருஞானசம்பந்த தேசிகரருளிய, தொடர்புஒன்று ஏடுதானும் - திருப்பதிக மெழுதிய திருவேடுதானும், எரிஆர் அழல் வீழ்ந்து கரிஆய்விடாமல் எழுந்து - எரிதலார்ந்த தீயில்விழுந்து கரியாகி நீறுபடாமல், பசுமையுற்று இனிதுவிளங்கி, தேன் உந்து இதழியோன் சீர் - மதுவையொழுக்கும் கொன்றைமாலிகையணிந்த பரமருடைய பரத்துவநிலையை, கரி ஆய் மொழியும் - தானே சான்றாக நின்று சாற்றும். எ-று.

திருமாலாதியபெருந்தேவர்களும் சிவபிரானுணர்த்தியவாறு நித்திய நைமித்திக காமியங்களால் இத்தேசிகரை வழிபட்டுய்ந்தாரென்பது சீகாழிமான்மியமென்பது விளக்குவார், 'வானும்புகழ்புகலி மன்னன்' என்றும், இன்பம்பயக்கும் இதழி பிரணவவடிவத்ததாகலின், அப்பிரணவப் பொருளாகிய தாம் அதனை உரிமையிற் புனைந்தனரென்பார், 'தேனுந்திதழியோன்' என்றும், இழிந்த ஏடுதானும் திருப்பதிக மெழுதப்பெற்றமையின் தெய்வீகமுடையதாயிற்றென்பார், 'தொடர்பொன்றேடு தானும்' என்றும், அமணர்களெண்ணாயிரவரும் தாம் ஏடிடுங்கால் அக்கினியைத் தம்பனஞ்செய்துகொள்ளுஞ் சிந்தனையாற் சாலமூட்டினரென்பார், 'எரியாரழல்' என்றும், அவர் தம்பனஞ்செய்து கொண்டு அதிற்றனித்தனியிட்ட ஏடுகளெல்லாம், கருகிச்சாம்பராகவும், தான் சிவபெருமானையே பொருளாகவுடைமையின், பசுமையுற்றுவிளங்கிற்றென்பார், 'வீழ்ந்தெழுந்து' என்றும், பரத்துவநிலையைத்தான் சான்றாகமலே சான்றாயுரைத்ததென்பார், அந்நயமுந்தோன்றக், 'கரியாய் விடாமற் கரியாய் மொழியும்' என்றும் கூறினார்.

கூறவே, ஏடுதானும் இத்தன்மையதாகுமேல், [1]''வல்லமணரொல்லைக் கழுவி லுலக்கவு, மெல்லையின் - மாதவத்தோர் வாழவும் வையகத்தோ ருய்யவுமேதக்க வானோர் வியப்பவு - மாதியாம் - வென்றிக் கலிகெடவும் வேகத்தொலி மிகவு மொன்றிச் சிவனடியாரோங்கவுந், துன்றிய - பன்னு தமிழ்ப்பதினா ருயிர நற்பனுவன் மன்னு புவியவர்க்கு வாய்ப்பவு, முன்னிய- சிந்தனையாற் சீரார் கவுணியர்க்கோர் சேயென்ன வந்தங்கவதரித்தவள்ள''லும், இவ்வள்ளலைவழிபடும் சம்பந்தசரணாலயர் முதலிய தகுதியுடைத்தொண்டரும் சிவ பரத்துவகாட்டிய நிலைமையைச் செப்பலாகுங்கொலென்றாராயிற்று.

உம்மைகள் முறையே உயர்வுசிறப்பும் இழிவுசிறப்புமாம். தொடர்பென்பது செய்யுட்கு, எழுத்து அசை சீர் தளை அடி தொடை என்பவற்றின் தொடர்புடைமையிற்போந்தபெயர். இது, ஈண்டு ''போகமார்த்தபூண்முலையாள்'' என்னும் திருநள்ளாற்றுத் திருப்பதிகத்தின் மேற்று. ஒன்று வினைத்தொகை. அன்றி, இரண்டனுருபும் பயனும் உடன்றொக்கதொகையாக்கித் தொடர்பொன்றையுடைய ஏடென்னலுமொன்று. சீர் - பரத்துவம். தான் கட்டுரைக்கண்வந்த அசை. கரி - சாட்சி. கரியாய் விடாமலென்பது இரட்டுற மொழிதலாய் நின்றது. ஆய்விடல் ஒரு சொன்னீர்மைத்து. எரி முதனிலைத் தொழிற்பெயர்.

1. இறைவனூற்பயன் - பதிசாதகவியல்-சூ0.
2. கந்தபுராணம் சூரனமைச்சியற்படலம்-கஉக.

1. திருஞானசம்பந்தர் திருவுலாமாலை.

எரியாரழலென்பதனை [1]"ஈட்டுவஞ்ச நெஞ்சரே யெழீஇநகர்ப் புறம்புபோய்க் - கிட்டிசைக்க ணோரழற் கிடங்குதொட் டெழுந்துவா - னீட்டுகோட ரங்குறைத்து நிறையவிட்டு நெட்டெரி - மூட்டினார்த மாதரார் வயிற்றுமிட்டு மூட்டினார்" என்பதனானும், அமணரிட்ட ஏடு எண்ணில வென்பதனை [2]"ஆறிணோ டிரண்டடுத்த வாயிரஞ் சமணரும் - வேறு வேறு தாமுயன்ற மந்திரங்கள் வேறுவே - றாறு நீர் சுரந்தவோலை யிற்பொறித் தொருங்குபோய்ச் - சீறிவா னிமிர்ந்தெழுந்த தீயின் வாய் நிரப்பினார்" என்பதனானும், பசுமையுற்றுவிளங்கியதை [3]"இட்ட வேட்டினிலெய்திய செந்தமிழ்ப் பதிக - மட்டுலாங் குழல் வனமுலை மலைமகள் பாகத் - தட்ட மூர்த்தியைப் பொருளென வுடைமையா லமர்ந்து - பட்டதீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே" என்பதனானும் அறிக.

**துடைவாழை மேன்மட வாரல்குற் பாம்பு தொட மயங்கி**
**நடைவாய் பிணமெனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை**
**யுடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த வொருவனுயி**
**ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே.**

(இ-ள்.) மடவார் துடை வாழைமேல் - மங்கையர்களுடைய தொடையென்னும் வாழைமீதுள்ள, அல்குல் பாம்பு தொட மயங்கி - நிதம்பமென்னும் அரவுதீண்ட நினைவழிந்து, நடை வாய் பிணம் எனப்பட்டார் - நடைவாய்ந்த பிணமென நவிலப்பட்டவரெல்லாம், குலை உடை வாழைமேல் நச்சுஉரகம் தீண்ட மாய்ந்த - தாறையுடைய வாழையிற்றங்கிய விடவரவுதீண்ட வீந்த, ஒருவன் உயிர் அடைவான் - மூத்ததிருநாவுக்கரசு முன்போலுயிர்பெறும்படி, அருள்புரியும் திருநாவுக்கரசினை பெறுகிலர் - திருவருள் பாலித்த திருநாவுக்கரசு தேவரைப்பூர்வம் வழிபடுதல் பெறாதவரே. எ-று.

பூர்வம் வழிபட்டிருப்பரேல், மாநிலத்துதித்து மங்கையர்மையலின் மூழ்கி மயங்காராகலின், இங்ஙனமுழல்வாரெல்லாம், வழிபடாதவரேயென்பார்; 'திருநாவுக்கரசினைப் பெறுகிலர்' என்றும், அவர் உயிரெய்தற்குரிய பயனெய்தாமையின் பிணத்தொடொப்பரேனும், பிறர்க்குப் பயன்பாடின்று, உண்டுடுத்துலாநிற்றலின், அதனின் வேற்றுமையுடையரென்பார், 'நடைவாய்பிணம்' என்றும் கூறினார். நடைவாய்பிணமென்றது [1]"உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார் - மரமக்க ளாதலே வேறு" என்றாங்கு, இழித்தற்கண்வந்தது.

வழிபடுதலென்பது சொல்லெச்சம். "பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் - புத்தேளிர் வாழு முலகு" என்னும் திருக்குறளிற்போல. வாய் - வினைத்தொகை. பெறுகிலரென்புழித்தேற்றேகாரம் விகாரத்தாற்றொக்கது. அன்னியயோகவியவச்சேதமென்னும் பிறிதினியைபுநீக்குதலாகிய விசேடணந் தந்து நச்சுரகமென்றார்; ஈண்டு உருவகிக்கப்படுமுரகம் நச்சிலதென்பதறிவித்தற்கு. எனவே, அவ்வரவம் நச்சுடையதேனும் அதுதீண்ட மடிந்தமகன் திருநாவுக்கரசினை வழிபடுதல்பெற்றான்; இவ்வல்குலரவம் நச்சிலதேனும் இதுதீண்டியவழி மடியாது மயங்கியுழல்வோர் பெறுகிலர் ஆகலின், பயனையிழப்பித்தலில் அதனினும் கொடிதாகிய இத்தகையமயலைக் கடத்தற்கும் வாகீசமூர்த்தியின் தியானமே மருந்தென்பதும் கொள்ள வைத்தவாறாயிற்று. பட்டார் பெறாரென்னலும் ஒன்று.

வழிபடுவோர் மாநிலத்துதித்துழலாரென்பதனை [2]"திருநாவுக்கரசடியவர்நாடற் கதிநிதி தெளிதேனொத்தினியசொல் மடவாருற்பசி முதல் - வருவானத்தரிவையர் நடமாடிச் சில சில வசியாகச் சொலுமவைதுகளாகக் கருதிமெய் - யுருஞானத் திரண்மன முருகாநெக்கழுது கண்ணுழவாரப் படைகையி லுடையான்வைத்

1. திருவிளையாடல் சமணரைக்கழுவேற்றிய படலம்-௩௪.
2. ஷை ௩௭.
3. பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம்-௭௮௬.

1. திருக்குறள்-௬௦௦.
2. திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை-௨.

தனதமிழ் - குருவாகக் கொடுசிவ வடி சூடத் திரிபவர் குறுகார்புக் கிடர்படு குடர்யோனிக் குழியிலே' என்பதனுனும், அம்மயலைக்கடத்தற்கு மருந்தாதலை, [1]"குழிந்துசுழி பெறுநாபியின் கொண்மயிர் நிறையார் குரும்பைமுலை யிடையே செலுந்தகைநன் மடவா - ரழிந்தபெ'ாசியதிலே கிடந்தரவு பகனீ யனைந்தயருமதுநீ யறிந்திலைகொன் மனனே - கழிந்தகழி கிடுநா ளினங்கிதய நெகவே கசிந்திதய மெழுநா றரும்பதிகநிதியே-பொழிந்தருளு திருநா வினெங்களர சினையே புரிந்துநினை யிதுவே மருந்துபிறிதலையே" என்பதனுனும் அறிக. இவ்வுதாரணத்திருப்பாடலில் ஏமெழுநா றரும்பதிகமென் றிருக்க வேண்டியபாடம் பிறழ்ந்திருக்கின்றது. சிவானுபூதிமான்கள் திருவாக்கை இஃதித் தன்மைத்தெனத் திருத்தவல்லார் யாவர்? (உசு).

அரசன் பரிமேல் வரநெடுநல்
யானையெருத்தத் தமர்ந்துபோய்
வரதன் கயிலை மலையடைந்த
மணியே மணிநீ ரிடுபசும்பொன்
றிரை சங் கெரியுங் குளத்துவரச்
செங்கற் செம்பொனுப்பாடும்
பரிசின் றெனக்குன் செம்பவளத்
திருவாய்மலர்ந்துபகர்வாயே.

(இ - ள்.) அரசன் பரிமேல் வர- (உயிர்த்துணைவராகிய) சேரமான்பெருமாணுயனர் குதிரையிலிவர்ந்து உடன் செல்ல, நெடுநல் யானை எருத்தத்து அமர்ந்துபோய் - உன்னதமுதலிய உத்தம விலக்கணங்களமைந்த வெள்ளையானையின் பிடரியில் விளங்கிச்சென்று, வரதன் கயிலை மலை அடைந்த மணியே - சிவபிரானமரும் திருக்கைலைவரையை யெய்திய செம்மணிபோல்பவரே!, மணி நீர் இடு பசும்பொன்திரை சங்கு எறியும் குளத்து வர - (முதுகுன்றத்திலே) மணிமுத்தநதியிலிடப்பட்ட பன்னீராயிரம் பசும்பொன்னும் அலைகள் சங்குகளை யொதுக்கும் திருவாரூர்க்குளத்தில் அணுகவும், செங்கல் செம்பொன் ஆ பாடும்பரிசு -(திருப்புகலூரிலே திருமுடிவைத்துத்துயிலப்பெற்ற) செங்கற்கள் பலவும் . செம்பொனுகவும் பாடுந்திறத்தை, உன் செம்பவளம் திருவாய் மலர்ந்து இன்று எனக்கு பகர்வாய் - தேவரீருடைய செவ்வியபவளம்போலும் திருவாயைத்திறந்து இன்று சிறியேனுக்குச் செப்புவீராக. எ-று.

மலவாதனையற்ற்ரும் பூமியில் மானுடவுருக்கொண்டு சிலபகல்வதிவரேல், அவ்வாதனைவந்து சேருதலின், அவ்வுருவை ஞானுக்கினியாற்றகித்து, விசுத்தவுருப்பெற்றுச்சேறல் மரபாக, இவ்வாளுடைய நம்பிகள், தம்முருவம் இயற்கையே விசுத்தவுருவாதல்பற்றி, அவ்வுருவோடு திருக்கைலையை அடைந்தாராகலின் மாசிலாமணியேயென்பார், மாசறுதலாதி அடைகொடாது, 'மணியே' என்றும் தூரத்துள்ளதைச் சமீபத்ததைத்தலாகிய ஆகருஷணமும், இவர்பால் அருள்விளையாட்டாக நிகழ்ந்ததென்பார், 'மணிநீரிடும் பசும்பொன்குளத்துவர' என்றும், இரும்பு முதலிய உலோகங்களையேயன்றிச் செங்கல்லைப்பொன்னுக்கல், எத்தகைய வாதிகளுக்கும் இயலாதாக, அதுவும் இவர் மாட்டு நிகழ்ந்ததென்பார் "செங்கற் செம்பொனு" என்றும், இவை முயலுதற்றொழிலின்றிப் பாடுமளவானே முடிந்தவென்பார், 'பாடும்' என்றும், செம்மொழி பயிலும் தேவரீர் திருவாக்கினன்றிப் பிறர்பாற்கேட்டறிதலிற் பெட்பிலேனென்பார், 'உன்செம்பவளத்திருவாய்மலர்ந்து' என்றும், அறிந்து வைத்தலின்றி இயற்றுதலில் ஆவலுடையனல்லேனென்பார், பரிசு சித்திக்கப்பகர்வாயென்னுது, 'பரிசுபகர்வாய்' என்றும் கூறினர்.

கூறவே, இவர் எல்லாம்வல்ல சித்தரியல்பும் உடையரென்பது குறிப்பித்தவாறு. முறைவேண்டுவாரும் குறைவேண்டுவாருமாகிய திருமாலாதியர்க்கும், முனிவர்க்கும், வேண்டும்வரங்களும் ஞானுபதேசமும்பாலித்து, விநாயகக் கடவுள் சுப்பிரமணியக்கடவுள் திருநந்திதேவர் முதலியோர் புடைசூழ, அம்பிகை பாகராய்ச், சிவபெருமான் திருக்கைலையிற் றிருவோலக்கங்கொண்டு, காட்சிக்கெளியராய் வீற்றிருக்கின்றனரென்பது, வேத சிவாகமங்களின் துணிபாகலின், வரத

---

1. ஷை-நு.

னென்றார். வரதன் - வரத்தைக்கொடுப்பவன். ஆகவென்பது ஈறு குறைந்தது.

வரதனாதலை [1]"எழுதரும் பனுவலாகம மேனைக் கலைகளு மிருடிகண் முதலா - முழுவலன் புடையார்க் கருவுளந் திருமாலூற்றுதேந் தாமரைக் கிழவன் - முழுதுடல் விழிக்குங் கடவுளா தியர்க்கு முன்னிய வரங்கொடுத்திடவுஞ் - செழு மணிக் களத்துத் தெய்வதக் குரிசி றேவியோ டாங்கிருந் ததுவே" என்பதனாலும், மலவாதனை வந்துசேருதலை [2]"மலமகல் பவரும் புவிமீதே மானுட வடிவந் தனை யெய்திச் - சிலபக லெனினும் பயில் காலைச் சேர்தரு மலவாதனையென்றே-பல மலர் கமழுந் தடமீதிற் பரவரு ஞான வனல்சேர்வித் திலதென நீடுஞ் சடம்வேவித் திவ்வுட லிந்தே மிந்நாளில்" என்பதனாலும், மானுடவுருவோடு திருக்கைலையடைந்தமையை [3]"ஞான வவ் வாரூ ரரசரை யல்லது நாமறிய்யா - மானவ வாக்கை யொடும்புக் கவரை வளரொளிப் பூண்-வானவ ராலு மருவற் கரிய வடகயிலைக் - கோனவன் கோயிற் பெருந்தவத் தோர்தங்கள் கூட்டத்திலே" என்பதனாலும் அறிக. (உஎ)

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
யன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத வாலே
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்" எனுஞ்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே.

(இ-ள்.) அன்னம் ஆடும் அகன் துறை பொய்கை - அன்னங் கள்விளையாடும் அகன்றதுறைகளார்ந்த திருக்குளங்கள் செறிந்த, வாதவூர் அன்ப - திருவாதவூரிலவதரித்த அன்பரே! பகிர் மதி தவழும் பவளம் வார் சடையோன் - இளம்பிறையூரும் பவளநிகர்த்தநெடுஞ் சடைகளையுடைய இறைவரது, பேரருள் பெற்றும் பெறாரின் அழுங்கி - தெய்வத் திருவருளைப்பெற்றிருந்தும், அதனைப் பெறாதார்போன்றுவருந்தி, நெஞ்சம் நெக்கு உருகி நீயே நிற்பை - மனநெகிழ்ச்சியுற்றுருகித் தேவரீரே வாடிநிற்கின்றீர்; பேயேனே பெறாது - பேய்த்தன்மையுடையயானே அவ்வருளைப்பெறாதிருந்தும், பெற்றார்போல களிகூர்ந்து - பெற்றவர்போன்று பெரிதும் மகிழ்ச்சியிற்றிளைத்து, உள்ளம் கவலை தீர்ந்தேன் ஆதலால் - அகத்தில் அயர்வையொழிந்தேன்; ஆகையால், தெய்வப்புலமை திருவள்ளுவர் - தெய்வப்புலமையையுடைய திருவள்ளுவநாயனார், நன்று அறிவாரில் கயவர் திருவுடையர் - தமக்கு உறுதியாவன அறிவாரின் அவையறியாதகீழ்மக்கள் நன்மையுடையர்; நெஞ்சத்து அவலம் இலர் எனும்-அவர்போல அவைகாரணமாகத் தந்நெஞ்சத்தின்கண் கவலையிலராகலான் என்றருளிய, செஞ்சொல் பொருளின் தேற்று அறிந்தேன் - திருக்குறளின் பொருட்டெளிவைத் தேர்ந்துணர்ந்தேன். எ-று.

சந்திரன் தன்கலைக்குறைவானுணிமெல்லப் புடைபெயர்தலுடையனென்பார், 'பகிர்மதிதவழும்' என்றும், துகிர்க்கொடிபோலும் நீட்சியும் நிறமும் துன்னியவென்பார், 'பவளவார்சடை' என்றும், இவர்பெற்றது பசுத்துவநீக்கிப் பதித்துவம் பயக்கும் தெய்வத்திருவருளென்பார், 'பேரருள்' என்றும், ஆட்பாலவர்க்கருளுந் திறம் அளவின்மைநோக்கி, அத்தகையவருளை மேன்மேற்பெற அவாவல், அருட்பேறுடையார்க்கியல்பாகலின், இவர்தாமும், அங்ஙனம் அவாவிநின்றனரென்பார், 'பெற்றும்பெறாரினழுங்கிநிற்பை' என்றும், அமைதியின்றிச்சலிக்கும் சித்தத்தனாகலின், அவ்வருளின்றிறம் இத்தகையவெனவறியாது உண்டுடுத்து, மகிழ்ந்து உழலாநின்றேனென்பார், 'பேயேன்பெறாதுபெற்றார்போலக் கவலைதீர்ந்தேன்'

1. திருத்தணிகைப்புராணம் அகத்தியனருள்பெறுபடலம்-௬௭0.

2. திருவாதவூரர்புராணம் திருவம்பலச்சருக்கம்-௨0.

3. திருத்தொண்டர் திருவந்தாதி-அகூ.

என்றும், திருவள்ளுவநாயனுர் தெய்வப் புலமையராகலின், அவரருளிய திருக்குறள் களின் சொற்பொருளன்றி, அப்பொருட் டெளிவறிதல், தெய்வப் புலமையர்க்கே உரியதாக, ஈண்டு உதாகரித்த திருக்குற ளின் பொருட்டெளிவைத் தேவரீருக்கும் சிறியேனுக்குமுள்ள அநுபவத்தை யொட்டி ஒருவாறறிந்தேனென்பார், 'பொருளின்றேற்றறிந்தேன்' என்றும் கூறி ஞர்.

உம்மை உயர்வுசிறப்பு. இன் உவம வுருபு. ஏகாரங்களுள் முந்திய விரண்டும், முறையே உயர்வினும் இழிவினும் வந்த தேற்றம். ஏனையவை அசைகள். தீர்ந் தேனேயென்பதின் ஏகாரம் பேயேனென் புழிக்கூட்டப்பட்டது. செஞ்சொல் அடை யடுத்தகருவியாகுபெயர். தேற்றமென்பது ஈறுகுறைந்தது. தேற்றமாவன-இன்மை மறுமைவீடுகட்குரிய உறுதிப்பொருள் களாகிய புகழறஞானங்களின் இயல்பறி வார் அவற்றையீட்டாநின்றே மிக ஈட்டப் பெறுகின்றிலேமென்றும், ஈட்டுகின்ற இவைதமக்கு இடையூறுவருங்கொலென் றும், இவற்றின் மறுதலையாய பழிபாவம் அறியாமையென்பவற்றுள் யாதுவினையு மோவென்றும், இவ்வாற்ருற் கவலையெய் துவர்; கயவர் அப்புகழ்முதலிய வொழித் துப் பழிமுதலிய ஈட்டாநின்றும், யாதுங் கவலையெய்திலராகலான், இவர் திருவு டையரென்று குறிப்பாலிகழ்ந்தனரெனக் கோடல் முதலியவை. பேயேனென்ப தற்கு, தேவரீரது தெரிசனவுத்தேசமாத் திரத்தானே செல்வேன் செல்வேனென்று செல்லும் ஆசைப்பேயும், தெரிசித்த வழிச் செல்வேனென்று செல்லுதலின்றிச் செல் லும் ஆணவப்பேயும், தெரிசித்தும், விரோதமின்றிச் சின்னுளிருந்து செல்வே னென்னும் பிராரத்தவினைப்பேயும், இத னேடு யானுஞ்செல்வேனென்று இரந்து நிற்கும் மாயைப்பேயுமாகிய இவற்ருற் பீடிக்கப்பட்டுள்ளேனெனப் பொருள் கோடலும் ஒன்று. அரும்பொருளடங் கினும், ஆசிரிய வசனமில்வழிச் சிறவாதாக லின், இத்தெய்வத் திருக்குறளைப்பொன் போற் பொதிந்து வைத்தாரென்க,

பேரருள்பெற்றமையை [1]"சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணை நின் றிருப்பாதப் போதுக் காக்கி - வந்த னையுமம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணி வார்த்தைக் காக்கியையும் புலன்களார - வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத் - தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித் தனிச்சுடரே யிரண்டு மிலித் தனிய னேற்கே" எனவும், [2]"தந்த துன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுர - ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே னியாதுநீ பெற்றதொன் றென்பாற் - சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான் றிருப் பெருந்துறையுறை சிவனே - யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா யானிதற் கிலனொர்கைம் மாறே" எனவும், பெறுரின மூங்கினமையை [3]"யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென்னன்பும்பொய் - யானல் வினையே னழுதா லுன்னைப்பெற லாமே - தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு - மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே" எனவும், [4]"வன் பராய்முரு டொக்குமென்சிந்தை மரக்கணென்செவி யிரும்பினும்வலிது" எனவும், இவ்வாசிரியர் ஆங்காங்கு விளக் கிய அருட்டிருவாக்குக்களான் அறிக.

(உஅ)

**தேனே றலர்சூடிச் சில்பலிக்சென் றூர்திரியு மானேறி யாண்டுப்பெற் ருன்கொனீ-தானேறும் வெள்ளைமணி யென்று வினவுவோம் வாங்கியவப் பிள்ளையையாங் காணப் பெறின்.**

(இ - ள்.) தேன் ஏறு அலர் சூடி - வண்டுகள்செறியும் மலர்களையணிந்து, சில் பலிக்கு என்று ஊர் திரியும் ஆனேறி- சிறுபலியின் பொருட்டென முனிவர் பத்தினிகளின் இருக்கைதோறும் திரிந்த இடபத்திவர்ந்தபெருமான், நீ ஏறும் வெள்ளைமணி - தேவரீர் ஊரும் வெண் முத்துச்சிவிகையை, யாண்டு பெற்ருன்

1. திருவாசகம் திருச்சதகம்—உரு.
2. ஷை கோயிற்றிருப்பதிகம்-௧௦.
3. ஷை திருச்சதகம்-௯௦.
4. ஷை செத்திலாப்பத்து-௭,

என்று வினவுவோம் - யாங்குப்பெற்று உமக்கீந்தாரென்று கேட்போம்; வாங்கிய அப்பிள்ளையை யாம் காணப் பெறின் - அச்சிவிகையையேற்ற அத்திருஞானசம் பந்தப்பிள்ளையாரை யாம் தரிசிக்கப்பெறு வோமாயின். எ-று.

தேன்விழையும் மலராதியவற்றன்றித் தேவர்மனிதராதியர்விழையும் அணிமுத லியவற்றில் ஆர்வமிலரென்பார், 'தேனே றலர்சூடி' என்றும், வேண்டியவுணவை ஒருமனையிற்பெறும் பெரும்பலியன்றிப் பலமனையிற்பெறும் சிறுபலியேவிழைந்த தென்பார், 'சில்பலி' என்றும், அது தம் பொருட்டன்று அடியவரனுட்டித்து உய் தற்பொருட்டென்பார், பலிக்கென்னுது, 'பலிக்கென்று' என்றும், தேவதாருவனத் துள்ள நாற்பத்தெண்ணுயிர முனிவரும் (பிரபஞ்சம் அநாதிநித்தியம்; சிவன் முத லாயினோரெல்லாம் அநித்தியர்; வேதம் ஒருவராற்செய்யப்பட்டதன்றி நித்தியமா யுள்ளது. அதில் வகுத்த இட்டியாதிகளை யியற்றின் அவையே துறக்க முதலிய பயன்களைப்பயக்கும்; அப்பயனை நுகர்விப் பான் ஆன்மாக்களுக்குவேருய் இறைவ னொருவனில்லை) என்று கூறும் மீமாஞ்சை நூலே உண்மை நூலெனக்கொண்டு, சுவதந்திரராகிய சிவபெருமானை வழிபடுத லொழிந்து, பரதந்திரராகிய தங்களைச் சுவதந்திரராகத் துணிந்து, இட்டியாதி களையியற்றி, ஒழுகாநிற்ப; அவர்மனைவி யரும், அவர்கற்பித்த அக்கொள்கைவழி நின்று, கற்பிற்சிறந்து, தேவமங்கையரை அவமதித்தொழுகலின், அவ்வழிப்பட்டு உலகம் அவலமுருதபடி, அவரியற்றும் இட்டியாதிகள் பயன்பாடின்மையை விளக்கி அவர்மயக்கவுணர்வையொழித்து ஆட்கொண்டருளுதற்பொருட்டே, அச்சு தக்கடவுளை அவர்மயங்க மோகினியுருக் கொண்டுசெல்ல ஏவி, தாம் மங்கையர் மயங்கப் பிக்ஷாடனமூர்த்தியாய்ச் சென்ரு ராகலின், அவரிருக்கு 'இடமுற்றும் சரித் தனரென்பார், 'ஊர்திரியும்' என்றும், இட பத்திவர்ந்து பலிக்கெழுந்தருளினரென்ப தும் புராணசித்தமென்பார், 'ஆனேறி' என்றும், கொண்டகோலத்தால் முத்துச் சிவிகையீந்தவரெனக் குறிக்கப்படாராயி னும், எல்லாமுடையராகலின் அவரே அருள்விளையாட்டான் ஈந்தனர் போலு மென்பார், 'யாண்டுப்பெற்ருன்' என்றும், மேகமுதலியவையினுமுத்தம் செம்மையா தியநிறத்தவாகலின் அவற்றுனன்று; சங் கினும்வெண்முத்தாற் சமைந்ததென்பார், 'நீயேறும்வெள்ளைமணி' என்றும், பிறராற் காணுதற்கரிய பெருந்தகையரென்பார், 'காணப்பெறின்' என்றும், பெற்ருல், சிவிகை வந்தமைகேட்டுத்தெளியலாமென் பார், 'வினவுவோம்' என்றும் கூறினர்.

கூறவே, அப்பிள்ளை [1]"ஞாலத் தின ரறிய மன்னுநனி பள்ளியது பாலை தனை நெய்தலாக்கியுங், காலத்து - நீரெதிர்ந்து சென்று நெருப்பிற் குளிர்படைத்தும் பாரெதிர்ந்த பல்விடங்க டீர்த்துமுன் - னேரெழுந்த-யாழை முரித்து மிருங்கதவந் தானடைத்துஞ் சூழ்புனலிலோடத் தொழில்புரிந்துந், தாழ்பொழிற் கொங்கிற் பனிநோய்ப் பரிசனத்தைத் தீர்ப்பித்துந் துங்கப் புரிசைத் தொகுமிழலை, யங்கதனி னித்தன் செழுங்காசு கொண்டு நிவா நெல்வாயின் முத்துச் சிவிகை முதல் கொண்டு, மத்தகுசீர்-மாயிரு ஞாலத்து மன்னு வடுதுறைபுக் காயிரஞ் செம்பொ னதுகொண்டு, மாய்வரிய - மாண்பு திகழ் பெருமான் மன்னுதிரு வோத்தூர்புக் காண்பனைகள் பெண்பனைகளாக்கியும், பாண்பரிசிற் - கைப்பாணி யொற்றிக்கா ழிக்கோலக் காவிற்பொற் சப்பாணி கொண்டு தராதலத்து - ளெப்போது நீக் கரிய வின்பத்திராக மிருக்குக்குற ளுைக் கரிய பாசுரம்பல்பத்தோடு, மாக்கரிய - யாழ்மூரி சக்கரமாற் றீரடி முக்காலும் பாழிமையாற் பாரகத்தோர் தாமுய்ய, ஊழி - யுரைப்பமரும் பல்புகழா லோங்க வுமை கோனைத் திருப்பதிகம் பாடவல்ல சேய்" ஆகலின், காணப்பெறுவது எளி தன்றென்பது தோன்றப் பெறினென்ரு ரென்பது.

சில் சிறுமை. பலிக்கென்றென்பது உள்ளபடி பலிக்குச்சென்றதன்றென்பதூஉம், யாண்டுப் பெற்ருனென்பது சொல் லாற்றலான் யாண்டும் பெற்றிலனென் பதூஉம் படநின்றன.

(தொடரும்)

1. திருஞானசம்பந்தர் திருவுலாமாலை.

# நம்மாழ்வார் திருப்பாசுரம்

என்ன தாவி மேலையாய் ஏர்கொள் ஏழ்உலகமும்
துன்னி முற்று மாகிநின்ற சோதி ஞான மூர்த்தியாய்
உன்ன தென்ன தாவியும் என்ன துன்ன தாவியும்
இன்ன வண்ண மேநின்றாய் என்று ரைக்க வல்லனே.

[என் உயிர்மேல் அன்புடையவனே! அழகான ஏழு உலகங்களிலும் பரந்து நிறைந்து எல்லாப் பொருள்களுமாகி நின்ற சோதிமயமான ஞானவடிவனே! என் உயிர் உன்னுடையது; உன் உயிர் என்னுடையது; இன்ன தன்மையிலே நின்றாய் என்று சொல்லவல்லேனோ?

# தாயுமான சுவாமிகள் பாடல்

தன்னை யொருவர்க் கறிரிவதாய்த்
　　தானே தானா யெங்குநிறைந்
துன்னற் கரிய பரவெளியா
　　யுலவா வமுதா யொளிவிளக்கா
யென்னுட் கலந்தா யானறியா
　　திருந்தா யிறைவா வினியேனும்
நின்னைப் பெறுமா றெனக்கருளா
　　நிலையைக் கொடுக்க நினையாயோ.

[தன்னை எவரும் தெரிந்து கொள்வதற்கு முடியாமலும், தானே தனியனாகவும், எங்கும் விளக்க முற்று எண்ணுதற்கரிய பரவெளியாகவும், தேவாமிர்தமாகவும், ஒளி விளக்காகவும், என் உள்ளத்தில் பொருந்தியும் உள்ள இறைவனே! இனியாவது உன்னையடைந்துய்யுமாறு அடியேனுக்குப் பேரருள் புரியத் திருவுளம் கொள்வாயோ!]

## அடியவர் திருநட்சத்திரங்கள்

பிலவ—ஐப்பசி

| சைவம் | வைணவம் |
|---|---|
| 8உ—திருமூல நாயனார் | 4உ—பேயாழ்வார் |
| 9உ—நின்றசீர்நெடுமாற நாயனார் | 29உ—பொய்கையாழ்வார் |
| 10உ—இடங்கழி நாயனார் | 30உ—பூதத்தாழ்வார் |
| 15உ—சத்தி நாயனார் | |
| 24உ—பூசலார் நாயனார் | |
| 26உ—ஐயடிகள் காடவர்கோன் நாயனார் | |



செம்பியன்மாதேவி கோயில் விமானம்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.